'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 3 | மாசி தி. பி. 1996 (1965 பிப்ரவரி) | ஓலை 1

மாணவர்களின் 'பேயாட்டம்'!

—:*:—

03/m211,N63
K5

தமிழக முதலமைச்சர் திருப்பெருந் திரு. பக்தவத்சலனார் திருவாய் மலர்ந்தருளிய சொல் இது. அண்மையில் நடைபெற்ற மாணவர்களின் தமிழ்உரிமை காப்புப் போராட்டமே அமைச்சரின் கண்களுக்குப் பேயாட்டமாகப் பட்டிருக்கின்றது. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது எத்துணை உண்மை! மாணவர்களின் போராட்ட வலிமை தில்லியின் செவிகட்கு எட்டுதற்கு முன்பே அவர்தம் முதலடியாராகிய திரு. பக்தவத்சலத்தின் திருவாய் இதனை மலர்ந்தருளியது என்றால், அடியார்க் கிருக்கும் மெய்யடிமைத் தனத்தில் எத்துணையளவு நன்றியறிவு இருந்திருக்கும் என்று ஆராயவேண்டியதில்லை. அமைச்சரின் கூற்றுப்படி மாணவர்களின்உள்ளார்ந்த எழுச்சி உண்மையிலேயே பேயாட்டந்தான் என்று கருதப்பட்டால், அந்தப்பேய் வேறெந்தப் பேயுமன்று இத்திப்பேயே என்றும், அதனைத் தமிழ்நாட்டிற்குள் வரவிட்டவர்களில் தலைமையாக இருந்தவர் அடியார் திரு. பக்தவத்சலமே என்றும் நாம் வலித்துக் கூற முன்வருகின்றோம்.

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

செந்தமிழ் மக்கள் செய்த கரிசு(பாவங்)களெல்லாம் ஒன்றாய்க் கூடிப்பிறந்த பக்தவத்சலம் போன்ற திருமேனிகளுக்கு இனிமேல் சொல்லப் போவதும் எச்சரிக்க வேண்டுவதும் ஒன்றுமில்லை. அவர்தம் மரத்துப்போன மண்டைகளில் இனி ஏற்ற வேண்டியதும் ஒன்றுமில்லை. தமிழகத்தில் உள்ள நடுநிலைத் தமிழர்களின் உள்ளார்ந்த நல்லுணர்வு பலவாறான சொற்களால் பலரால் வக்கணையுடன் கூறப்பெறலாம். இந்நாட்டில் தூங்கிக்கிடந்த தமிழ்ன் உள்ளங்களைத் தட்டியெழுப்பித் தன்மான உணர்வுக்கு வித்திட்ட பெரியார் திரு இராமசாமியார் முதல், அண்மையில் பேராயக் கட்சியின் முதல் எதிரியாக இருந்து கடைசி உறுப்பினருந் தொண்டருமான திரு. சம்பத்து ஈறாக உள்ள யாவரும் இன்றெழுந்துள்ள மொழியுரிமைப் போராட்டத்தைப் பற்றிப் பலவாறாகக் கருத்தறிவிக்கலாம். ஆனால் அக்கருத்துகள் முற்றும் காலங் கடந்து கூறப்பெறுபவையாகும்; அவர்தம் அறிவுச் (!) சொற்கள் இங்கு யார்க்கும் வேண்டாதவை. உண்மையாகவோ பொய்யாகவோ பெரியார் தூண்டிய தன்மான உணர்வுத் தீ இன்றே கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியுள்ளது. இத்தீயின் முழு ஆற்றலையும் விளைவையும் இன்றுள்ள தலைவர்களில் எவராலும் கணக்கிட்டுக் கூறவியலாது. இனி இவர்களின் பேச்சையும் கருத்தையும் இங்குள்ள நடுநிலைமையாளர்கள் எவரும் கேட்கப் போவதில்லை. தென்மொழியின் கடைசி ஆசிரியவுரையாகவும் இதைக் கருதிக் கொள்ளலாம். அதைப் பற்றி யாரும் அஞ்சப் போவதில்லை. இந்த ஆட்சியாளரின் கையிலுள்ள வேட்டெஃகத்தின் இறுதிக குண்டு வரை செலவிடப் பெற்றாலும் சரியே; தமிழகத்தில் அடுத்த 'பிரஞ்சுப் புரட்சி' நடந்தே தீரும். உரிமைப் போர் ஆடத்தொடங்கிவிட்டது. பேயை நாட்டுக்குள் விட்டு விட்டு, வேப்பிலைப் பாடம் போட்டுக் கொண்டிருக்கும் ஆளுநர்களுக்கு இனி எதனையும் சொல்லப் போவதில்லை. இனிக் கூறவேண்டியதெல்லாம் மக்களுக்கே. 13 ஏ 57

தங்களின் விடாப்பிடிக்கு எத்துணை வலிவிருப்பதாக அமைச்சர்கள் சொல்லிக் கொள்கின்றனரோ, அதற்கு மேல் வலிவானது மக்களமைப்பு. வெறும் பணத்தாலும் அதிகாரத்தாலும் ஒப்போலைகளை மிரட்டிப் பெற்றுப் பதவி மகுடம் சூட்டிக் கொண்ட அமைச்சர்கள் இன்றைக்கிருக்கும் அரசியல் சூழ்நிலைகளால் என்றென்றைக்கும் தமிழக மண்ணில் வேரூன்றிய மொழியுரிமையைக் கல்லியெறிவதென்பது, கடலை வற்றடிக்கும் அறிவில்லாச் செயலே என்பதை இனியேனும் உணர்ந்து கொள்ளட்டும். சட்டமும், ஆட்சியும் மக்களின் உரிமை, மானம் இவற்றை விட அத்தனைப் பெரியன அல்ல; ஆற்றல் பொருந்தியனவும் அல்ல; காமராசரின் மூளையும், பக்தவத்சலத்தின் நரித்தன மையும், சாத்திரியாரின் விரகாண்மையும், முரட்டுத்

தனமான காவலர்தம் கைகளிலுள்ள வெடிகுண்டுகளாலும் விலங்காலும் காப்பாற்றப் படவேண்டியனவாக உள்ளவே அன்றி, மக்களின் நாணயத்தாலும் நம்பிக்கையாலும் காப்பாற்றப் பட வேண்டியனவாக என்றும் இல்லை. இந்த ஒரு நிலையே மக்கள் புரட்சிக்கு வித்து. மாணவர்கள் ஆளும் கட்சிக்குத் துணையாகவும், காப்பாகவும் மூண்டெழுந்தால் அது நாட்டுப் பற்று; ஆனால் அவர்தம் தாய்மொழி உரிமையைக் காக்கவும், அதற்கு வருந்தீங்கைத் துடைக்கவும் மூண்டெழுந்தால் அது பேயாட்டம் என்று குறுக்குப்பொருள் கூறும் அரசியல் நரிகளின் வாலாட்டம் இனிமேல் ஒடுக்கப் பெறும். மொழியுரிமையும், அறிவும் பண்பாடும் சான்ற இன வளர்ச்சியும் அத்துணை வலிமை படைத்தன. வெறும் அரசியல் தில்லு மல்லுகளால் உருவாவதன்று உரிமைக் கிளர்ச்சி. விடாப்பிடித்தனமாகவும் முரட்டுத்தனமாகவும் தமிழகத்தில் இந்தியை நுழைக்கும் வடவர்களின் குரங்குத்தனமும், அவர்தமக்கு மடிவிரிக்கும் இங்குள்ள அமைச்சர்களின் நரித்தனமும் இனி இந்நாட்டில் செல்லாக் காசுகள். உண்மையான அரசியல் வாழ்வும் குமுகாய வாழ்வும் அமைக்கப்படவேண்டிய மறுமலர்ச்சி எண்ணம் உலகெங்கணும் முகத்துக் கிளைத்து வேரோடிக் கொண்டிருக்கின்றது. இனிப் போலித்தனமான நாட்டுப் பற்றும், அரசியல் வல்லான்மைகளும் தீயிற் சருகெனப் பொசுக்கப் பெறும். பகடைக் காய்களாக இருந்த மக்கள் உண்மை அரசியலைப் புரிந்து கொள்ள முந்திவிட்டனர் என்பதையே இக்கிளர்ச்சிகள் காட்டுகின்றன. இன்றைய மாணவர்களே எதிர்கால மக்களும் தலைவர்களும் ஆவார்கள் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை அவர்கள் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்து தீப்பற்றி எரிந்து கொண்டுள்ள உரிமை உணர்வு. ஓரினத்தின் உரிமை பிறிதோரினத்தின் உரிமையால் காக்கப் பெறுவதே உலக அமைதிக்கு வித்து; தாக்கப் பெறுவதே புரட்சிக்கு வித்து. எந்த நன்மையின் பொருட்டும் ஓரினத்தின் உரிமையைப் புதைத்த சாக்குழிமேல் இன்னோர் இனத்தின் உரிமை மாளிகை எழுப்புவதற்கு எதிர்காலம் இடந்தராது. அதற்கு அண்மையிற் கிளர்ந்தெழுந்த மாணவர் படையும் அவர்தம் கிளர்ச்சியுமே சான்று.

எண்ணத் தெரியாத மக்கள் எண்ணவும் தங்களுக்கான உரிமையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் ஆற்றல் பெற்றவர்களாக ஆகிவரும் இந்நேரத்தில், பக்தவத்சலம் போன்ற பின்தங்கிகள் எதனையும் செய்து விடமுடியாது. அவ்வாறு அவ்வுரிமைக்கு அவர்கள் தடையாக நிற்பின், எதிர்காலத்தின் உலக உரிமை வரலாற்றில் இத்தகையோர் இழிவுருவங்களாக நிறுத்தப்பெறுவர் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

மொழியுரிமை என்பது என்ன என்பதை இந்நிகழ்ச்சிகளின் பின்னுவது இத்தகையார் புரிந்து கொள்ளட்டும். கிளிக்குப் பேச்சும், குயிலுக்குக் கூவலும், மயிலுக்கு அகவலும், காக்கைக்குக் கரைவும், கரடிக்கு உறுமலும், யானைக்குப் பிளிறலும், அரிமாவுக்கு முழக்கமும் எவ்வாறு இயல்பானவையோ, அவ்வாறு தமிழர்க்குத் தமிழும், வடவர்க்கு வடமொழியும், ஆங்கிலேயர்க்கு ஆங்கிலமும், உருசியர்க்கு உருசியமும் இயல்பானவை. பகுத்தறிவற்ற அப்பறவைகளும் விலங்குகளும் அவையவையாக இன்னும் உள்ளன எனின், அவையவற்றிற்கு இயல்பாயமைந்த மொழிகளாலேயே! கிளிவிரும்பின் கூவலாம்; ஆனல் குயில் கிளியைக் கூவத்தான் வேண்டும் என்று கட்டாயப் படுத்தமுடியாது. நாம் விரும்பின் இந்தி மட்டுமன்று உருசியம் கூடப் பயிலலாம். ஆனல் இந்தியும் உருசியமும் படித்துத்தான் தீரவேண்டும் என்பது கட்டாயமில்லை. அறிவற்ற பேதை கூட இயற்கையான இவ்வுண்மையை உணர்வான். ஆனல் பேதையுட் பேதைகளான பக்தவத்சலங்கள் போன்ருர் பிறர் எடுத்துக் கூறியும் உணராமல் இருப்பது வியப்பினும் வியப்பே!

தமிழகத்தின் உரிமை முரசம் கொட்டப்பட்டு விட்டது. மொழியடிப்படையில் தமிழினம் தன் முழுஉரிமைக்கும் போராடத் தொடங்கிவிட்டது. இந்தியாவைப் பொறுத்த அளவில் இம்முழக்கமே முதல் முழக்கமாகும்! காந்தத் துண்டால் இழுபடும் இரும்புத் துகள்களென, உள்ளத்தே உந்தப்பெற்ற மொழியுரிமைக்கு மாணவர்களும், தமிழன்பர்களும் வயப்பட்டு நிற்கின்றனர். அவர்தம் முகங்களில் கொந்தளிக்கும் உணர்வுத் தீயின் கொதி குழம்பு, அவர்தம் போக்கைத் தடுத்து நிற்பார் முகங்களில் இனிப் பீச்சியடிக்கட்டும்! அவர்தம் முரசெறி முழக்கம் விரவிய கல்வி நாக்குகள், மக்களே அறைகூவி அழைக்கட்டும்! துஞ்சு புலி இடறிய சிதடன் போலத் தூங்கிக்கிடந்த மாணவர், தமிழன்பர் தம் தோள்களே உலுக்கி எழுப்பிய வடவர் தம் வாய்ப்பறைகள் அறுக்கப்பிடட்டும்! தமிழகம் போர்க்கோலம் பூணட்டும்! அடங்கிக்கிடந்த ஆற்றல், தூங்கிக் கிடந்த மறத்தனம், ஒடுங்கிக் கிடந்த போராண்மை, அயர்ந்து கிடந்த தன்னுரிமை முதலியன யாவும் இனி எழுந்து தமிழகத் தெருக்களில் உலாவந்து போர்ப்பரணி பாடட்டும்! வடவர்தம் எக்களிப்பும் ஏமாற்றும் அவர்தம் குள்ளநரித்தனங்களும் அவ்வுரிமைத் தீயில் பொசுங்கிச் சாம்பலாகட்டும்! உரிமை நினைவற்றுக் கிடந்த தமிழர்தம் உள்ளக் கனப்பு பனிமலையின் குளிர்நீரை உண்டு அடங்கட்டும்! சீனப் போரைக் காட்டிக் காட்டியே ஒற்றுமைப் பறை கொட்டிக் கொட்டியே இந்தி நச்சினைத் தென்புலம் முற்றும் பரவ விடும் வடவர்தம் ஆட்சிக்கு இனிச் சாப்பறை கொட்டுங்கள், வடவரின்

செங்குருதிச் சேற்றைக் குடித்தாலன்றிச் சாப்பசியடங்கா உரிமைப் பேயாட்டம் தலைவிரித்தாடட்டும்! அப்பேயாட்டத்தில் பக்தவத்சலங்களின் போலியுருவங்கள் சிதைக்கப் பெற்றுச் சுக்குநூறாகட்டும். தமிழுரிமைப் பேய்களே! உங்களின் உரிமை நீர் சொட்டும் புரட்சி நாக்குகள் நீண்டு புடை சூழ்வனவாகுக! குருதியில் நனைந்த செங்களங்கள் நிரம்பிய செந்தமிழ் நாடு இனிப் பழந்தமிழ்க் கொடியைப் பறக்க விடுமாக!

காலிகளே ஏவிய கூலிகள்!

அண்மையில் நடந்த மாணவர்களின் போராட்டத்தின் பொழுது குரங்கு நரித்தனத்தைக் கையாண்டதுபோல் திரு. பக்தவத்சலம் காவலர்களின் வெறித்தனத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டார். சிதம்பரத்திலும் மதுரையிலும், சென்னையிலும் காவலர்கள் நடந்துகொண்ட முறை குடியாட்சிமுறைக்கே பெரிய இழுக்கைத் தேடித்தர வல்லதாகும். வெள்ளையர்களின் இருநூறாண்டுக்கால ஆட்சி வரலாற்றில் நடந்தேறாத அவ்வளவு கொடுமைகள் இந்தக் கொள்ளையர்களின் 15 ஆண்டுக்கால ஆட்சியில் நடந்து விட்டன. குறிப்பாக உரிமை பறிபோக்குதல், மாற்றுக் கொள்கையரைச் சிறை வைத்தல், திருட்டுத்தனம், ஏமாற்று, கையூட்டு, செல்வாக்கைப் பயன்படுத்தல் முதலியவற்றுல் அமைச்சரவை அமைத்தல், காரணம் இல்லாது மக்களைச் சுட்டு வீழ்த்துதல் முதலிய நிகழ்ச்சிகளில் ஆட்சியினர் நடந்து கொண்ட-கொள்கின்ற நடவடிக்கைகள் குடியரசு வரலாற்றையே கறை படிந்ததாகச் செய்து விட்டன எனின் மிகையாகாது. இப்போராட்டச் சூழல்களிலும் முதலமைச்சர் பொறுப்பில் இருந்து கொண்டு காலிக்கூட்டத்தின் தலைவராக விளங்கும் திரு. பக்தவத்சலம் பேசிய பேச்சுகள் உள்ளத்தைக் கனப்பேற்றுகின்றன. இப்பொழுது தமிழகத்தை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் 'இந்தி சென்னை முதல்வரின் ஒப்புதல் பேரிலேயே நுழைக்கப் பட்டது' எனச் சாத்திரியாரே இப்பொழுது குறிப்பிடுகின்றார். தலைமுறை தலைமுறையாகச் சிறந்து விளங்கும் தமிழரின் சார்பில் ஒப்புதல் தர இவர் யார்? இவற்றையெல்லாம் எண்ணுகையில் இவர் தமிழரா என்ற ஐயப்பாடுகூடத் தோன்றுகின்றதெனின் வியப்பில்லை. வேறு எந்த மாநிலத்தவராக இருந்தாலும்கூட ஓரளவு இப்போராட்டங்களைக் கண்டு நல்லவை செய்யாமற் போனாலும் அல்லவை செய்யாமலாவது நின்றிருப்பார். அல்லது சட்டப்படி (!) முறையாக என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்திருப்பார்.

தீக்குளித்ததை நரபலி என்றும், மாணவர்களின் போராட்டத்தைப் 'பேய்த்தனம்' என்றும், தாம் அதற்கெல்லாம் 'அஞ்சப்

போவதில்லை' யென்றும், 'புத்தத் துறவியர்கள் போலத் தீக்குளிப்பதற்கு இவர்கள் என்ன பெரிய புத்த துறவியர்களா? எவரோ இருவர் சொல்லக் கேட்டு உணர்வில் மயங்கி உடனே உயிரை மாய்த்துக் கொண்டனர்' என்றும் எக்களிப்பும், ஏளனமுமாகப் பேசியிருக்கின்றார் திரு.பக்தவத்சலம். இவர்பேசுவதைப் பார்த்தால் ''இவர் மாந்தஇனத்தைச் சேர்ந்தவர் தாமா? அவர்க்கு மானம், அன்பு, அறிவு இவை ஒரு கடுகளவேனும் இருக்கின்றனவா?'' என்றெல்லாம் எண்ணத் தோன்றும். 'மாணவர்கள் எதனால் இவ்வாறு செய்ய முற்பட்டனர்? அவர் ஏன் அவ்வளவு கொதிப்படைதல் வேண்டும்? இந்நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையான காரணங்களின் உண்மை என்ன? அவை உண்மையிலேயே ஒரு கட்சியின் தூண்டுதல் தானா? அல்லது உள்ளத்தே கனன்றெழுந்த உரிமை உணர்வா? இனி, மேற்கொண்டு செய்ய வேண்டுவது என்ன' என்பதுபற்றியெல்லாம் எண்ணிப் பார்த்துத் தக்கன செய்ய முற்படாமல், ஒரே குரலில் சூறைமாரியாக நடக்கும் இப்போராட்ட நிகழ்ச்சிகளை அறிவின்மையால் எள்ளியிருப்பது, அவர் முதலமைச்சர் பதவிக்கே தகுதியற்றவர் என்பதைத் தவிர வேறொன்றையும் புலப்படுத்துவதாகத் தெரியவில்லை. மக்களின் உணர்ச்சியை மதியாத ஆட்சி எங்ஙன் மக்களாட்சி ஆகும்?

திரு. பக்தவத்சலமும் அவர்தம் தோழர்களும் தலைவர்களும் வெள்ளையராட்சியை விரட்டுதற்கு நடத்திய போராட்டங்கள் யாவும் முறையான, நேர்மையான போராட்டங்கள் தாமா? அப்போராட்டங்களிலெல்லாம் எத்துணையளவு, காலித்தனம் பயன்படுத்தப்பட்டது! போர்க்கோலம் பூண்டவன் துறவிபோல் அமர்ந்து பணிவோடு அறங்கூறிக் கொண்டிருத்தல் வேண்டும் என்று எந்தநாட்டு மக்கள் வரலாற்றில் இவர் படித்தார்? பேராயக்கட்சியைச் சேர்ந்த பிற வல்லடிமைகளெல்லாம் கூட அஞ்சி, அடங்கி அடுத்த நொடிப்பொழுது என்ன நடக்குமோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், முன்னுள் நடத்திய கொலை, கொள்ளைத்தனங்களின் முன்னோடியாக நின்று உரிமை கிடைத்தபின் முதலமைச்சர் வரை உயர்ந்து செருக்காழ்ந்து கிடக்கும் இந்தப் பக்தவத்சலத்திற்கு மட்டும் என்ன வந்தது? இந்தியாவை உருவாக்கிய பெரும் பெருமைக்குத்தமை இலக்காக்கிக் கொண்டு விட்டார் போலும்! ஐயகோ! இவர் நிகழ் காலத்திற்கும் எதிர் காலத்திற்கும் ஏங்குகின்றேம்.

ஆந்திர நாட்டிலிருந்து ஊர்காவலர்களைத் தருவித்துக் காவற் படையின் மேலதிகாரிகளின் தண்மைக்கும், வெம்மையூட்டி 'நேரம் வரும் பொழுது சுட்டுத்தள்ளுங்கள்' என்று ஆணையிட்ட இவரின் தமிழ்த் தன்மையில் இனனும் ஒருசிலர்க்கேனும் நம்பிக்கை யிருக்குமானால் அவர்தம் பிறப்பு ஐயப்பாடா

னதே.பல்லாயிரக் கணக்கான மாணவர்தம் உள்ளார்ந்த தமிழ்ப் பற்றுக்குப் பொருள் விளங்காமல் திகைக்கும் இவரின் அறியாமை இரங்கத்தக்கது! வேட்டெஃகத்தின் வலிமையால் எழுந்து புடைதிரளும் புரட்சித் தீயை அணைத்துவிடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் இவரின் அரசியலறிவு வருந்தத்தக்கது! தாம் ஒருவரே தமிழகம் முழுமைக்கும் பேரரசன் என்று கருதிக் கொண்டிருக்கும் இவரின் செருக்கு எள்ளத்தக்கது!

இனியும் அவரும், அவரைச்சார்ந்தாரும் இத்தகைய நிலையில் போய்க்கொண்டிப்பார்களானால் – வடவர்தம் வெறியுணர்வுக்குத் தம்மைப் பலியிட்டுக் கொள்வாரானால்–தாம் அறிந்ததே உயர்ந்தது, சிறந்தது, மக்கள் கைக்கொள்ளத்தக்கது என்று வெறி முழக்கம் முழங்குவாரானால், அவர் ஆட்சிக்கு முடிவு கட்டப்பெறும்; அவர்தம் ஆண்டைகளின் வரலாறு பூண்டோடு அறுத்தெறியப் பெறும்; அவர்தம் உருவங்கள் நார் நாராகக் கிழித்தெறியப் படும். இவ்வெழுத்துகளுக்கு உண்மை உணர்விருக்குமானால், இத்தமிழக மண்ணில் மறவுணர்வு இன்னும் புதையுண்ணுமலிருக்குமானால், இங்குக் கூறப்பெற்றவை யாவும் கட்டாயம் நடந்தேதீரும். அந்த நாள் வரத்தான் வேண்டுமா என்பதை ஆளுநர் எண்ணி முடிவு செய்வார்களாக! ✲

மூன்றும் ஆண்டு!

தென்மொழிக்கு இன்றேடு இரண்டாண்டுகள் முடிந்து மூன்றுமாண்டு தொடங்கியுள்ளது. கடந்த ஈராண்டுக் காலத்தில் தென்மொழி ஆற்றியிருக்கும் பணி மிகவும் உயர்ந்தது; சிறந்தது; 'தனித்தமிழில் ஓரிலக்கிய இதழ் நடப்பதா? இது நடக்குமா?' என்றெல்லாம் வியப்பும் ஐயமும் கொண்ட தமிழன்பர் பலர் வாய்மேல் விரல்வைத்து நோக்குமாறு தென்மொழி பல பெரும் போராட்டங்கட் கிடையில் நடந்து வருகின்றது. இன்னும் விரைந்தும் சிறந்தும் நடையிட முனைந்து நிற்கின்றது. தென்மொழிக்குப் பொருளீட்டத்தைப் பொறுத்த அளவில் தினையளவு பயன் எனினும், அதன் வினையீட்டத்தைப் பொறுத்த மட்டில் அது பனையளவாக, மலையளவாகப் பெருகியுள்ளது. தென்மொழிக்கு உள்ளும் புறமும் ஏற்பட்ட இடர்கள் பல. பெயரளவில் துணைபோலும் தோன்றிச், செயலளவில் அணைகோலும் தமிழன்பர்களும் தென்மொழிப் பாங்கில் உளர். அச்சுத் தொல்லைகள் ஏராளம். ஆட்சித் தொல்லைகள் பல. பொதுவாகக் கூறவேண்டுமானால் பொருள் மிடைவும், துணை நெகிழ்ச்சியும், வினை தளர்ச்சியும், கோள் கனமும், வழி யிடர்ப்பாடும், ஆற்றுமையும், செயல் தேவையும், தொண்டு வலிவும், கால முரணும், அரசினரின் கடுநோக்கும் சூழலாக அமையப் பெற்ற தென்மொழியின் போக்கு, குருட்டுப்பையன் ஒருவன்

திருட்டுப் பொருள்களை அச்சு முறிந்த வண்டியில் ஏற்றியவாறு இருட்டு வேளையில், கரட்டுப் பாதையில், முரட்டுக் காளைகளை வெருட்டு வெருட்டென வெருட்டிக் கொண்டு போவதுபோல் உள்ளது. இதன் இயக்கத்தை எண்ணி மனமும் உடலும் சோர் வுற்றாலும், இதன் வினையீட்டங்கருதி என்றும் தளர்வுற்றேம் அல்லேம்.

தென்மொழி தன் இரண்டாமாண்டில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டதுடன், தான் உயிரெனக் கருதும் தமிழையும் நிலை நிறுத்தப் பல்லாற்றானும் தளரா உள்ளத்துடனும், துவளா நடையுடனும் முயன்று வந்துள்ளது; அரசியல் நோக்கில் பல அரிய உண்மைகளைத் துணிவுடன் முழக்கிற்று; தனித்தமிழில் மிளிரும் பன்னூறு இலக்கிய, குமுகாய, அரசியல், அறிவியல் கட்டுரைகளை வெளியிட்டுத் தண்டமிழ் பேணியது. தென்மொழி யின் தொண்டினால் ஆயிரக் கணக்கான மாணவர்களும், ஆசிரி யர்களும், தமிழன்பர்களும் உளங்களித்தும் உடல் சிலிர்த்தும் வந்தனர். எனினும் பேராசிரியர் எனப்படுவார் சிலர் உள்ளக் காழ்ப்புற்று, உண்மைக் கஞ்சித், தென்மொழியின் நேர்மை பிறழாக் கூரிய சொற்களால் தாக்குண்டு, வெகுண்டு, இ த ன் நடையினைத் தளர்த்தப் பல்லாற்றானும் முயன்றனர். அவரடி சார்ந்த ஆசிரியர்களையும் மாணவர்களையும் தென்மொழி வாங்கு தல் வேண்டா என்று வேண்டிக் கொண்டனர். இத்தகையார் போக்கால் தென்மொழியின் வலிமை இரட்டிப்பானதே தவிர, அதன் போக்கில் தினைத்தானும் மாற்றம் ஏற்படவில்லை. தமிழுக் காகவும், தமிழ் நாட்டிற்காகவும் அயராது பாடுபடும் த மி ழ்த் தொண்டர்கள் பலரைத் தென்மொழி வளர்த்துள்ளது. ஏறத்தாழ எழுபதினாயிரங் கையொப்பங்களை இந்தியை எதிர்க்கும் நடுநிலை யாளர் சார்பில் பெற்று உலக ஒன்றிப்புக் கழகத்திற்கு (U.N.O.) விடுத்துள்ளது. தமிழே மூச்சாக இயங்கும் பாவாணர்க்குப் பொருட்கொடை நல்கியுள்ளது. ஆங்காங்கே தளர்ந்து கிடந்த தமிழன்பர்களைத் தன் செம்மாந்த சொற்களால் தட்டியெழுப்பி, இந்தியால் தமிழுக்கு வருங் கேட்டைப் பல்லாற்றானும் விளக்கி அரசினர்க்கு இமையும் நடுங்காது எடுத்துரைத்து வருகின்றது. தென்மொழி இத்தகைய ஒரிரு அரும்பணிகள் செய்யினும், தான் திட்டமிட்டுள்ள தலையாய வினைகளை இன்னுந் தொடங்கவில்லை என்றே கூறலாம். இனிவரும் ஆண்டுகளில் படிப்படியாக தென்மொழியின் மொழித் தொண்டும், நாட்டுத் தொண்டும், குமுகாயத் தொண்டும் விரிவு படுத்தப் பெறும். தமிழக விடுதலை இயக்கம் அமைக்கப் பெறும். தமிழால் வயிறு வ ள ர் க் கு ம் தமிழ்ப் பேராசிரியர்கள் பலரின் மறைமுகமான நடவடிக்கை களையும், அவர்களால் தமிழுக்கு ஏற்படும் கேடுகளையும் பெயரி டஞ்சுட்டி விளக்கி, மக்கள் மன்றத்தில் கொண்டுவந்து நிறுத் தும். மொத்தத்தில் தென்மொழி ஒரு தாளிகை யென்ற அளவில்

நில்லாமல் ஓர் இயக்கம் என்றளவில் செயல்படும். தென்மொழி நிறுவ இருக்கும் தமிழக விடுதலை இயக்கம் பற்றி விரைவில் அறிவிக்கப்பெறும்.

நடைமுறை யாண்டில் இந்தி மேன்மேலும் தன் ஆட்சியைத் தமிழகத்தில் நிலைநிறுத்துமானால், சட்ட மறுப்பும், தமிழக விடுதலை முழக்கமும் செய்யப்பெறும். ஆங்காங்குள்ள பன்னூற்றுக் கணக்கான மாணவர்களும், தமிழிளைஞர்களும், அன்பர்களும், ஆசிரியர்களும் தென்மொழியின் போக்கில் ஒத்துழைக்க உறுதி பூண்டுள்ளனர். இது தென்மொழி அமைப்புக்கும் தமிழ் நாட்டின் மறுமலர்ச்சிக்கும் ஏற்பட்ட அடிப்படை வெற்றியாகும்! எனினும் இவ்வடிப்படையான செயல்களை நிலை நிறுத்தப் போதுமான பொருள் வளம் தென்மொழிக் கில்லையாகையால், அதற்கென நாட்டஞ் செலுத்தித் தென்மொழிக்கென ஒரு தனி அச்சகம் நிறுவப் பெறும். இதற்கான முயற்சியும் விரைவில் அறிவிக்கப் பெறும். இவை யாவற்றிற்கும் தென்மொழி நாடியிருப்பது உங்கள் துணையையே! அது கொண்டிருப்பது உண்மையையே! அதன் நடை கடிது; வலிது; திண்ணிது; நேர்மையது; உயர்ந்தது; சிறந்தது; மெய்ம்மையது! அற்றைத் தமிழ் மொழியை இற்றைக் காலத்திற்கேற்றபடி புதுப் பொலிவுடன் புதுநடையிட வைக்கும் தள்ளாப் பணியுள் தம்மையும் ஓர் உறுப்பினராக்கிக் கொள்ள எல்லாத் தமிழரையும் வேண்டிக் கொள்கின்றோம். —பெருஞ்சித்திரன்.

தென்மொழி, கடலூர்-2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளி நாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

என்னைத் தூக்கிலிடுங்கள்!

வரிசை கெட்ட அரசினர்க் கின்னும்
உரைக்க வேண்டுவ தொன்றுண் டென்னில்
என்னைத் தூக்கில் இடுங்கள் என்பதே!
அன்னை மொழியைக் காத்திட அதுதான்
நடந்திட வேண்டும் என்னின் நடக்க!
கடந்த நாளெலாம் கடவா நாட்களே!
வாழ்ந்த பொழுதெலாம் வாழாப் பொழுதே!
வீழ்ந்த தமிழினை வீழ்த்திய இந்தியை
ஓட்டுதற் கென்றன் உயிர்தான் ஈடெனில்
தீட்டிக் கொள்க கைவாள்! இதோ,தலை!

வடவர் பிடிக்கு வால்பிடிப் போரை
உடல்வே ருக உயிர்வே ருகச்
சிதைப்பேன் என்று முழக்கிலை தூக்கெனில்
பதைப்பிலா தென்றன் தலைகொய் திடுக!

மயர்விலாத் தமிழின் மானங் காத்திட
உயிர்தான் விலையெனில் இதோ,உயிர்! கொய்க!

பக்தவச் சலங்கள் வயிறு நிறைந்திட
இத்தனைத் தமிழர் ஈகுவீர் உயிரெனில்
என்னுயிர் முன்னர் இகாப்பா றட்டும்!
என்ற முடிவில் இதனை உரைப்பேன்:

தமிழும் தமிழரும் பிழைப்ப தென்னில்
தமிழகம் தனியாய்ப் பிரிதலே தக்கது!
இந்தியா வேண்டும் இந்தி வேண்டா,
என்பதும்,
குதிரை வேண்டும் குதிரைப்பீ வேண்டா,
என்பதும்,
ஒப்பினும் பொருளினும் ஒன்றே யாகும்!
தப்பென மறுப்பார் தனிமேடை வருக!

இந்தியி னற்ருன் இந்திய மக்கள்
முந்தைய பிரிவுகள் முற்றும் மறந்தே
ஒற்றுமைப் படுவது கூடும் என்பிரேல்
இற்றை இந்தியா இன்றே அழிக!
''வடக்கன் பேசிடும் பேச்சே பேச்சாம்;
இடக்காய் அவன்நமக் கிட்டதே சட்டம்!''
என்றே அரசும் இயம்பிடு மாயின்
அந்த அரசும் இன்றே அழிக!

மானம் இழந்த மக்களும் மக்களோ?
கூனும் குருடும் கொடிமரம் பிணிக்கையில்
உலகை ஆண்ட தமிழரும் ஒய்வதோ?
மலர்ச்சி இன்றி இவரால் மாய்வதோ?
அடிமையா யிறந்திடில் சாவு இனிப்பதோ?
மிடிமையால் உரிமைச் சாவு கசப்பதோ?
இன்றே எழுக! எந்தமிழ்க் கூட்டம்
ஒன்றே கருதுக; ஒன்றே செய்க!
உள்ளக் கருத்தை உணர்த்துதல் மொழியே!
உள்ளக் கருத்திற் குலைவைப் பாரெனில்
வெள்ளம் போலும் திரளுக! திரண்டு
தீப்போல் கனல்க! களிருய்ப் பிளிறுக!
பாய்க புலியென; பகையை விரட்டுக!
மாய்க தோற்றிடின் மனவி மக்களுத்
தூசென மதிக்க! உள்ளந் துறக்க!
மாசெனக் கருதுக மானம் இலாவுடல்!

இறுதியாய் நமக்கிடும் தண்டம் என்னெனில்
உறுதியாய் நல்லுயிர் வாங்குதல் ஒன்றே!

மானந் தலைகெட மடியேந் துவது
வீணரின் செய்கை! மிடியரின் வினவகை!

செந்தமிழ்க் குருதி ஓடுவ தென்னில்
முந்துவீர் தமிழரே! முந்துவீர் தமிழரே!

சிந்துவீர் குருதி! சிந்திய குருதியால்
இந்திய மண்ணில் தமிழக இணைப்பை
உடனே பிரித்திடற் கொருவழி செய்க!
கடனது தமிழர்க்கு! களிப்பொடு பொங்குக!

முன்னர் தோன்றிய விடுதலைப் படைகள்
இன்னவா றில்லை என்னும் படிக்கே
வெற்றி நினைவொடு நடந்து காட்டுக!
முற்றுக இன்றே(டு) அடிமை வரலாறு!

எந்தமிழ் நாட்டில் இதுவரைத் தோன்றிய
முந்து படையெலாம் மூச்சிலாச் சாப்படை!
பெரியார் நடத்திய பெரும்படை என்றே
உரிய கூலியைப் பெற்றுணர் விழந்தது!
பின்னர் வந்தவை கூலிப்பட் டாளம்!
'இன்னர் பெரியர்; இன்னவர் தலைவர்;
இவரடி வைப்பின் அதன்பின் ஏகுவோம்'
எனஎன் றுமல் எழுக மறவனே!
மனம்உன் னுடையது; நினைவுஉன் னுடையது!
முழுநினை வெல்லாம் விடுதலை முழக்கம்!
விடுதலை ஒன்றே வேண்டிய தென்னிற்
கொடுதலை! கொடுஉயிர்; விடுதலை குமிழ்க்கும்!

பல்லை இளித்தா விடுதலை பெறுவது?
சொல்லை அடுக்கியா உரிமை சுவைப்பது?
கரையில் நின்றே கடலைக் கடப்பது?
விரைக தமிழனே விடுதலை நோக்கி!
பொங்கும் உணர்வால் விடுதலை முழக்கம்
எங்கும் எழுந்திடச் செய்க! தமிழனே!

நாட்டுக்கு விடுதலை நண்ணுவ தாயின்
வீட்டுக்கு வீடு மறவரைக் கூட்டுக!
நெஞ்சுக்கு நேராய்க் கத்தியை நீட்டினும்
அஞ்சாத் தமிழர் ஆயிரக் கணக்கில்
எழுவா ராயின் இந்தி நுழையுமா?
தொழுதால் அடிமை விலங்கைத் துணிப்பரா?

சோற்றைக் கருதியா கல்வி கற்பது?
ஊற்றை அடைத்தா நீரை இறைப்பது?
பித்தக் குரங்கு பேய்பிடித் தன்ன
இத்தமிழ் நாட்டின் தலைமையர் இருப்பார்;

(21-ஆம் பக்கம் பார்க்க.)

பேரா. தெ. பொ. மீ. தமிழுக்கதிகாரியா?

'சுதேசமித்திரன்' (தன்னாட்டு நண்பன்) என்னும் நாளிதழ் தொடர்பில் சென்ற விளக்கணி (தீபாவளி) விழாவன்று வெளி வந்த சிறப்பு மலரை, அண்மையில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அதில், 'தமிழில் பிறமொழிச் சொற்கள்' என்றொரு கட்டுரை, பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரால் வரை யப்பட்டுளது. எனக்கு ஏற்கெனவே அவர்தம் ஆரியச் சார்பும் தமிழறிவுத் திறமும் தெரியுமேனும், அக் கட்டுரை கண்டவுடன், இதுதானா இத்தகைய கட்டுரை வெளிவரற்கேற்ற சமயம் என்னும் வினா என் உள்ளத்தெழுந்து வருத்தியது.

கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக, மூன்பு வேத ஆரியத் தாலும் பின்பு அதனொடு சமற்கிருதம் இணைந்த வட மொழியா லும் நைந்து குற்றுயிராய்க் கிடக்கும் தமிழை, நாளடைவிற் கொல்ல வரும் இந்தியைச் சிறுபான்மையரான அறிவுடைத் தமிழர் எதிர்த்துக் கொண்டிருக்கும் இந்நாளில், தமிழ் ஒரு கலவை மொழியென்றும் இந்தியால் எள்ளளவும் தாக்குண்ணு தென்றும் தவருன கருத்துக்கள் அமைச்சருள்ளத்திலும் அறி வாராய்ச்சியில்லாத மாணவர், பொதுமக்களுள்ளத்திலும் படு மாறு, அக் கட்டுரையைத் தமிழுக்குச் சிறப்பாக அமைக்கப் பெற்றதாகச் சொல்லப்பெறும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் பொறுப்பு வாய்ந்த தலைமைத் தமிழ்ப் பதவியிலிருப்பவர் வரைந்திருப்பது, மிகமிக வருந்தத்தக்கதாகும்.

பிராமணர் தென்னாட்டிற்கு வந்ததிலிருந்து தமிழ் தாழ்த்தப் பட்டே வந்திருக்கின்றது. தமிழ் பொது வழிபாட்டிற்குத் தகாத மொழியென்று தள்ளப்பட்டதே அதன் தாழ்வுத் தொடக்கம். பிராமணர் நிலத் தேவரும் (பூசுரர்) அல்லர்; வடமொழி தேவ மொழியுமன்று. சிவ நெறியும் மால் நெறியும், முறையே, குமரி நாட்டுச் சேயோன் வணக்கத்தினின்றும் மாயோன் வணக்கத்தி னின்றும் தோன்றிய தமிழர் சமயங்கள். ஆதலால், வடமொழி தமிழ் நாட்டு வழிபாட்டு மொழியாதற்குச் சிறிதும் தக்கதன்று.

''தென்னு டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி''

என்பது,

தென்னு டுடைய மாலே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

என்று திருமால் நெறிக்கும் செல்லும்.

உலகப் பழம்பெரு மொழிகளுள் தமிழைப்போல், வளமும் தூய்மையும் உள்ளது வேறொன்றுமில்லை. ஈராயிரங் கல் தொலைவு தெற்கே பரவியிருந்த குமரிக் கண்டப் பல்லாயிரம் உலக வழக்குச் சொற்களும், முதலிரு கழகப் பல்லாயிரம் தமிழ் நூல்களும், மறைந்த பின்பும்; தமிழ் தனித்து வழங்கும் அளவு சொல்வளங் கொண்டுள்ளது மேலையாரியத்தில் இன்றும் நூற்றுக் கணக்கான தென் சொற்கள் உள்ளன. கீழையாரியமாகிய வட மொழியில் ஐந்திலிருபகுதி தமிழ்.

பேரா. தெ. பொ. மீ. யின் பேச்சினின்றும் எழுத்தினின்றும் அவர் செவ்வையாய்த் தமிழை அறியவில்லையென்று தெரிகின்றது. முதலாவது, அவர் சென்னை வாணர்; நெல்லை நாட்டுச் சிறப்புச் சொற்களையும் தமிழொலிப்பு முறையையும் அறிந்திலர். வடமொழி யிலக்கியத்தை முன்னும் தென்மொழி யிலக்கியத்தைப் பின்னும் கற்றதாகத் தெரிகின்றது. தமிழர் கிரேக்க நாட்டுப் பாங்கரினின்று வந்தவர் என்னும் கொள்கையை ஏற்கின்றவர் தொல்காப்பியர் காலம் கி. பி. முதலாம் இரண்டாம் நூற்றுண்டென்று என் எதிரிலேயே வட நாட்டாருள்ள ஒரு பொதுக்கூட்டத்திற் சொன்னவர். மேற்குறித்த கட்டுரையில், தூய தென் சொற்களைப் பிற மொழிச் சொற்களென்றும், தேவையில்லாத ஆங்கிலச் சொற்களை ''இன்றியமையாத தமிழ்ச் சொற்கள்'' என்றும், கூறியிருப்பதும்; சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகர முதலியை அளவை நூலாகக் கொண்டிருப்பதும்; அவர்தம் தமிழ்ப் பற்றின்மையைப் பறை சாற்றுகின்றன.

பொதுவாக, பிராமணர் வெளியிடும் சிறப்பு மலர்களில், மறைமலையடிகளைப் பின்பற்றுவோரின் கட்டுரைகள் இடம் பெறுவதில்லை. இங்ஙனமே, தமிழ்த் தூய்மை வேண்டுவோர் வெளியிடுகளிலும் வையாபுரி வழியினர் கட்டுரைகள் இடம் பெறுவதில்லை. இவ் வேறுபாடு தொடராதவாறு அறிஞர் அம்பலத்தில் தருக்க வாயிலாய் உண்மை நாட்டப்பெறல் வேண்டும்.

பண்டை நாளில் தமிழர்க்குத் தமிழுணர்ச்சி நிரம்பியிருந்ததினால், வெளிநாட்டினின்று வந்த பொருள்கட்கெல்லாம் உடனுடன் தனித்தமிழ்ப் பெயரிடப்பெற்றன.

கரும்பு சீனநாட்டினின்று வந்தது. அதன் செங்கருமை பற்றிக் கரும்பெனப்பட்டது.

''அரும்பெறன் மரபிற் கரும்பிவட் டந்தும்
... ...
தொன்னிலை மரபினின் முன்னேர் போல''

என்று ஔவையார் அதிகமான் நெடுமானஞ்சியைப் பாடிய புறப்பாட்டடிகட்கு, ''பெறுதற்கரிய முறைமையையுடைய கரும்பை விண்ணுலகத்தினின்று இவ்வுலகத்தின்கட் கொண்டு வந்து தந்ததும்..... சக்கரத்தை நடாத்திய..... நின்குடியிற் பழையோரை யொப்ப'' என்று, பழைய வுரைகாரர் உரைத்திருத்தலை நோக்குக. சீனநாடு 'வானவர் நாடு' (Celestial Empire) என்று பெயர் பெற்றிருந்ததும், தமிழர் தொன்று தொட்டுச் சீன நாட்டொடு வணிகம் செய்து வந்ததும், இங்குக் கருதத்தக்கன. சூடமும் சீனநாட்டினின்று வந்ததே.

நிலக்கடலை (வேர்க்கடலை), கூவைக்கிழங்கு (Arrow root), பெருங்காயம், அட்டிகம் (சாதிக்காய்), கிள்ளை (சாதிபத்திரி), கராம்பு, முதலியவை கீழிந்தியத் திட்டுகளினின்றும்; உருளைக்கிழங்கு, புகையிலை, குச்சுக்கிழங்கு, அண்டிமா (மரமுந்திரி, Cashew), முதலியவை தென்னமெரிக்காவினின்றும்; செந்தாழை (Pine apple) ஆத்திரேலியாவினின்றும்; பேரீந்து அரபிநாட்டினின்றும் வந்தவையாகும்.

மிளகாயும் வெளிநாட்டினின்று வந்ததாகச் சொல்லப்படுகின்றது. மிளகுபோற் காரமான காய் மிளகாய்.

மக்கைச் சோளம் வட அமெரிக்காவினின்று வந்தது. மொக்கை-மக்கை = பெரியது.

சில பொருள்கட்கு வட்டகைதோறும் வேறு பெயருமுண்டு.

எ. டு: ஏழிலைக் கிழங்கு (நெல்லை), குச்சுக் கிழங்கு (சேலம்), மரவள்ளிக்கிழங்கு அல்லது சவரிக்கட்டை (தஞ்சை) ஆழ்வள்ளிக் கிழங்கு (மேல் வடார்க்காடு).

இதள் (பாதரசம்) மேல்நாட்டினின்று வந்தது. ஒட்டகமும் குதிரையும் அரபி நாட்டினின்று வந்தவை. ஒட்டகத்திற்கு நெடுங் கழுத்தன்(-ல்), நெடுங்கோணி என்றும் பெயருண்டு. ஒட்டகம் என்பது ஒட்டை என மருவும்.

வான்கோழி துருக்கிநாட்டினின்று வந்தது. வரிக்குதிரையும் (Zebra), நீர்யானையும் (Hippopotamus) ஒட்டச்சிவிங்கியும் (Camelopard or Giraffe) ஆப்பிரிக்காவினின்றும் வந்தவை. தீக்கோழியை ஒட்டகப்பறவை என்பர் புதுச்சேரியார்.

வெளிநாட்டினின்று வந்த விலங்குகளுள் குதிரை பலவகைப்பட்டிருந்ததினால், அவ்வகைகளின் நுண்ணியல்பிற் கேற்ப, பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம், புரவி என எண்வேறு பெயரிட்டிருந்தனர். இனி, பாண்டியன் குதிரை கனவட்டம் என்னும் வகையையும், சோழன் குதிரை கோரம் என்னும் வகையையும், சேரன் குதிரை பாடலம் என்னும் வகையையும், குறுநிலமன்னர் குதிரை கந்துகம் என்னும் வகையையும் சேர்ந்தவை சிறு குதிரை (Pony) மட்டம் என்றும், நாட்டுக் குதிரை தட்டு என்றும் சொல்லப்படும்.

மேனாட்டினின்று வந்த வண்டிவகைப் பெயர்களுள், புகை வண்டி (Train), மிதிவண்டி (Cycle) என்பன பொதுமக்களிட்டவை; மின்வண்டி (Tram), இயங்கி (Motor) என்பன புலமக்களிட்டவை.

மக்கட்குத் தாய்மொழி யுணர்ச்சியும் தூய்மை போற்றும் எண்ணமுமிருப்பின், வெளிநாட்டினின்று வந்த எப்பொருட்கும் தமிழ்ப் பெயரிடுவது அரிதன்று. உள்நாட்டுப் பொருள்கட்குப் பெயரிடும் நெறிமுறைகளே, வெளிநாட்டுப் பொருள்கட்குப் பெயரிடுவதையும் தழுவும். ஒரு பொருளுக்கு முதலில் அதன் சிறப்பியல்புபற்றிப் பெயரிடப்பெறும். பின்பு அதையொத்த பொருள்கட்கெல்லாம் அப்பெயரே வெவ்வேறு ஏற்ற அடைமொழி கொடுத்திடப்பெறும்.

எ. டு: வெம்புங்காலத்தில் அல்லது நிலத்தில் தழைப்பது வேம்பு. அதையொத்தவை, நாய்வேம்பு, கறிவேம்பு, நில வேம்பு முதலியவை.

சில இனப்பொருள்கட்கு வெவ்வேறு பெயரும் இடப் பெற்றுள.

எ. டு: தட்டையாயிருப்பது தட்டைப்பயறு அல்லது தட்டான் பயறு; கருத்துத்திரண்டிருப்பது காராமணி; வரியுடையது வரிக்கொற்றான். இடங்கர், கராம், முதலை, என்னும் உயிரி வகைப் பெயர்களும் இம்முறை பற்றியனவே.

தண்டோடு ஒட்டியிருப்பதைத் தாள் என்றும். அது நீண்டு தொங்கின் தோகை என்றும், திண்ணமாயிருப்பின் ஓலையென்றும். மெல்லிதாயிருப்பின் இலை என்றும்; மாம்பிஞ்சை வடுவென்றும், பலாப்பிஞ்சை முசு என்றும், வாழைப் பிஞ்சைக் கச்சல் என்றும், வேறுபடுத்துச் சொன்ன நுண்மாண்நுழை புலத் தமிழர்க்குப் பெயரிட அரிதாம் பொருள் இவ்வுலகத்தில் ஏதேனும் உண்டோ? இவ்வாற்றல் இன்னும் அழியாதிருப்பதை நாஞ்சில் நாட்டு வைத்தூற்றி (Funnel) என்னும் சொல்லிற்காண்க.

தமிழரின் தாய்மொழியுணர்ச்சி முதற்கண் ஆரியத்தாலும் பின்னர் வேற்றரசுகளாலும் பெரும்பாலும் கொல்லப்பட்டது. கொண்டான்மாரும் புத்தமித்திரன்மாரும் சுவாமிநாத தேசிகன் மாரும் வையாபுரிகளும் பல்கினர். செந்தமிழைக் காக்கும் நக்கீரர்க்கும் பொய்யா மொழியர்க்கும் படிக்காசர்க்கும் பிழைப் பில்லாது போயிற்று. ஆங்கிலர் ஆட்சியாலும் ஆங்கிலக் கல்வி யாலும்தமிழருள் ஒரு சாரார்க்குப் புத்துணர்ச்சி பிறந்தது. அதன் விளைவாக மறைமலையடிகள் தோன்றினர். தமிழ் புத்துயிர் பெற்றது. அது நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்து வருங்காலத்தில், ஆரியம் மீண்டும் தலையெடுத்து அதை அழித்து வருகின்றது. அதற்கு அடிதாங்கி நிற்பவர் பேரா. தெ. பொ. மீ. யே. தமிழாசிரியர் தமிழ்ப்பற்று, தொடக்கப் பள்ளிப் பதவியினின்று பல்கலைக் கழகத் தலைமைப் பதவிவரை மேமேலேக்கிச் செல்லச் செல்லக் குன்றிக் கொண்டேபோய், பேரா. தெ. பொ. மீ. யண்டைமறைந்து விடுகின்றது. அவருக் கடுத்துள்ள பர். மு வ. போன்ருரும் தமிழைக் கவனிப்பதில்லை. தலைமைப் பதவிதாங்கும் தமிழ்ப் பேராசிரியர் தமிழைக் காத் திருப்பின், இந்தி தமிழ் நாட்டிற்குள் கால்வைத்தேயிருக்காது. பெரும்பாலும் எளியரான உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியரெல் லாரும், இந்தியை எதிர்க்காதவாறு கல்வியமைச்சரால் அச்சு றுத்தப்பட்டிருக்கின்றனர். தமிழாசிரியர் தலையிடாததினால், இந்தியெதிர்ப்பு ஓர் அரசியற் கட்சி வேலையாகத் தோற்றமளிக் கின்றது. உரிமையுணர்ச்சியும் அறிவு விளக்கமும் கொழுந்து விட்டெரியும் இளம் காளையரான மாணவர், மேய்ப்பனில்லா ஆடுகள்போல் இடர்ப்பட்டுத்தவிக்கின்றனர். உள்ளத்தில் உணர்ச்சியுள்ள கல்லூரித் தமிழாசிரியர் ஒருசிலர், தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்களுஞ்சியும் தமிழ்த் தேர்வாண்மைப்பேறு நோக்கியும், வெளிப்படையாய் எதுவுஞ் செய்ய இயலாதிருக் கின்றனர். தமிழைக் காத்தல் தமிழாற் பெருஞ் சம்பளம் பெறும் தலைமைப் பேராசிரியர் தலைமேல் விழுந்த தலையாய கடமை. இதை அவர் ஏள்ளளவும் உணர்கின்றிலர். தமிழால் வேலை யிழந்த என்போன்ருர் அரும்பாடுபட்டு இந்தியை எதிர்க்க வேண்டியுள்ளது. "குத்துக்குநிற்பான் வீரமுட்டி, கொள்ளுக் கொண்டுபோவான் தவசிப்பிள்ளை." தமிழைக் காக்குந்தகுதி யின்றேல் தலைமைப்பதவி தாங்குதல்தவரும். பொதுவாகப் பதவி பற்றியே மக்கள் புலமை மதிக்கப்படுவதால், தலைமைத்தமிழ்ப் பேராசிரியர் இந்தியை ஏற்கின் அல்லது எதிர்க்காவிடின், பிறர்க்கு மொழியுணர்ச்சி குன்றுவதொடு, அதுதான் சரிபோலு மென்று பிறழ்ந்துணரவும் இடமுண்டாகின்றது. பேராசிரி யர் சிலர் செந்தமிழ்க் காவலரென்று சிறப்புப்பெயர் தாங்கிக் கொண்டு இந்தியை எதிர்க்காதிருப்பது, பெரிதும் வியப்பிற்கிட மானதே.

பேரா. தெ. பொ. மீ., முதலாவது வழக்கறிஞராய் வரவேண்டிச் சட்டம் பயின்று பட்டம் பெற்றவர். பின்பு அத் துறையை விட்டுவிட்டுத் தமிழ்த்துறைக்குட் புகுந்தார். உண்மைத் தமிழ்ப் பற்றுள்ளவர் ஒரு கட்சியையும் சார்ந்திருக்க முடியாது. பேரா. தெ. பொ. மீ. பேராயக்கட்சியைச் சேர்ந்தவர். இந்தி தமிழ் நாட்டிற் புகுத்தப்பட்ட பின்பு, நாவலர் சோமசுந்தர பாரதியார், கலீத்தந்தையார் கருமுத்து தியாகராசர் முதலிய தூயதமிழர் பேராயக் கட்சியினின்று விலகி விட்டனர். பேரா. தெ. பொ. மீ. யோ விலகவில்லை. அவர் கருத்திற்கு அக்கட்சிக் கொள்கை மிகப் பொருத்தமானது. மேலும், அவர் பதவிமேம்பாட்டிற்கும் அக்கட்சியாட்சி உதவி வருகின்றது. ஆங்கிலராட்சிக் காலத்தும், மறைமலையடிகள் மறையும் வரையும் தமிழ்த்துறையில் இருக்குமிடம் தெரியாமலிருந்த அவர், இன்று தமிழ்நாட்டுத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்கின்றார். இதுவரை அவர் இந்தியை எதிர்த்ததேயில்லை.

இனி, அவரது கட்டுரையைத் தொடர் தொடராய் ஆராய்ந்து தடை விடை கூறுவாம்.

1 ''உயிருள்ள மொழிகள் வழக்கில் இருக்கும்பொழுது கொடுக்கல் வாங்கல் இருக்கவே செய்யும்.''

உயிரற்ற வேத ஆரியமும் உயிரில்லாத சமற்கிருதமும், அடிநாள்முதல் கொடுக்கல் வாங்கல் செய்து வந்திருக்கின்றனவே!

2. ''பலபொருள்கள் ஒருமொழி பேசுபவரிடையே சிறந்திருக்கும். அவற்றை மற்றொரு மொழி பேசுவோர் பயன்படுத்தப் புகுவது உலக இயற்கை.''

இக்கூற்று மிகப் பொருத்தமானது. என் கருத்தும் இதுவே. பேராசிரியர், பல சொற்கள் என்று குறியாமல் ''பல பொருள்கள்'' என்று குறித்திருப்பது மிகவும் போற்றத்தக்கதாம் தமிழ் பிறமொழிகளிலுள்ள சொற்களையன்றிக் கருத்துக்களையே தழுவும். இதை 'Intussusception' என்பர் ஆங்கிலர்.

3. ''நம்முடைய மாம்பழமும் மாங்காயும் ஆங்கிலேயருக்குச் சுவை மிகத்தந்தன. ஆகையால் மாங்காய் என்பது 'Mango' என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேயர் தமிழ் நாட்டிற்கு வந்ததிலிருந்தே ஆங்கில மொழியில் புகுந்துள்ளது.''

இது சரிதான். ஆயின், மாங்காய் ஆங்கிலேயருக்குச் சுவைமிகத்தந்ததா என்பது தெரியவில்லை. வடார்க்காடு மேலைப்பகுதியிலுள்ள ஆம்பூர் வட்டத்தில், மா என்னும் பெயர் மாங்காய் என்னும் வடிவிலேயே வழங்குகின்றது. காயைக் குறியாதவிடத்தெல்லாம், மாங்காய்ப் பழம், மாங்காய்த்தோப்பு, மாங்காய்மரம், மாங்காயிலை, மாங்காய்ப்பிஞ்சு என, மாங்காய் என்பதே நிலைமொழியாய் வழங்குகின்றது. ஆம்பூர் சென்னைக்கு அண்மையிலிருப்பதால், கிழக்கிந்தியக் குழும்பார் வந்திருந்த தொடக்கத்தில், மா என்னும் பெயர் மாங்காய்(Mango) என்னும் வடிவில் ஆங்கிலத்திற் புகுந்திருக்கலாம்.

4. ''அப்படியே ஆங்கிலேயர் வழியாக ''மோட்டார்க் கார்'' நம் நாட்டிற்கு வந்தது. அதனோடு ''கார்'' என்ற சொல்லும் தமிழுக்குள் நுழைந்தது. எனவே கொடுத்தும் வாங்கியும் வந்தது மக்கள் பண்பாட்டு வளர்ச்சியையே காட்டுகிறது.''

இயங்கி (Motor car) நம் நாட்டிற்கு வந்தது மெய்தான். ஆயின் 'கார்' என்ற சொல் அப்பொருளில் தமிழுக்குள் நுழையவில்லை. மொழியுணர்ச்சியும் அறிவுமில்லாத மக்கள் வாய்க்குள் மட்டும் நுழைந்தது. அது தமிழுக்குள் நுழைந்ததாகாது. மக்கள் வாய்க்குள் நுழைந்ததற்கும் வையாபுரி வகையார் ஆட்சியில் அன்று தமிழிருந்ததே காரணியம். செந்தமிழ்க் காவலர் அன்று இருந்திருந்தால், ஆண்டுதோறும் அருந்தமிழ் நூல்கள் ஆடிப் பெருக்கில் அமிழ்ந்திருக்குமோ? 'கார்' என்னும் ஆங்கிலச் சொல்லும் இயங்கியையும் தேரையும் வேறுபாடின்றிக் குறிப்பதால், அத்துணைச் சிறந்த சொல்லுமன்று.

தமிழுக்குள் ஒருசொல் நுழைந்ததெனின், அது நீக்கவும் மாற்றவும் முடியாததாயிருக்கும். ஆகவே 'கார்' என்னும் சொல் மக்கள் வாய்க்குள் நுழைந்தது, மொழித்துறையிற் புண்பாட்டு வளர்ச்சியேயன்றிப் பண்பாட்டு வளர்ச்சியன்று.

திரு. மகிழ்நன் தமிழில் எழுதியுள்ள தாமசு ஆல்வா எடிசனின் வாழ்க்கை வரலாற்றைப்பார்க்க. அதில் இயங்கி என்னும் சொல்லைக் காணலாம்.

5. ''மயில் இந்திய நாட்டுப்பறவை. திராவிடமொழியைச் சேர்ந்தசொல்.''

திராவிடமொழிச்சொல் என்பதினும் தமிழ்ச்சொல் என்பது தகும். திராவிடம் இன்று 19 மொழகளாகக் கணக்கிடப் பட்டுள்ளது. மேலும், தமிழைத் திராவிடத்தினின்று பிரிக்க வேண்டிய நிலைமை இன்று நேர்ந்துள்ளது.

மயில் என்னும் சொல் திரவிடமொழிகளிற் பின்வருமாறு வேறுபட்டும் உளது.

தமிழ்	மலையாளம்	கன்னடம்	தெலுங்கு	துளு
மயில்	மயில்	நவில்	நமலி	மைரெ

மலையாளம் பண்டைச் சேரநாட்டுத்தமிழே.

6. ''வடமொழியில் இருந்தும் உயிருள்ளவையாய் வழக்கில் இருந்த சொற்கள் தமிழில் வந்துதானே வழங்கும்?''

வடமொழி என்பது, வேத ஆரியம் அல்லது வேதமொழி, சமற்கிருதம் என இருநிலைகளையுடையது. வேத ஆரியம் வேத காலத்திலேயே வழக்கற்றுப்போய்விட்டது. வழக்கற்றுப்போன வேத ஆரியத்தோடு, அக்காலத்து வட்டார மொழிகளாகிய பிராகிருதங்களைச் சேர்த்து ஆக்கிக்கொண்ட அரைச்செயற்கையான இலக்கிய நடைமொழியே (Literary dialect) சமற்கிருதம். பிராகிருதம் முந்திச் செய்யப்பட்டது; முன்னுள்ளது; இயற்கையானது. சமற்கிருதம் நன்றுய்ச் செய்யப்பட்டது; பிற்பட்டது; செயற்கையானது. ஆதலால், வடமொழிச்சொற்களை உயிருள்ளவையாய் வழக்கிலிருந்தவை என்று சொல்வது தவறும். தமிழையும் அதன்வழிப்பட்ட திரவிடமொழிகளையும் ஆரியவண்ணமாக்குவதற்கு, வேண்டுமென்று புகுத்தப்பட்ட வேண்டாச் சொற்களே வடமொழிச் சொற்கள் அவை, தமிழ்த்து வாழும் ஆற்றலின்றிப் பிறவுயிரிகளைச் சார்ந்தே வாழும் உண்ணிகளைப் (Parasites) போன்றவையே.

7. ''புத்தர் என்ற பெயர் தமிழல்ல என்று தள்ள முடியுமா?''

புத்தர் என்பது ஒருவரின் இயற்பெயர் (Proper name). அதை எங்ஙனம் மொழிபெயர்த்தல் சாலும்? புத்தன் என்பது, பொதுச் சொல்லாயின், தமிழில் அறிவின் என்று பெயரும். மேலும், புத்தரையே அறிவன் என்று பண்டைநாளில் வழங்கியிருக்கின்றனரே!

''... ... ...
புனிதன் சினன்வரன் அறிவன் பிடான்
போதி வேந்தன் புத்தன் பெயரே''

என்பது பிங்கலம். (தொடரும்)

தொடங்கிய உணர்வு அடங்கிடாது
முழங்குக போர்ப்பறை!

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்வாய் திறந்தால் நாடு பேசியதா?
அவர்'ஆம்' என்றுல் ஒப்பினேம் என்பதா?
சோற்றுக் குடலும் மூக்காயின் தோற்றமும்
ஒன்றுபோ லாயின் உணர்வும் ஒன்ரு?
தமிழர் தலைவர்(!) பக்த வத்சலம்
உமிழும் சொற்கள் தமிழர் உரைப்பதா?
இந்திக் கெதிர்ப்பிலை என்றவர் மொழியும்
மந்தித் தனந்தான் தமிழரின் ஒப்பமா?

உரிமைக் கடிப்படை உயிர்ப்போ ராட்டம்!
நரிமையும் நாய்மையும் அடிமையர் சொத்து!
விடுதலைப் பேச்சுக்குச் சாதலே விலையெனில்
விலையினைக் கொடுத்து விடுதலை பெறுக!

மாணவர் வருக! அறிஞர் வருக!
மாணக் கற்பின் மங்கையீர் வருக!
இளமை மொய்க்கும் கனவினர் வருக!
வளமை குன்ரு மறவோர் வருக!
தீத்திறஞ் செய்யினும் நாத்திறந் திறம்பாப்
பூத்த கொள்கைப் புலவரீர் வருக!
பாத்திறஞ் சாற்றும் பாவலர் வருக!
மணவறை பாரா மணியிளம் பெண்டிரும்,
கணவரை இழந்த கைம்மை மகளிரும்
தமிழர் விடுதலை என்னுந் தாழ்விலா
அமிழ்தாம் உணர்வில் அகமகிழ் வெய்துக!

மொழிப்போ ராட்டம் தீயென மூளுக!
விழிப்பிலார்க் கில்லை விடுதலை இன்பம்!
நாய்கட் கென்றும் நக்கலே வாழ்க்கை!
பேய்களின் ஆட்சியை இன்றே தொலைத்திடப்
பீறிட்டுக் கிளம்பும் குருதிமேல் ஆணை!
கூறிட்(டு) என்னுடல் சிதைப்பினும், பகைவரை
ஏறிட்டுப் பாராத நெஞ்சுமேல் ஆணை!
பூக்கிலா உரிமை,என் உயிர்தரப் பூக்குமேல்
தூக்கினில் இடட்டும்;என் உடலிவ் வரசே! *

எழுந்தது தமிழ்ப் படை!

ம. இலெ. தங்கப்பா.

தாய்மொழிக்கு வருங்கேட்டை, இந்தி தன்னைத்
தடுத்திடுவோம் எனஎழுந்த தமிழர் தம்மை
நாயடிமைத் தமிழர்களே தாக்கிறைராம்!
நன்றென்று நின்ருராம் காவ லர்கள்!
பேயரசு செயும்பொழுதும் இதுபோற் செய்தி
பிறிதொன்று கேட்டதில்லை; அந்தோ, அந்தோ!
தீயரசே, அழிவுனக்கு நெருங்கிற் றுண்மை!
தீ மூளச் செய்துவிட்டாய் எம்மு ளத்தில்!

வருகின்ற வெள்ளத்தைப் பேருணர்வை
வழிமறித்தால் பீறிட்டிங் கடித்தலன்றித்
தெருமந்தா அடங்கிப்போம்? தமிழர் நெஞ்சச்
செந்தீயை அவிப்பதெனில் அவிப்பாய் இந்தி!
நரிநெஞ்சச் சூழ்ச்சியினுல் கயமை செய்யின்
நாடினிமேற் பொறுக்காது! புரட்சி தோன்றும்!
உரிமைஎரி மலைகுமுறத் தடுத்து வென்ருர்
உலகத்தில் இலர்! இதைநீ உணர்ந்து கொள்வாய்!

எம்மிளைஞர் ஆர்த்தெழுந்தார் குற்றமில்லை!
இந்திமொழி தமிழகத்தில் ஆட்சி செய்ய
மும்முரமாய் எழுந்ததுவும் குற்றமில்லை!
மூளைந்தவட நாட்டினர்பால் கூலிபெற்றே
பொய்ம்மைமிகுந் தன்னலத்தால் அவர டிக்கீழ்ப்
புகுந்துநீ இளித்ததுவும் குற்றமில்லை!
விம்மிஇரு தோள்புடைக்க, உனைக்கிழித்து
வீழ்த்தாமல் விட்டாரே, அதுதான் குற்றம்!

'அரசியல்வேர்ச் சட்டத்தில் 'இந்தி' உண்டே!
அதைஎதிர்த்தல் சரியோ' என் றுளறு கின்ருர்!
அரசியலென், ருல்மக்கட் காதல் வேண்டும்;
அவர்நன்மை பேணுதார் சாதல் வேண்டும்!
புரையில்லாச் சான்ருேரா சட்டம் செய்தார்?
புல்லியர்கள் தந்நலத்தால் எழுதிக் கொண்டார்!
பரிசழிந்த தமிழ்க்கயவர் இசைந்தா ரென்ருல்,
பரந்ததமிழ் மாந்தர்க்கும் அதுவா சட்டம்?

திருடன்செய் சட்டமெலாம் திருட்டுச் சட்டம்;
தீயன்கை ஆட்டியது தீமை யாட்சி!
முரடன் சொல் விதிமுறைகள் நமக்கா காப்பு?
முட்டாள்கள் இடுங்குரலில் உண்மை யுண்டோ?
குருடேதான் சட்டமெனில் அச்சட்டத்தைக்
கொளுத்துதலே நன்ருகும் எழுந்து வாரீர்!
இருள்தன்னை ஒளிஎன்பார்; குருதி யாலே
எந்தமிழின் உரிமைமடல் எழுதி நிற்போம்!

தமிழ் பழிப்பார் பூன்நாவை அறுத்தல் வேண்டும்;
தடுக்கவரும் கையறுத்து வீழ்த்தல் வேண்டும்;
அமிழ்துநிகர் தாய்மொழியை வடநாட் டான்பால்
அடகுவைப்போன் குடல்மண்ணில் சரித்தல் வேண்டும்;
கமழ்கின்ற தமிழ்ப்பாலில் இந்தி நஞ்சைக்
கவிழ்ப்பானின் செங்குருதி சிந்தல் வேண்டும்;
தமிழ்ப்பகைவர் தலைகளெல்லாம் உருட்டல் வேண்டும்;
தவறிழைத்த இந்தியினை வெருட்டல் வேண்டும்!

பத்தவச்சத் தாலழிந்த ஐந்து யிர்க்கும்
பத்துயிர்கள் துடித்திடட்டும்; இஃயிர் நம்மைக்
கொத்தவரும் அரவின்முன் கொல்லா நோன்பு
கொண்டிருத்தல் என்னமுறை! தமிழினத்தின்
வித்தழிக்கச் சூழ்கின்ருன் வடக்கன்! முன்போய்
வீழ்ந்திளித்தான் தமிழனெனின், அழியு மானம்
முத்தமிழின் மானமன்ரே! பொறுத்தலாமோ?
மூளட்டும் தாய்மொழிப்போர், விடுதலைக்கே!

ஒழுங்கென்பார்; முறையென்பார்; அமைதி யென்பார்;
உணர்ச்சியினைத் தூண்டியதும் ஆர்செய் குற்றம்?
பழங்கனிய ஊசியிடல் போலும் மெல்லப்
பழந்தமிழர்க் கூசியிடப் பார்த்தாய் ஐயா;
எழுந்துவிட்டோம் அலறுகின்ருர்! அலறிடட்டும்
எந்தமிழின் விலங்கொடிக்க எலும்பொ டிப்போம்!
முழுங்குகடல் எனவரினும் குடித்து நிற்போம்
முத்தமிழின் மெய்வலிவைக் காட்டுவோமே!

உடலழித்தல் கொலையென்பார் உண்மை! ஆனல்
உடலினுக்கும் உயர்வன்ரே உள்ளம்? அந்தக்
கெடலரிதாம் உளங்கெடுத்தும் உளத்தி னுள்ளே
கிளர்ந்திடுநல் லுணர்வழித்தும் மக்கள் தம்மை
நடைப்பிணமாய் ஆக்கிடுமிவ் வரசின் செய்கை
நடுங்கவரும் கொலைச்செய்கை உணர்ந்து பாரீர்!
அடுகொலையஃ தியற்றிடுவார் உயிர்குடித்தல்
அறமாகும் திரண்டெழுவோம் தமிழை வாழ்த்தி!

தமிழ்நாட்டின் தமிழர்க்கே ஒன்றுரைப்பேன்;
தமிழில்லா வாழ்க்கையினி நடத்தல் வேண்டா;
தமிழ் கருதாத் தமிழ்மகனிங் கிருத்தல் வேண்டா;
தமிழ் புகழா நாவிங்குப் பேசல் வேண்டா;
தமிழ் நலத்துக் குழையாக் கை அசைதல் வேண்டா;
தமிழ் நாடி நடவாக்கால் உலவல் வேண்டா;
தமிழ் மூச்சாய்க் கொளாதவுடல் இயங்கல் வேண்டா;
தமிழ் நினையா உளம்நிமிர்தல் வேண்டா அன்றே!

எழுந்திடுவீர் தமிழ்மக்காள்! சென்னைக் கோட்டை
எரியுண்டு நொறுங்கட்டும்! எதிர்ப்பார் சூழின்
விழுந்திடட்டும் தலைமண்ணில்! நம்மை யன்று
வியன்தமிழை அவர்எதிர்த்தால் சாதல் நன்றே!
முழங்கிடட்டும் தமிழ் முரசம் கடலினைப்போல்
மூளட்டும் தமிழ்உணர்வுக் கனல்தான் எங்கும்;
வழங்குபடை செல்லட்டும் தில்லி நோக்கி;
வன்றமிழர் சினத்தையவர் அறிந்திடட்டும்!

வடநாட்டின் தெருக்களெல்லாம் எரியுண்ணட்டும்;
வயிறெரிதல் போல்எரிக இந்தி மன்றம்!
நடுவாட்சிச் செங்கோட்டை தூளா கட்டும்;
நரிச் சூழ்ச்சிச் சட்டங்கள் அதில்வே கட்டும்!
கடைகெட்ட சாத்திரிகள் நந்தாக் கும்பல்
கனல்கின்ற சினநெருப்பில் பொசுங்கிடட்டும்!
படையாட்சி எழுந்தாலும் கவலை யில்லை;
பைந்தமிழை விடுவிக்கா துயிர்ப்புமில்லை! *

பாவாணரின்

இந்தித் திணிப்புப் பற்றிய அறிக்கை.

இந்தியால் தமிழ்கெடும் என்றும், இந்தி தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் தீங்குவிளைப்பது மட்டுமன்றி, அனைத்திந்தியப் பொது மொழியாவதற்கு எள்ளளவும் தகுதியற்றதென்றும், தவத்திரு மறைமலையடிகள், பேரா. க. சுப்பிரமணியம் (எம். ஏ., எம். எல்.) அவர்கள், பேரா. சோமசுந்தரபாரதியார் (எம். ஏ., பி. எல்.) ஆகிய முப்பெருந்தமிழ்ப் பேராசிரியரும் 1937-இலேயே எழுத்துவாயிலாகவும் வாய்மொழி வாயிலாகவும், திட்டமாகவும் வலிமையாகவும் தெரிவித்து விட்டனர்.

தமிழுக்கு அதிகாரிகள் தமிழ்ப் பேராசிரியரேயன்றி, பேராயகட்சி (*Congress*) அமைச்சர்களும் வடவரும் அல்லர். தமிழர் நூற்றுமேனி எண்பதின்மர் தற்குறியாதலால், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களும் பிறரும் மொழி நாகரிகம், பண்பாட்டுத்துறையில் தமிழ்நாட்டுப்படி நிகராளியர் (Representatives) ஆகார். தமிழைக்காத்தல் தமிழாசிரியர் கடமை. தமிழுக்கு நேரும் கேட்டை உணரக்கூடிய பொதுமக்கள் மாணவரே. வருங்காலத் தமிழ் நாட்டையாளும் பொறுப்பு வாய்ந்தவரும் அவரே. ஆதலால், பேரா. இலக்குவனுரைத் தண்டிப்பின், பேரா. மு. வ., பேரா. அ. சிதம்பரநாதனுர் உட்படத் தமிழாசிரியர் அனைவரும் பதவியை விட்டு விடுதல் வேண்டும்.

-ஞா. தேவநேயன்.

அறநெறிச்சாரம்.

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே; காய்வதன் கண்
உற்ற குணம்தோன்ரு தாகும்; உவப்பதன் கண்
குற்றமும் தோன்ருக் கெடும்.

To examine a thing, ne'er inclining to reproof or praise
Is by the men of wisdom done; for, in reproving,
The merits of the thing are missed. When praised,
Its defects attention 'scape.

பலகற்ரும் யாமென்ரு தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்ருர்க் கண்ணும் உளவாம் பலகற்ருர்க்
கச்சாணி அன்னதோர் சொல்.

Never praise yourselves saying "We are widely read!"
E'en a little parasol keeps off the brilliant sun.
Thus e'en men who've read a little have at times
A word-axis like-that keeps the scholars in a fix.

வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு
மெல்லென்றல் சால அரிதாகும்; அஃதேபோல்
வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னும் நெஞ்சு.

Though for endless days in water lying, a stone
Very rarely soft becomes. E'en so the vulgar.
Though hear they moral teachings every day
Their hearts are harder than the stone.

உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுண்ணுக் காலத்துக் கூராதாம்–தொக்க
உடம்பும் பொருளும் உடையான்ஓர் நன்மை
தொடங்காக்கல் என்ன பயன்?

Although on a mound of salt you sit and eat,
Unless 'tis used, the salt it flavours not your food.
So with a body strong and wealth amass'd if one
Starts not a good act, what's the use?

எள்ளிப் பிறருரைக்கும் இன்னுச்சொல் தன்நெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்,–மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுகல் ஆற்றின்
பிறிதெனினும் வேண்டா தவம்.

Though biting sarcasms do cut us to the quick
Cruel like fire brands on the heart,
Put out the fire if we can, with the water of wisdom,
No other penance do we need.

காலொடு கைஅமுக்கிப் பிள்ளையை வாய்நெறித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாயனையர்–சால
அடக்கத்தை வேண்டி, அறன்வலிந்து நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார்

Holding fast its limbs and forcing ope its mouth,
The mother feeds her babe with milk and ghee.
Like her are they who trom us discipline strong demand
And insist the moral law they themselves adopting it.

நுறுங்குபெய் தாக்கிய கூழ்ஆர உண்டு
பிறங்கிருங் கோட்டொடு பன்றியும் வாழும்;
அறஞ்செய்து வாழ்வதே வாழ்க்கைமற் றெல்லாம்
வெறும்பேழை தாழ்க் கொளீஇயற்று.

Eating gruel made of particles of grain
E'en a pig does live-with shining tusks
Only a righteous life is worth the name, and all the rest
Is like locking up an empty box.

Aranericharam.

(மொழியாக்கம்: ம. இலெ. தங்கப்பா.)

தமிழ் கூறும் குறிஞ்சி!

மா. எழில்முதல்வன், எம் ஏ.
துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை–5.

தோற்றுவாய்: ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெளிந்து சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல் ஒருபது பாட்டினுள் குறிஞ்சிப் பாட்டும் ஒன்றாகும். செறுத்த செய்யுள் செய் செந்நாவின், வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலனே இப் பாட்டை, ஆற்றல்சால் கேள்வி அறம் பொருள் இன்பத்தைப் போற்றிப் புனைந்த பொருளிற்றாய் யாத்தளித்தனன் என்க. தமிழ் நுதலி எழுந்த இக்குறு நெடும்பாட்டின் தனிப் பெரும் மாண்பினை நுனித்தறிவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

தனித் தமிழ் நூல்: இப் பாட்டின்கண் பயின்று வந்துள்ள சொற்கள் ஏறக்குறைய 1440 சொற்கள் ஆகும். அவற்றுள் மூன்று நான்கே வட சொற்கள். திசைச் சொற்கள் ஒரு சிலவே! எனவே ஒரு விழுக்காடுகூடப் பிறசொல் கலவாத தூயத் தனித் தன்மை இப்பாட்டிற்கு உண்டு எனலாம்.

பெயர்ப் பொருத்தமும், எழுந்த நோக்கமும்: அன்பொடு மரீஇய அகனைந்திணையுள் கூடல் ஒழுக்கத்தை நுதலிய பொருளாகக் கொண்டெழுந்தமையால் இது குறிஞ்சிப்பாட்டு என்னும் குறியீடு பெற்றது அஃதோடன்றி, குறிஞ்சித் திணைப் பாடல்களுள்ளும் இதுவே அளவில் நெடியதாகையால் பெருங்குறிஞ்சி என்ற பெயரையும் பெறுவதாயிற்று. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தும் முகத்தான் கபிலர் இப் பாடலை இயற்றினர் பிறபுல மன்னனை பிரகத்தனுக்குத் தீந்தமிழின் தெய்வ நலனையும், தமிழ் மக்களின் இனிய வாழ்வினையும் முற்ற உணர்த்தும் பெற்றியதாகப் புணர்தல் என்னும் ஒழுக்கத்தையே பொருளாகக் கொண்டு இவ்வருமையான பாட்டைப் புனையலாயினர்.

கதை கூறும் பாட்டு: கழகம் மரீஇய நல்ல நூல்கள் அனைத்தும் தனித்தனிப் பாடல்களாகவே அமைந்துள்ளன. உதிரியாகக்கிடந்த பாடல்களின் ஒருமைத் தொகுப்பே தொகை நூல்கள். அடிநிமிர்பில்லா அச் சிறு செய்யுட்கள் அனைத்தும் இமைப் பொழுதில் தோன்றி மறையும் நுண்ணிய உணர்வுகளையும், மன அசைவையும் உணர்த்துவனவே அன்றி ஒரு கதையையோ, பெரிய நிகழ்ச்சியையோ விளக்குவன அல்ல. கலித் தொகைப் பாடல்கள் சில கதை போலவே அமைந்திருப்பினும், கதை கூறும் தொடுஞ் செய்யுளாகவே அமைந்திருப்பது இக்

குறிஞ்சிப் பாட்டேயாம். ஆகலின் பிற்றைக் காலத் தொடர் நிலைச் செய்யுள்களுக்கு இதுவே தோற்றுவாய் எனக்கொளினும் அமையும்.

கதை அமைப்பும், கட்டுக்கோப்பும்: தாய் ஒருத்தி தன் மகளையும் தோழியையும் தினைப் புனத்திற்குக் கிளி கடியும் பொருட்டு அனுப்பி வைக்கிருள். தினைப் புனம் சென்ற தலைவியும் தோழியும் தம் கடமையைச் செய்கின்றனர். நண்பகல் வருகிறது. ஓரே வெப்பம்! இருவரும் நீராட விழைகின்றனர். மலைச் சாரலுக்குச் சென்று இழுமென இழிதரும் அருவியில் மூழ்கிக் களிக்கின்றனர் நீராடி மகிழ்ந்த நேரிழையர் அருகிலுள்ள அடவியுள் புகுந்து பல்வகைப்பட்ட வண்ண மலர்களைக் கொய்து கொணர்ந்து, மாலையாகக் கட்டுகின்றனர். அப்பொழுது அங்கே தலைவன் ஒருவன் வருகிருன். இனியன கூறி எதிர் நிற்கிருன். அவ்வாடவனைக் கண்ட அவர்கள் நாணிக் குறுகுகின்றனர். மெல்லியலார் இருவரும் சொல்லாடவே இல்லை. அந்த நிலையில் அத் தலைவனை அல்லாந்து கலங்குகின்ருன். காதற் பெண்ணின் கடைப் பார்வை கிட்டாதா என்று ஏங்குகின்ருன் அப்பொழுது வேட்டை நாய் ஒன்று வந்து வெறித்து நோக்குகிறது. தலைவி அஞ்சுகிருள்; அவள் மேனி நடுங்கி ஒடுங்குகிறது. அதனைக் கண்ட அத் தலைவன் பூங்கொம்பால் அதனைப் புடைத்து விரட்டுகிருன். பின் ஆண்டு மதம் பிடித்து ஓடிவந்த கடக்களிறு ஒன்றையும் கைவேலால் தாக்கி விரட்டுகிருன். பின் தலைவியின் அச்சத்தைப் போக்கி, ஆகம் முயங்கி அணி நுதல் நீவி இனியன கூறி நிற்கிருன். அதன் பிறகு அவ்விருவரும் அப் பூமலி சோலையின் கண்ணே பொழுதைக் கழிக்கின்றனர். தலைவன் இறுதியில் தலைவியை நோக்கி, "நாம் இருவரும் ஒன்றுகூடி விருந்து புறம்தரூஉம் பெருந்தண் வாழ்வினை மேற்கொள்வோம்; யான் பண்பும், பயனும் மிக்க அந்த அன்பு வாழ்வினையே நெடிது விழைகிறேன். விரைவிலே உன்னை ஊரறிய உற்ருர் அறிய நன் மணம் புணர்வேன் அதுகாறும் நீ ஆற்றியிரு" என அன்புரை கூறி, அவளை ஊரின் எல்லையிலே உள்ள உண்துறை வரைக் கொண்டு வந்து விட்டுவிட்டுப் பிரியாமனத்தோடு விடைபெற்றுச் செல்லுகிருன் அன்று முதல் தலைவன் அக்களவினையே விரும்பி நாள்தோறும் வந்து போகிருன். எத்தனை நாளைக்கு இப்படி வந்துபோக முடியும்? செய்தியை வெளிப்படுத்தி அவர்களைச் சேர்த்து வைப்பது யார் பொறுப்பு? தோழியின் கடமையன்ருே அது. ஆகவே தோழி அறத்தொடு நிற்கிருள். இதுதான் கதை. பாடல் தோழியின் கூற்ருக அமைந்திருக்கிறது. தலைவன் தலைவியரிடையே உயிராய், உசாத்துணையாய் அமைபவள் தோழியே ஆவள். ஆகலின் நல்லிசைப் புலவராம் கபிலர் பெருமானும் தோழியின் கூற்ருகவே பாட்டை அமைத்துக் கதையைக் கட்டுக்கோப்புடன் பின்னியிருக்கிருர்.

எடுப்பும் தொகுப்பும்: தோற்றத்தாலும் நாற்றத்தாலும் மகளது மன வேறுபாட்டை உய்த்துணர்ந்த செவிலி, அதன் காரணம் அறியும் பொருட்டு இறைவனைப் பரவுகிருள்; கட்டு விச்சியை அழைத்துக் குறி கேட்கிருள். இவ்வாறு அன்புச் செவிலி அலமருவதைக்கண்ட தோழி இதுதான் செவ்வி எனக் கருதி களவை வெளிப்படுத்துவாளாய் முதலில் ''சினவாதே'' என்ற பீடிகையோடு சொல்லத் தொடங்குகிருள். இதுதான் பாட்டின் தொடக்கம். வகை மாண்ட மாளிகைக்குத் தகை மாண்ட வாயில்போல இவ்வெடுப்பே பொருத்தமுற அமைந்து பாட்டிற்கு எழில் கூட்டுகிறது. பாட்டின் தொடக்கத்தில் தலைவி யின் துன்பமும், தோழியின் அச்சமும், செவிலியின் கவலையும் சில சொல்லால் செப்பமுறக்கூறப்படுகின்றன. இறுதியில்தோழி, ''நின் குற்றம் இல்லை; நிரை தொடியும் பண்புடையள்; என் குற்றம் யானும் உணர்கலேன்'' எனக்கூறி, எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் பண்டும் பண்டும் அடிபட்டு வந்த ஊழி வயமே என வலியுறுத்துவது அழகுபட அமைந்திருக்கிறது. தினைப்புனத்தில் கிளி கடிதல், அருவியாடல், தலைவனின் கூடல் இவ்வாருகத் தொடர்ந்து அடுத்தடுத்துக் காட்சிகளை அமைத்துத் தொடுத்துக் கூறும் கபிலரின் திறம் அளப்பரியதாகும். எடுப்பும், தொடுப்பும் ஏற்பமுற அமைந்த இப் பாடல் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இனிமை தரவல்லது ஆகும்.

ஓவியச் செய்யுளில் பாவியக் கூறுகள்: பிற்றைக் காலப் பெரும் பாவியங்கள்போல அளவிலே நீண்டதாக அமையா விட்டாலும், குறிஞ்சிப் பாட்டின்கண், பாவியக்கூறுகள் பலவும் கவினுற அமைந்துள்ளன. குறிஞ்சிப் பாட்டு ஒரு பெரும் பாவியம் அன்று; ஆனல் படிப்போரின் மனத்தில் அது பெரும் பாவியம் போன்ற உணர்வையே தோற்றுவிக்கிறது. (*Kurinji -pattu is not an epic; but it creates an illusion of epic*) சுருங்கச் சொன்னல் குறிஞ்சிப் பாட்டை ஒரு பாவியத் துணுக்கு (*Epic fragment*) எனக் கூறலாம்.

குறிஞ்சிப் பாட்டின்கண் நாம் காணும் தலைவன் கபிலரா லேயே, ''ஆகாண் விடை'' என அழைக்கப்படுகிருன். அவ னது மலர்ந்த மார்பும், வீங்கிய தோளும், தோற்றப் பொலிவும், அவன் பகைப்புறம் கண்ட பல்வேல் இளைஞரொடு வருவதும், கடகளிற்றை மடக்குவதும் இன்ன பிறவும் அவன் உருவும், திருவும் உடையவன் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. இவன் 'தன்னேரில்லாத் தலைவனே' என இயம்புவதில் தடையு முண்டோ? பாவியத்தின் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து இருக்க வேண்டும் என்பர். தலைவியின் நோயை அறிய நறை யும், விரையும் ஓச்சிச் செவிலி செய்யும் வழிபாடே வாழ்த்தாக அமைந்து விடுகிறது. தீந்தமிழ்ப் பாட்டின் தொடக்கத்திலேயே

தெய்வ மணம் கமழ்கிறது. காவியத்திற்கு மலை, நகர், நாடு முதலியவற்றின் வண்ணனை வேண்டாவா என வினவலாம். 'அருவி இழியும் அண்ணல் நெடுமலை; 'வருநர்க்கு வரைய வள நகர்' 'சாறயர்ந்தன்ன மிடாச் சொன்றி' என வருவும் தொடர் களை எல்லாம் அடுக்கி நோக்கினால் அவை அனைத்தும் நாட்டு வண்ணனை, நகர வண்ணனையாகவே முடிவதைக் காணலாம். மேலும் யானை, ஞமலி, மஞ்ஞை முதலிய குறிஞ்சிக் கருப்பொருள் களும் ஏற்றமுற இயம்பப்படுகின்றன. பாட்டின் பிற்பகுதியில் ஏறத்தாழ பதினைந்து வரிகள் மலையின் வண்ணனையாகவே அமைகின்றன. சிறு பொழுதாகிய மாலையையும் கபிலர் அழகு படக் காட்டுகின்றார். தலைவி தன் ஆயத்தாரோடு பளிங்கு சொரிந்தன்ன சுனையில் நீராடுவதும், தலைவி தலைவனோடு சோலையிலே பொழுதைக் கழிப்பதும், 'புனல் விளையாடல்' 'பூம்பொழில் நுகர்தல்' போன்ற இலக்கண நெறிகட்கு ஏற்பன அல்லவோ? தலைவன் தலைவியின் நுதலை நீவினன் என்று கூறு வதன் மூலம் 'பாவியிற் களித்தல்' என்னும் பாவிய நலனையும் கபிலர் பொருத்தியுள்ளார். ஆகலின் குறிஞ்சிப்பாட்டு பாவிய நலன்கள் அனைத்தும் செறிந்த சிறு பாவியமே ஆகும்

சுருங்கிய செய்யுளில் நெருங்கிய சுவைகள்: காப்பியத் தின்கண் 'நெருங்கிய சுவையும்' வேண்டற்பாலது எனத் தண்டியலங்காரம் விளம்பா நிற்கும். அளவால் சுருங்கிய அவ்வருமைப் பாட்டிலும் அத்தனைச் சுவைகளும் அமைந்து இருக்கின்றன. 'அன்னாய் வாழி' என்னும் தொடக்கம் முதல், 'சினவாதீமோ' என்னும் துணையும் அவலச் சுவையே மிக்கு பயின்று வருவதும், அதன் பின்னர் வரும் மலர்களின் பெயர்ப் பட்டியலில் அழகுணர்ச்சியின் காரணமாக வரும் உவகைச் சுவையும், அமைந்திருப்பதும், அதனை அடுத்துச் சூரறு மஞ்ஞை போலவும், அடுங்கரை வாழைபோலவும் தலைவி நடுங் கும்பொழுது அச்சச்சுவை அமைந்திருப்பதும், வேழம் எதிர்வந்த பொழுது தலைவன் தன்வலிமையால் அதனைப் புறங்காணச் செய் யும் இடத்தில் மறச் சுவை விளைவதும், இறுதியில் எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த தலைவனும் தலைவியும் ஊழ்வினை வயத்தால் ஒன்று கலந்தனரே என எண்ணும்பொழுது வியப்புச் சுவை பிறப்பதும் பயில்வோர்க்குப் புலனுகாமல் போகா. ''நல்லிசைப் புலவராய கம்ப நாடர் தம் பெரும் பாவியத்தின் கண்ணே, கடிமணப் படலம் கூறும்முன், எழுச்சிப் படலம், வரைக் காட்சிப் படலம், பூக் கொய் படலம், நீர் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம், எதிர்கோட் படலம், உலாவியற் படலம், கோலம் காண் படலம் எனப் பற்பல படலங்களை வகுத்துக்கொண்டு அவையிற்றில் எங்கும் அழகுணர்ச்சியையும் காமச்சுவையையுமே தூண்டுதற்குரிய செய்யுட்களை மிகுதியாக இயற்றிப் போந்தது போலக் கபிலரும், சின் சிறு நூலின்கண்,

களவு மணம் புகுதற்கு முன்னர் மழை பொழிதலும், அருவி யாடலும், சுனை குடைதலும், மலர் கொய்தலும், கோலம் கோட லும் ஆகிய அழகுணர்ச்சியைத் தூண்டும் செயல்கள் நிகழ்ந்த வாகக் கூறுவது படிப்போருக்கு ஒரு பெரும் பாவியத்தையே படிக்கிறோம் என்ற உணர்வை நுண்ணிதின் ஊட்டுகிறது'' எனப் பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனார் கூறுவதும் ஈண்டு நினைவு கூரத்தக்கது.

உவமை நலன்: நெல்லும், கரும்பும் நிலத்திற்கு அணியா மாறு போல, பாட்டுக்கு அணி உவமையே என்க. நல்லிசைப் புலவராய கபிலர் இக் குறிஞ்சிப் பாட்டின்கண் முப்பத்தைந்து உவமைகளைக் கூறியுள்ளார். அவற்றுள் இரண்டு உவமைகள் ஒரே வகையினதாக அமைந்துள்ளன எஞ்சிய முப்பத்து மூன்று உவமைகளும் கபிலரது நுண்மாண் நுழை புலனுக்கு எடுத்துக்காட்டாய் இலங்குகின்றன. 'பளிங்கு சொரிந்தன்ன பாய்சுனை'' என்பன போன்ற உவமைகள் பிற்காலத் தெழுந்த இல்பொருள் உவமை முதலியவற்றிற்கு அடிவேராக அமைந் திருப்பதும் காணத் தக்கதாகும்.

இயற்கைக் காட்சிகள்: பெண்டிர் கிளிகடியும் காட்சியும், அகலிரு வானத்து வீசுவளிகலாவும் அழகும், உரவுச் சினம் செருக்கித் துன்னுதொறும் வெகுளும் ஞமலியின் தோற்றமும், பழுமிளகு உக்க பாறை நடுவே மயங்கிக் கிடக்கும் மயிலின் கோலமும், அந்தி மாலையின் எழிலும், இரவுநேரத்தின் இனிமை யும், இன்ன பிறவும் கபிலரின் கைவண்ணத்தால் உயிரோவி யமாய்ப் பொலிந்து தோன்றுகின்றன. கபிலர் தீட்டிக்காட்டும் மாலைக் காலக் காட்சி அவரது முருகியல் உணர்வின் சிறந்த வெளிப்பாடு ஆகும்.

உள்ளுறை இன்பம்: மாந்த நெஞ்சத்தின் உணர்வுகளை மெய்யறிவு நோக்கோடு வெளிப்படுத்த உள்ளுறை உவமை களே ஏற்றக் கருவிகள் என்பர் அறிஞர். + குறிஞ்சிப் பாட்டின் கண் உள்ளுறை உவமைகள் எழிலுறக் கையாளப்பட்டுள்ளன.

+ ''The poet was inspired with an overmastering desire to link the present with the past and with the future, to blend all knowledge into one coherent system and to bring the experience of life, into one harmonious whole. For this purpose, allagory was an indespensable instrument. But the existence of facts for the allegory is the agency by which earthly passion is brought into relation with Philosophy and Theology and becomes their servant and interpreter''.

–W. W. Jackson, in his introduction to Dante's Convivus.

"பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுகற் கொக்கின் தீங்கனி உதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமோ டுண்டிப் பலவின்
நெகிழ்ந்துரு நறும்பழம் விளைந்த தேறல்
நீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட் டின்னியம் கறங்க ஆடுமகள்
கயிறூர் பாணியில் தளருஞ் சாரல்".

என்பது கபிலர் கையாளும் சிறந்த ஓர் உள்ளுறை உவமம் ஆகும். இதன்கண் "பிளகு உக்க பாறை அந்நிலத்து மாக்கள் உறைகின்ற ஊராகவும், நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும், மாம்பழத்தாலும், பலாப் பழத்தாலும் விளைந்த தேறல், தந்தை யாலும், தாயாலும் உளனாகிய தலைவனாகவும், பிரசம் இவரைக் கூட்டின பால்வரை தெய்வமாகவும், அதனை உண்ட மயில், உயர்ந்த தலைவனைத் தன் குலத்திற்கு ஒத்தானாகக் கருதி நுகர்ந்த தலைவியாகவும், அத்தேறலிற் பிறந்த களிப்பு, கள வொழுக்கத்திற் பிறந்த பேரின்பமாகவும், மயில் ஆடவாற்றுத் தன்மை வருந்திக் குறைந்த தன்மையாகவும்" அமைந்து உட் பொருளாக் குறிப்பாகச் சுட்டுகின்றன. தலைவியின் உள்ள உணர்வுகளை உள்ளுறை மூலம் தெரித்துக் காட்டும் கபிலரின் திறமதான் என்னே!

தீந்தமிழ்ப் பாட்டின் தெய்வ நலன்: நிறை இருங் கடல் குறைபட முகந்து கொண்டு வான வெளியில் மயங்கி வந்த கரு முகில்கள் மின்னும் காட்சியை முருகனது வேலின் ஒளி போன் றது எனப் புலவர் குறிப்பிடுகிறார். வானின்கண் இயற்கையாய்த் தோன்றும் மின்னலை முன்னியது முடிக்கும் முருகனோடு தொடர்பு படுத்தி இப்பாட்டில் வரும் நிகழ்ச்சிகட்கெல்லாம் தெய்வ ஆற் றலே காரணம் என்பதைக் கபிலர் புலப்படுத்துகிறார் எனலாம். தலைவன் தலைவியோடு உரையாடும்பொழுதும் மீமிசைக் கடவுளை வாழ்த்திக் கை தொழுது, பிரியேன் என வஞ்சினம் கூறி, அருவியின் தண்ணீரை அள்ளிக் குடிப்பதாகக் காட்டு கிறார் ஊழ்வினை வயத்தால் ஒன்று கூடிய அத் தலைமக்கள் குன்று தோறாடும் முருகனின் திருமுன் ஒன்றி நின்று உயிர் தளிர்க்கும் அக்காட்சி மிகச் சிறந்த தெய்வக் காட்சியேயாம்! தலைவன், "அறம் புணையாத் தேற்றினன்" என்கிறார் கபிலர். இப் பாட்டின்கண் அறத்தையும், பொருளையும் அதனொடு பொருந்திய இன்பத்தையும் எடுத்து இயம்பி அவற்றின் முடிந்த முடிபான வீட்டு நெறியையும், கபிலர் சுட்டிச் செல்வதுகாண்க. நூற்பயன் அறம் பொருள் இன்பம் வீடு அடைவதுதானே?

தோழியின் திறன்: குறிஞ்சிப் பாட்டிலே நாம் காணும் தோழி அறத்தொடு நிற்புழி தலைவியின் குடிப் பிறப்பிற்கும்,

கற்பு, நாண் முதலியவற்றிற்கும், செவிலியின் அறிவிற்கும், தலைவனின் பெருமைக்கும் தன் காவலுக்கும் மாறுபடாதவாறு ஒழுகுவதும் காணத்தக்கது. அறத்தொடு நிற்கும் தோழி எளித்தல் முதலிய ஏழு திறத்தினுள் ஏற்பன கொண்டு நிற்றல் வேண்டும் எனத் தொல்காப்பியனார் கூறுவர். அவற்றுள் கூறுதல், உசாதல் ஒழிய எனைய ஆறு வகையானும் அறத்தொடு நின்று தோழி உண்மை விளக்கும் திறன் அவளது நயத்தக்க நாகரிகத்தைப் பொள்ளெனப் புலனுக்குகிறது.

காதலின் மாட்சி: குறிஞ்சிப் பாட்டின் தலைவி,

"இருவேம் ஆய்ந்த மன்றல் இதுவென
நாமறி வுருலிற் பழியும் உண்டோ
ஆற்றின் வாரார் ஆயினும் ஆற்ற
ஏனை உலகத்தும் இயைவதாம் நமக்கு".

என இயம்புகிருள். 'யாமே தேர்ந்து கொண்ட களவு மணம் இஃதுஎன யாமே தாய்க்கு அறிவுறுத்தின், அது பழியும் ஆமோ? யாம் அறிவுறுத்திய பின்னர் அவர் நெறிப்பட்டு வாராதொழியினும் எம் உயிர் போமளவும் ஆற்றி இருப்பேன். ஆற்றி இருப்பின் அடுத்த பிறவியிலேயாவது இக் காதல் நிறைவேறுவது உறுதி'' என்பதுதான் தலைவியின் கூற்று.

"இம்மை மாறி மறுமையாயினும்
நீயா கியரென் கணவனை
யாணு கியர்நின் நெஞ்சு நேர்பவனே"

எனக் குறுந் தொகைத் தலைவி கூறியதுபோல இவளும் கற்புக் கடம் பூண்டு உறுதியோடு பேசுகிருள்! தமிழ்ப் பெண்ணின் அக் காதல் நெஞ்சம் எத்துணை உயர்ந்தது! இதுவன்ரோ காதல்! இதுவன்ரோ காதலின் ஆற்றல்! இத்தகு காதலையே ''தமிழ்'' எனக் கொண்டு கபிலர் பாடியது எவ்வளவு சிறப்புக் குரியது!

முடிவு: ஆகவே இதுகாறும் கூறியவற்ருல் கபிலரால் அருளிச் செய்யப்பெற்ற இக் குறிஞ்சிப் பாட்டு, தூய தமிழ் நூல் என்றும், கதை கூறும் முதல் நூல் என்றும், பாவிய நலன்கள் பலவும் ஒருங்கே செறிந்தது என்றும், உவமை நலனும் சுவை இன்பமும் கெழுமியது என்றும், இயற்கையை ஏற்றமுறப் பாடுவது என்றும், அறம் பொருள் இன்பம் வீடெனும் நால்வகை உறுதிப் பொருள்களையும் நாட்டுவது என்றும், தமிழ் மக்களின் காதல் மாண்பினைக் கிளந்தெடுத்து விதந்தோதுவது என்றும் அறிந்தோம் என்க.

இவர்கள் எல்லாரும் முட்டாள்களா?

ஆளுங் கட்சியினரே அறிவுடையவர்களா?

(ஆட்சியிலுள்ளவர்கள் எல்லாரும் அறிஞர்களல்லர். சூழ்நிலையாலும், பணத்தாலும், ஏமாற்றுகள், எத்து, புரட்டுகளாலுமே அரசுக்கட்டிலேறிய அவர்கள் நாட்டின் கண் உள்ள அறிஞர்கள் கூறுகின்றவற்றை எப்பொழுதும் செவிமடுக்க வேண்டும். அல்லாக்கால் ஆட்சி எத்துணை வலிவு படைத்ததாயினும் விரைவில் சிதைவுறும். இந்தித் திணிப்பை நூற்றுக்கணக்கான அறிஞர்களும், பேராசிரியர்களும், அரசியல் வல்லுநர்களும் நாள்தோறும் கண்டித்த வண்ணம் உள்ளனர். அவற்றுள் சிலவற்றைத் தாமே பெரிய அரசியல் வல்லுநர் என்று தருக்கிப் பேசும் திரு பக்தவத்சலத்தின் பார்வைக்கு வைக்கின்றோம்.

○ இருக்கும் ஆங்கிலத்தோடு, இந்தியும் ஆட்சி மொழியாவதால் ஆட்சி அலுவல்களில் குழப்பம் ஏற்படும். இந்தித் திணிப்பால் ஒற்றுமை ஏற்படாது. உள்ளமும் உணர்வும் ஒன்றிய ஒற்றுமையே தேவை. விளம்பரத் தாள்கள், அஞ்சல் தலைகள், பண விடைகள் மற்றும் அரசினர் தாள்களின் வாயிலாய் இந்தி மறைமுகமாகத் திணிக்கப்படுவது மிகவும் வருந்தத்தக்கது.

–இந்திய முன்னாள் படை முதல்வர் திரு. கரியப்பர.

○ இந்தி பேசாத மக்களின்மீது இந்தித் திணிப்பு கூடாது.

–விநோபா அடிகள்.

○ ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடித்தல் வேண்டும். இந்தித் திணிப்பை மாநில அரசுகள் துணிந்து எதிர்த்தல் வேண்டும். சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி நடுவணரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

–தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி.

○ மொழியைப் பரப்புவதில் வலுக்கட்டாயம் கூடாது. இந்தியைத் திணிப்போர் செல்லும் வழி தவறானது. வலுக்கட்டாயமாக எந்த மொழியையும் பரப்ப முடியாது.

–'உத்தரப் பிரதேச' முதலமைச்சர் கிருபளானி அம்மையார்

○ விருப்பமுள்ளவர் இந்தி கற்கலாம். ஆனால் ஆங்கிலத்தை அடியோடகற்றிவிட்டு இந்தியை நுழைப்பது எதிர்ப்புக்குரியதே.

–பார். எம். ஏ. முத்தையா.

○ இந்தியை யார்மீதும் எவராலும் சுமத்தல் இயலாது. குழந்தைகள் தாய் மொழியிற் கல்வி பெறுவதே சிறப்பாகும். ஆட்சி அலுவல் கட்கு ஆங்கிலம் இன்றியமையாதது. **–திரு. கிருபளானி.**

○ இந்தித் திணிப்பு நல்லுணர்வுக்கும், நாட்டுப் பற்றுக்கும் தீங்கு விளைவிக்கும். ஒருமைப்பாட்டைக் கெடுக்கும். இடத்துக்கிடம் மாறுபட்டுள்ள பேச்சு மொழியாகிய இந்தியை எப்படி நாடு முழுவதற்கும் பொது மொழியாக்க முடியும்? **–திரு. பி. டி. இராசன்.**

○ இந்தித் திணிப்பைக் கைவிடுங்கள்! மக்கள் விருப்பத்துக்கிணங்கச் செயல்படுங்கள். தவறினுல் தீய விளைவுகள் நேரும். எல்லாத் தேசிய மொழிகட்கும் ஒத்த உரிமை தரவேண்டிய அரசு, இந்திக்கு மட்டும் தனிச் சலுகையும் வளர்ச்சி வாய்ப்பும் அளிப்பது பெருங் குற்றமாகும். கனடா, சுவிட்சர்லாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற சிறிய நாடுகளில் பல மொழிகள் ஆட்சி மொழிகளாயிருக்க, 46 கோடி மக்கள் வாழும் இந்தியாவில், 36 விழுக்காடு மக்களே பேசும் இந்தி மொழி மட்டும் ஆட்சி மொழியாவது எவ்வகையில் பொருந்தும்? **–திரு. கருமுத்து. தியாகராசன்.**

○ பொது மொழியாகும் தகுதியை இந்தி ஒரு பொழுதும் பெற முடியாது. இந்தி பெரும்பான்மை மொழி என்பது ஒப்ப முடியாத கருத்து. இந்தித் திணிப்பால் பேராயக் கட்சிக்கு வீழ்ச்சியே.
–கோவைத் தொழிலறிஞர் அறிவியல் முனைவர் திரு. கோ. துரைசாமி

○ பல நெருக்கடியான வேலைகள் நடுவணரசிற்கு இருக்க, இப் பொழுது இந்தி மொழியைப் புகுத்துவதற்கு என்ன உடனடித் தேவை? இந்தி பொது மொழியானுல் தென்னாட்டினர்க்குப் பெருந் தீங்கு விளையும். இந்தியைத் திணிப்பதனுல் என் உள்ளத்தில் கூடப் பிரிவினை உணர்ச்சி தோன்றிவிட்டது. இத் திட்டத்தால் நாடு 15 பகுதிகளாகச் சிதறுண்டுபோம். **–திரு. இராசாசி.**

○ இந்தி ஆட்சி மொழியாவதால்..... நாட்டின் பிற மொழிகள் இரண்டாந்தர நிலையினை அடைந்து இயற்கையான வளர்ச்சி பெறும் வாய்ப்பை இழக்கும். இந்தி பேசா மக்களின் உணர்வுகள் தாக்கப் படும். நாடு பிளவுபடும். மக்களின் வாய்மொழி எதிர்ப்பு எரிமலையாக வெடிக்கு முன்னர் இந்தித் திணிப்பைக் கைவிடுக.
–மேற்கு வங்க அறிஞர் பதினல்வரின் அறிக்கை.

○ இந்தித் திணிப்புக்கு முடிவுகட்ட ஒரே வழி பேராயக் கட்சி ஆட்சிக்கு முடிவு கட்டுவதேயாகும்.
–திரு. கிருட்டினசாமி பாரதி.

○ அரசினர் அலுவல்களில் இந்தியைக் கொணர்தலை உடனடியாக நிறுத்திவைத்தல் வேண்டும். நேருவின் வாக்குறுதியைப் புறக்கணித்துவிட்டுத் தான்தோன்றித்தனமாக, விளைவுகளை எண்ணுயல் நடந்து கொள்வது வருந்தத்தக்கது. ஆங்கிலத்தைப் போல், ஐயத்திற்கிடமின்றித், தெளிவாக, வரையறுத்த நடையில் இந்தியைப் பயன்படுத்தல் முடியுமா என்பது மெய்ப்பிக்கப்பட வில்லை. அப்படியே முடிந்தாலும் நாட்டுப் பொது மொழியாகும் தகுதி இந்திக்கில்லை. மற்றும் அரசினர் பொதுத் தேர்வுகளில் இந்திக்கு ஒத்தவாய்ப்பு என்பது அடிப்படை உரிமைக்கு உலை வைப்பதாகும். இஃது ஒற்றுமை உணர்வைக் கெடுத்துப் பிரிவினை உணர்வு வலுவடைதற்குத் துணை புரியும். இந்தி திணிக்கப்பட வில்லை என்ற இந்திய முதலமைச்சர் கூறுவது உண்மையற்றது. இதனை எடுத்துக் காட்டித் திருத்த வேண்டிய அடிப்படைப் பொறுப்பு பேராயக் கட்சித் தலைமையினர்க்கும் மாநிலத் தலைமை அமைச்சர்கட்கும் உண்டு. **–தினமணி. 19-1-1965.**

மனை புகு மகட்கு!

புதுவை. முதுகண்ணன்.

அகப்புற வியல்:

நீடு துயில்விலக்கி நெஞ்சம் விகாநினைவின்
பாடு தெரிந்தொழுகல் பண்பாகும்-ஆடும்
கொடிதழுவக் கொம்பூன்றும் கோல்வகாயாய்! நல்லார்
அடிதழுவல் அன்றே அடைவு.

அங்கண் விசும்பில் அவிர்கதிர் ஞாயிற்றுல்
திங்கள் கலைநிரப்பும் செய்திபோல்-தங்குமனை
ஆளும் அமைவுடையாய்! அன்பறிவு பூக்கவரு
நாளும் திகழ்வாய் நயந்து.

வினையூன்று கேள்வன் விரிதுயரை மாற்றல்
மனையூன்று வாழ்வின் வகையாம்-அனையின்ற
அன்புடையாய்! இல்லதென்? ஆன்ற அருள்விகாயும்
பண்புடைமை வீட்டில் பகர்.

எதிர்வாய் துறக்க! இழுமென்சொல் அன்பின்
உதிர்வாய்ப் பிறக்க உறைக!-கதிர்வாய்
ஒளியுமிழுங் கண்ணுதலாய்! உள்ளமைதி தோன்றக்
களியுமிழும் சால்புணர்வைக் காண்.

புக்க மனைக்கிழவோர் போற்றிசெய நின்னெழுக்கம்
மிக்க துணையாய் விளங்கலால்-தக்கநெறித்
தாய்க்கும் பொருள்விகா தந்தைக்கும் தாழ்குழலாய்,
வாய்க்கும் பெருமை வளர்.

வரும்நட்புச் சுற்றம் வணங்கிவர வேற்பாய்
தரும்பெட்பு வான்முகம் தாவ-விரும்பட்டில்
சென்று சுவைப்பண்டம் தேர்ந்திட்டுத் 'தேமொழீ,
தின்று மகிழ்ந்திடச் செய்.

கடமை உணர்வூட்டும் கல்வியால் நெஞ்ச
மடமை தவிர்;மட மானே!-நெடுஞ்சிறப்பின்
பாட்டும் இலக்கியமும் பண்ணவரும் வாழ்வியகலக்
கூட்டும் நெறிவிளக்கங் கொள்.

தையல் கலையும் தரும்புகழ் ஓவியமும்
மையல் மனந்திருத்தும் மாண்பிசையும்-வையம்
தழைக்கப் பயில்;பொன்னே! தாவுமெழில் இல்லம்
இழைக்கத் துணையாம் இவை.

*

கதிரவனில் "பறக்கும் பறவைகள்".

வியாசை சரவணகுமார் பி. எசி.

தோற்றுவாய்: மாந்தன் தோன்றிய நாள்முதலே அவனது கவனத்தைக் கதிரவனும் திங்களும் ஈர்த்து வருகின்றன. நிலவில் பல கரிய இடங்களைக் காண்கின்றோம். அவை முயலென்றும், மானென்றும், 'பாட்டி வடை சுடுகிறாள்' என்றும் எத்தனைக் கதைகள்! பாடல்கள்!! அறிவியலோ அவற்றுக்கு வேறு விளக்கங்கள் தருகின்றது. நிலவில் மட்டுமே இத்தகைய களங்கங்கள் இல்லை. கதிரவனில்கூடப் பல கரும் புள்ளிகள் (Sun Spots) காணப்படுகின்றன.

புகைக் கண்ணாடியின் வழியாகக் கண்டால் கதிரவனில் சில கரும்புள்ளிகள் தெரியும். தொலை நோக்கியின் வழியாக அவற்றை நன்கு காணலாம். ஆனால் ஓர் எச்சரிக்கை. எக் காரணம் கொண்டும் தொலைநோக்கியின் மூலமாகக் கதிரவனை நேரிடையாகக் காணல் கூடாது. காணின் கண்களுக்குத் தீங்கே. அதனால் தொலை நோக்கியைக் கதிரவனை நோக்கிப் பிடித்து அதன் சாயலை (பிம்பத்தை) ஒரு திரையில் விழச் செய்யுங்கள். கரும்புள்ளிகளைத் தெளிவாகக் காணலாம்.

வான நூல் தரும் வரலாறு: வான நூல் வரலாற்றில் கரும் புள்ளிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கி. மு. 28-இல் சீன நாட்டார் கதிரவனில் கண்ட புள்ளிகளைப் "பறக்கும் பறவைகள்" எனக் குறிப்பிட்டுள்ளனர். 1607-இல் கெப்ளர் அவற்றை அறிவன் (Mercury) கோளின் நிழல் என எண்ணினர். ஆனால் 1610-இல் கலிலியோ தமது தொலை நோக்கிகளின் வழி அவை கதிரவனின் மேலுள்ள புள்ளிகளே என்று முடிவாக்கினர்.

தற்கால ஆய்வுகள்: கதிரவனில் கரும் புள்ளிகள் தோன்றுவதற்கேற்ப நமது குருதியில் மாறுதல்கள் ஏற்படுவதாக உருசிய அறிவியலார் கூறுகின்றனர். குருதியிலுள்ள வெள்ளையணுக்கள் மிகுதியாவதாயும், சிவப்பணுக்கள் குறைவதாயும் சல்சு (N. A. Schultz) என்பார் கூறுகின்றார். கரும்புள்ளிகளின் எண்ணிக்கையை ஆண்டுதோறும் கணக்கிட்டுப் பார்க்க அவை சரியாகப் பதினோர் ஆண்டுகட்கு ஒருமுறை மிகுதியாகத் தோன்றுவது தெரிகின்றது. ஆயினும் அதற்கான காரணம் இதுவரை கண்டறியப் பெறவில்லை. மேலும் இந்தப் புள்ளிகள் ஓரிடத்தில் நிலையாக இராமல் இடமிருந்து வலமாக நகர்கின்றன. இதிலிருந்து கதிரவன் தன்னைத்தானே சுற்றிக் கொள்வதை அறியலாம்.

கரும் புள்ளிகள்தாம் என்ன? கரும்புள்ளிகளை முதலில் கண்ட கலிலியோ அவற்றை ''மிதக்கும் கருமுகில்கள்'' என்றார். ஆனால் எரிகோளமாயிருக்கும் கதிரவனில் கருமுகில்கள் மிதப்பது யாங்ஙனம்? எனவே, சிலர், நிலவிலிருப்பதைப் போன்ற எரிமலைகளாகவோ, மலை, பள்ளத் தாச்குகளாகவோ இருக்கலாம் என்பர். வானியலார் சிலர் அவற்றைப் புயல் வீசும் புள்ளிகள் (Storm Spots) என்பர். ஆனால் அண்மைக் காலத்து ஆய்வுகளோ கரும் புள்ளிகள்தாம் கதிரவனிலேயே அமைதியான இடங்கள் என முடிவு கட்டுகின்றன. இக் கரும்புள்ளிகள் தோன்றக் காரணம் என்ன? கதிரவனின் உள்ளிருந்து வெப்பக் காற்று மேற்பரப்பை நோக்கி வரும்பொழுது மேற்பரப்பு அகன்று வட்டமாக வாயை விரிக்கின்றது. இவையே நமக்குக் கரும் புள்ளிகளாகத் தோன்றுகின்றன.

கரும்புள்ளிகளின் அமைப்பு: கரும் புள்ளிகள் உண்மையில் கருநிறமுடையனவல்ல. அவை அவ்வாறு தோன்றக் காரணம், பிற இடங்களைவிட அங்கே வெப்பம் குறைவென்பதே. அவை புள்ளிகளுமல்ல. ஏனெனின் அவற்றின் அளவு நம்மை வியப்பிலாழ்த்தும். ''சிறிய புள்ளீகள்'' எனப்படுபவை சில நூறு கற்கள் விட்டம் கொண்டவை. பெரிய புள்ளிகளோ ஆயிரக் கணக்கான கற்கள் விட்டம் கொண்டவை காட்டாக, 1629-இல் காணப்பட்ட கரும் புள்ளி ஒன்றின் நீளம் எழுபது நூறுயிரம் கற்கள். 1947-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் கண்ட புள்ளி ஒன்றே இதுகாறும் கண்டவற்றுள் மிகப் பெரிதாம். அதன் பரப்பு அறுநூறு கோடி கற்பரப்பு உடையது. அவ்வாறாயின் அப் புள்ளியினுள்ளே ஏறத்தாழ நூறு நில உலகை அடைக்கலாமே! மேலும் கரும் புள்ளிகள் வெறும் புள்ளிகள் அல்ல. ஒளியைத் தரும் புள்ளிகளே! ஒரு கரும் புள்ளி நூறு நிலவுகளுக்கு ஈடான ஒளியைத் தரவல்லது.

புள்ளியும் உலகமும்: எங்கோ எட்டாத் தொலைவில் இருக்கும் கதிரவனில் உள்ள கரும் புள்ளிகள் நிலத்தின் மீதும், அதிலுறையும் மாந்தர் மேலும் ஆட்சி செலுத்த முடியுமோ வெனில்-'ஆம்' என்பர் அறிவியலார். அலெக்சாந்தர் சிசுவிசுக்கை (Alexander Chizhevsky) என்பார் கரும் புள்ளி கட்கும் பிளேகு (Plague) நோய்க்கும் தொடர்புள்ளதென்கிறார். அவர் தமது கூற்றை மெய்ப்பிக்கவில்லை யாயினும், நோய் பரப்பும் நுண்ணுயிர்கட்கும் கதிரவனுக்கும் தொடர்புள்ளதாக முடிவு கூறுகின்றார். மேலும் பெரிய புள்ளிகள் தோன்றுங்கால், நில உலகில் காந்தப் புயல்களும், தென் வட முனைகளில் அவிரொளித் தோற்றங்களும் ஏற்படுகின்றன. பர். இடக்லசு (Dr. Dauglas) என்பார் நிகழ்த்திய ஆய்வு ஒன்று ஈண்டு நோக்கத் தக்கது. அவர் பல்லாண்டு முதிர்ந்து நிற்கும் 'பைன்' மரங்களை

அவர் நினைவாக.

தமிழ் விடுதலை ஆகட்டும்!

பாவேந்தர் பாரதிதாசன்.

சலுகை போனால் போகட்டும்-என்
அலுவல் போனால் போகட்டும்.
தலைமுறைஒரு கோடி கண்ட-என்
தமிழ் விடுதலை ஆகட்டும்!

பிள்ளை பிறந்தேன், யாருக்காக?
பெற்ற தமிழ்மொழிப் போருக்காக.
உள்ளம் இருப்பதும் தோள் இருப்பதும்
உயிர்நிகர் தமிழ்ச் சீருக்காக.

போனால் என்உயிர் போகட்டும்-என்
புகழுடல் நிலை ஆகட்டும்!
தேனால் செய்தஎன் செந்தமிழ்தான்
திக்கெட்டு மேதொழ நிற்கட்டும்!

(முன் பக்கத் தொடர்ச்சி)

அறுத்து, அவற்றுள் காணப்பட்ட "ஆண்டு வளையங்களை" ஆய்ந்தார். அவ் வளையங்கள் மரத்தின் ஆண்டு முதிர்ச்சியை காட்டுவன. அவற்றுள் சில வளையங்கள் அகலமாயிருந்தன. அக் காலங்களில் கதிரவனிலும் கரும் புள்ளிகள் மிகுதியாயிருந்தன அவர் கண்டதும் கிரின்விச்சு வானியல் நிலையத்தார் கண்டதும் ஒத்திருந்ததாம். எனவே கரும்புள்ளிகள் மிகுதியாகும் காலத்தில் மழை மிகுதியாகப் பெய்து, மரங்கள் நல்ல வளர்ச்சியடைந்திருத்தல் வேண்டுமென அவர் முடிவு கட்டுகின்றார். *

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

நூல் நிறை.

"பாவேந்தர் பாரதிதாசன்"

ஆசிரியர்: மு. மாணிக்கம், அன்பு வெளியீடு, புதுச்சேரி.

விலை: 50 காசு.

பாவேந்தர் பாரதிதாசனின் வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிவிக்கும் பாடல் நூல். வெண்பாவானும், இடையிடையே கலி வெண்பாவானும் இயன்றது பாரதிதாசனின் வாழ்க்கைச் செய்திகளையும், அவர்தம் பண்பு நலன்களையும் தெரிவித்தலே அன்றிப் பாடல்கட்குத் தனிச் சிறப்பில்லை. சொல்லும் பொருளும் இயையத் தொடுத்த செறிந்த நடையையல்லாது கட்டுத் தளர்ந்த நடையினையே நூலிற் காண்கின்றோம். வேண்டாத வகையுளிகளும், பொருள் நலம் குறைந்த சொற்றொடர்களுமே இதற்குக் காரணம். வட சொற்கள் மிக மிக மலிந்து சுவைக் கேடு பயக்கின்றன. தளைப் பிழைகளும் பல உள. ஆங்காங்கு ஒரு சில பாடல்கள்-குறிப்பாக, 'கவிதைச் சிறப்பு', 'பாரதிதாசன் பண்பு' எனுந் தலைப்புகளின் கீழ் உள்ள சில வெண்பாக்கள்-நினைவில் நிற்கத் தக்கன. செப்பமான நடையான் இயன்றிருக்குமாயின், பாரதிதாசனைப் பற்றிய சிறு வரலாறுக இந்நூல் நிலை பெற்றிருக்கும்.

-கல்லாடன்.

இரங்கல்...!

அண்மையில் நடந்த தமிழ் மீட்சிப்போராட்டங்களில் அரசினரின் வெறித்தனத்திற்குப் பலியான செந்தமிழ் மறவர்கள் அத்தனைப் பெயர்களுக்கும், வெட்டுண்டு துயர் மூங்கிக் கிடக்கும் இளங் காளையர்க்கும், விழுப்புண்பட்ட விறல் பொதி தடந்தோள் மறவர்கட்கும் எங்கள் ஆழ்ந்த துயரமும், இரக்கமும், நன்றியும், வணக்கமும் உரியவாகுக! அவர் தம்மைப் பாராட்டிப் புதிய புறநானூறான 'தமிழ் நானூறு' என்ற பனுவல் விரைவில் உருவாக்கப் பெறும் ஒவ்வொரு மறவர்க்கும் ஒவ்வொரு பாடல் ஆக நானூறு பாடல்கள் பாடி முடிக்கப்பெறும். பாடல்களில் உண்மை வரலாறே பொதியப் பெறுமாகையால், இப் போராட்டங்களில் உயிர் விடுத்த மறவர் தம்மைப் பற்றிய மெய் நிகழ்ச்சிகளை அறிந்தார் தென்மொழிக்கு எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.

தமிழக மறுமலர்ச்சி வரலாற்றை உருவாக்கப்போகும் மாணவர்குல மறவர்களுக்கு எம் நெஞ்சுகந்த பாராட்டுகள்!

-பெருஞ்சித்திரன்.

நாட்டைக் காதலிக்கிறேன்!

புலவர். தி. நா. அறிவுஒளி.

''என்னுயிர் மக்கள் குமுகாயத்துக்கே உரியது. ஆதலால் என்னுயிர் உள்ளளவும் அதற்காக என்னுலியன்ற வரை உழைப்பது என்னுரிமையாகும். நான் இறக்கும் பொழுது- இறுதி உயிர்ப்பு வரை-உழைத்துத் தீர்த்துவிட வேண்டும். ஆதலால் நான் மிகுதியாக உழைக்க உழைக்க மேன்மேலும் என் உயிர் வாழ்வு நீண்டு பெருகும். வாழ்க்கையை வாழ்க்கைக் காகவே வாழ்ந்து இன்பம் பெறுகிறேன். வாழ்க்கை என்பதைச் சிறு மெழுகுத் தீரி விளக்காக நான் கருதவில்லை. அஃது ஓர் ஒப்பற்ற தீப்பந்தம். இச் சமயம் இஃதென்பாற் கிடைத்துள்ளது எத்துணை மிகுதியான அளவுக்கு இதைச் சுடர் விட்டெரியச் செய்யமுடியுமோ, அவ்வளவுக்கு மிகுதியாகச் சுடர்விட்டெரியச் செய்ய வேண்டுமென விரும்புகிறேன். அவ்வாறு செய்தபின் வருங்கால மக்களிடம் இதனை ஒப்படைத்து விடுவேன்''- நாடகாசிரியர் சியார்சு பெர்னார்டு சா கூறிய கருத்து இஃது. என்னுள்ளக் கருத்தின் மொழி பெயர்ப்பாக விளங்குகிறது. வாழ்வைச் சிறுபுன்மை அளருக்கிக் கொள்வோர் எண்ணியறி தற்கு அவர் தந்த தெளிவுரை இது.

மக்கள் உழைப்பு வாழ்வோடு எவ்வளவு இணைந்திருக்க வேண்டும் என்பதையும் உழையா வாழ்வின் முறை கேட்டையும் இக் கருத்து நன்கு தெளிவாக்குகிறது. மக்கள் செல்வத்தைக் காதலிக்கின்றனர்; அஃது இன்றியமையாததாகையால்! வாழ்க்கை வாய்ப்புகளை அடைய விரும்புகின்றனர்; மகிழ்ச்சி யாக வாழ்வதற்காக! ஆனால் தங்களை மட்டுமே கவனித்துக் கொள்ளும் இவர்கள் மற்றவர்களையும், தன்னின மக்களின் பெரிய வீடாகிய நாட்டையும், உலக மாந்தரின் குடிவீடாகிய 'உலகத்தையும்' அணுவளவேனும் எண்ணுகிறார்களா? அவ் வாறு எண்ணப் பயிற்றப்பட்டார்களா? 'உலகவர், நாட்டவர்' என்ற உளவியல்பு மக்களுக்கு உருவாக்கப்பட்டதா? இல்லை யென்றே கூறல்வேண்டும். உணவை விரும்பக் கற்றுக்கொடுப்ப தில்லை; பசி இயற்கை உந்துதலாக அமைவதால்! பெண்ணைக் காதலிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை; அது பாலுழுச்சி யின் பருவ வேட்கையாதலால்! ஆனால், நாட்டுணர்வும் ஞால உணர்வும் பயிற்றப்படவே வேண்டும். ஏன்? மக்கள் தன்னலத் தோடு பிறக்கிறார்கள். தன்னலத்திலிருந்து விடுதலை பெறவே வாழ்வில் பயிற்சி பெறுகிறார்கள். அப் பயிற்சியைச் செம்மை யாக ஒரு மன்பதையளிக்க வேண்டும். அப் பயிற்சியை அளிக் கத் தவறும் மன்பதை, தன்னைத்தானே தற்கொலை செய்துகொள் கிறது என்றே கருதல் வேண்டும்.

தமிழர்கள் கூட்டம் இடைக் காலத்தில் சோற்றுப் பிண்டங் களாக தன்னலப் பேய்களாக-வாழக் கற்றுக் கொண்டது. அத னால்தான் தமிழினம் வளர முடியாது போய்விட்டது. நாட் டுணர்வைவிட வீட்டுணர்வும், நாட்டுத் தொண்டைவிட வீட்டுத் தொண்டும் மிக்கவர்களாகத் தமிழர் பயிற்றுவிக்கப்பட்டனர். 'தன்னலம்' என்பதை மிகக் குறுகிய எல்லையில் சிறைவைத்து அதனடிமையாக மக்கள் மாறியதால்தான் அரசியல் பிணக்கு களும், வல்லாட்சியும், அடிமைத்தனமும், அடக்கு முறையும், கொடுங்கோன்மையும் உலகில் வலிமையுற்றது. தெளிவற்றதைப் பற்றித் திட்டவட்டமாகப் பேசும், எழுதும் திறமை சமயத்துறை யினர்க்குரியது. அதேமுறை அரசியல்துறையிலும் செல்வாக்குப் பெற்றது அதனால் மன்பதை இரு முனைகளில் அழுகிப் பாழ் படலாயிற்று. இவ்விரு ஆகா நெறிகளையும் பொழுது வீழ்த்தினு லொழிய உண்மையான உரிமை வாய்ந்த இன்ப வாழ்வு வாழும் மக்களுலகை உருவாக்குவது அரிதாகும். அரசியல், சமயம் என்பவை மக்களால் உண்டாக்கப்பட்ட பணியாட்கள் என்பதை உலகம் தெளிவாகப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

நாம் கூறும் கருத்துகள் பலருக்கு வெறுப்பையளிக்கக்கூடும். 'இராபர்ட்டு இலிண்டு', "ஆயிரம் முறை கேட்ட பொய்யை நம்புவது எளிதாக இருக்கிறது; ஆயின், ஒரு முறைகூடக் கேட் டறியாத புதிய உண்மையை நம்புவதுதான் மிகவுந் துன்பமா யிருக்கிறது" என்றார். அதுபோன்றே நம் கருத்துகள் நம்புவ தற்கும் ஏற்பதற்கும் பலருக்குத் துன்பத்தைத் தரும். அதற்காக நாம் கூறவேண்டியதைக் கூறாமல் இருக்க முடியுமா? தனிப் பட்டவர் நலனைப் போன்றே நாட்டு நலனும் மிகமிக இன்றி யமையாததே. நாட்டொழுக்கம் நன்கு பேணப்படாவிடின், தனியார் வாழ்வும் செம்மையாக நடைபெறாது

நாட்டைக் காதலிக்க, நாட்டின்மீது ஆர்வம் மிகவேண்டும். 'திறமையை விட ஆர்வத்தின் மூலமே வெற்றி கிடைக்கிறது' என்பது உலக அனுபவின் படிப்பினை. தான் எடுத்துக்கொண்ட வேலையை முழு மூச்சுடன் சலியாத ஊக்கத்துடன் செய்பவன் வெற்றி பெற்றே தீருவான்' எனச் 'சார்லசு பக்சுடன்' என்பார் கூறிய கூற்று இவண் ஓர்ந்துணர்தற்குரியதாம். உலகில் ஒப் பற்ற ஆக்கங்கள்-விளைவுகள் அனைத்தும் ஆர்வ எழுச்சியினு லேயே ஆக்கப்பட்டன. ஆர்வ எழுச்சியின் முனைப்பின்றி எந்த உயரிய படைப்பும் ஆக்கப்பட்டதில்லை' என்று Nothing great was ever achieved without enthusiasm-Emerson) எமர்சன் கூறியதையும் எண்ண வேண்டும்.

தமிழ் நாட்டைக் காதலிக்கத் தமிழர் முன்வரல் வேண்டும். தன்னையே நச்சித் தமிழன் கெட்டது போதும். தன்னை மறந்து,

தன்னலத்தைத் துறந்து தமிழை – தமிழினத்தைத் – தமிழ் நாட்டைக் காதலிக்கத் தமிழர் முனைந்தால், நம் வரலாற்றிலேயே வியக்கத்தக்க புதுமையும், புத்தாக்கமும் புது முனைப்பும் மலரும்! ஏன்? புத்தம் புதிய எழுச்சிவரலாறு பூக்கும்! சிரிக்கும்!

தமிழரின் பகைவரோ தூங்கும் குள்ளநரிகளைப் போன்றோர். 'தூங்கும் குள்ளநரி, தன் சனவில் கூட்டப் பெட்டைக் கோழிகளை எண்ணிக் கணக்கிட்டுக் கொண்டிருக்கும்!' (A sleeping foz counts hens in his dreams – Russian Proverb) அதுபோன்றே உறக்கத்திலும் தமிழினத்தின் வீழ்ச்சிக்கு மறைமுகமான – படிருன – திட்டத்தைக் கனவு கண்டு கொண்டிருப்பார் பல்லாயிரவர் உள்ளனர். பகைவரின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதைப் பற்றிக் கவலையில்லை. நம்மிடம் இருக்கும் ஒற்றுமையாற்றல் ஒருமுகப்பட்ட உணர்வெழுச்சி-சிதருமல் தாக்குமானால் கோடிக் கணக்கானவரின் பகையையும், தாக்குதலையும்கூட எளிதில்-கணத்தில்-முறியடித்து விடலாம்!

எந்த வெற்றியையும் தகுதியையும் நாம் எய்துவது எளிது. அதற்கேற்ற அஞ்சாமை, துணிவுடைமை, பேராண்மை நம்மிடம் மிக்கிருக்கவேண்டும். (No one reaches a high position without daring – Syrus) நாம் கொள்கைகளையும், நம்மையும், நாட்டுமக்கள் இயல்பையும், உலகியல் சூழ்நிலையையும்தெளிந்த உள்ளத்தோடு, நேரான கண்ணோட்டத்தோடு, புரிந்துகொள்ளவும், அறிந்து ஆவனசெய்யவும் வேண்டும். அதற்கு ஆற்றலும் அஞ்சாமையும் வினைசெயல் திறமும் மிகுதியாக வேண்டும். காசும் பரிந்துரையும், தூக்கிவிடப்படுவது கொடுங்கோள் புரியும் மன்பதையில் அன்பு, அறம், அறிவு. நேர்மை, ஒத்த உரிமை ஆகியவை செத்துவிட்டன என்றே பொருளாகும் இக்கயமைக் கெல்லாம் அடிப்படை பிறழ்ந்துணரப்பட்ட தன்னலவெறியே! அதனைக் களைவது எளிதில் நடைபெறுது. ஆழ்ந்த நீடிய ஆற்றல் சான்ற புரட்சிப் போராட்டமே, இக்கொடுமையை வீழ்த்தும். மேற் போக்கான நோக்குகளால் உலகியலை-அரசியலை-மன்பதையை அளக்க முனையும் பொழுது, தகுதியற்றவற்றை யெல்லாம் தகுதியானவை போல-ஆற்றல் வாய்ந்தவை போலத்-தவருக முடிவுகாண முற்பட்டுவிடுகின்றனர் மக்கள்.

தக்கார் அல்லாத தகவிலர்களும் சில இடங்களில் சில செல்வாக்கில் பளபளப்பதைப் பார்த்து மக்கள் 'அவர்களே உண்மையான ஆற்றலுடையவர்; உண்மையான தகுதிசான்றவர்; உண்மையறிஞர்' எனத் தவருக முடிவு காண்கின்றனர்.

உழவர் துயர்!

காரை–இறையடியான்.

ஏற்றத்திலுல் நீரிறைத்தோம் ஏலேலோ ஏலோ!–நாங்கள்
எலும்பொடியப் பாடுபட்டோம் ஏலேலோ ஏலோ!
ஆற்றுவெள்ளம் பரவிவர ஏலேலோ ஏலோ!–நாங்கள்
ஆங்காங்கும் பள்ளம் செய்தோம் ஏலேலோ ஏலோ!
காற்றுவெயில் கடுங்குளிரில் ஏலேலோ ஏலோ–எங்கள்
கட்டுடலே வாட்டிநின்றோம் ஏலேலோ ஏலோ!
சேற்றினிலே நாற்றுநட்டோம் ஏலேலோ ஏலோ!–நாங்கள்
சேர்த்துவைத்த தொன்றுமில்லை ஏலேலோ ஏலோ!

சேவலுக்கு முன்னெழுந்தோம் ஏலேலோ ஏலோ!–நாங்கள்
சேர்ந்துநின்று பாடுபட்டோம் ஏலேலோ ஏலோ!
கோவிலுக்குச் சென்றுசென்றே ஏலேலோ ஏலோ–'இறைவா
கொடுநல்ல விளை'வென்றோம் ஏலேலோ ஏலோ!
காவலிலே கண்செலுத்தி ஏலேலோ ஏலோ–நாங்கள்
கண்ணுறக்கம் மிகவிழந்தோம் ஏலேலோ ஏலோ!
நாவறள வேலைசெய்தோம் ஏலேலோ ஏலோ!–ஐயோ!
நாட்பலவும் பட்டினிதான் ஏலேலோ ஏலோ!

ஆற்றலெல்லாம் மிகவிழந்தோம் ஏலேலோ ஏலோ!–நாங்கள்
அஞ்சியஞ்சி வேலைசெய்தோம் ஏலேலோ ஏலோ!
நாற்றிலுள்ள பூச்சிகொல்ல ஏலேலோ ஏலோ–நாங்கள்
நன்மருந்து தேடிநின்றோம் ஏலேலோ ஏலோ!
மாற்றமின்றிப் பாடுபட்டும் ஏலேலோ ஏலோ!–எங்கள்
மனக்கவலை நீங்கவில்லை ஏலேலோ ஏலோ!
சோற்றினுக்கே ஏங்கிநின்றோம் ஏலேலோ ஏலோ–எங்கள்
சோர்வின்னம் தீரவில்லை ஏலேலோ ஏலோ!

(முன் பக்கத் தொடர்ச்சி)

கட்சி என்ற சிறையில் விலங்கிடப் படாத சிறையாளிகளாக மக்கள் திணித்தடைக்கப் பட்டிருப்பது இக்காலப் புதுமை மடமையாம். சமயம் என்ற சிறையில்–மடம் என்ற சிறையில், சமயப்பிரிவினர்கள்–அடியார்கள் என்ற பெயரில் சிறைப்பட்டிருந்தது பழைய மடமை. இவ்விருவகைச் சிறை வுணர்வுபெற மக்கள் பண்பட வேண்டும் மூன்றடிக் குள்ளன் காணும் பரப்பு குறுகியதாகவே இருக்கும். ஆறடி நெடியோன் காணும் பரப்பு விரிந்தே யமையும். சிறைகளிலும், பொந்துகளிலும் இருப்போர் விடுதலை பெறுவார்களாக! நாட்டைக் காதலிப்போராய், மொழியைக் காதலித்துக் காப்போராய், கொள்கை நெடியோராய், விரிந்த மனப்பான்மையாளராய், உரிமையாளராய் விடுதலை பெற்றுச் சான்றோர்களாய் விளங்க வேண்டும்!

கொஞ்சமுமே கரவின்றி ஏலேலோ ஏலோ–நாங்கள்
கொடுவெயிலில் பாடுபட்டோம் ஏலேலோ ஏலோ!
நெஞ்சினிலே அமைதியில்லை ஏலேலோ ஏலோ–நாங்கள்
நேர்மைபெறல் எந்நாளோ? ஏலேலோ ஏலோ!
கெஞ்சுவதை முதலாளி ஏலேலோ ஏலோ–பெரிதும்
கேட்டுநலம் செய்வதில்லை ஏலேலோ ஏலோ!
கஞ்சிக்கும் வழியின்றி ஏலேலோ ஏலோ–நாங்கள்
கண்கலங்கப் பிறந்தோமா? ஏலேலோ ஏலோ!

பச்சிளங் குழந்தையெலாம் ஏலேலோ ஏலோ-பசியால்
பதறியழப் பாடுபட்டோம் ஏலேலோ ஏலோ!
உச்சிவெயில் போதினிலும் ஏலேலோ ஏலோ-நாங்கள்
உட்காரா துழைத்தோமே ஏலேலோ ஏலோ!
நச்சுகின்ற மனைவியின்பம் ஏலேலோ ஏலோ–பல
நாட்களிலே இழந்துழைத்தோம் ஏலேலோ ஏலோ!
மெச்சுமொழி மழலையெல்லாம் ஏலேலோ ஏலோ-கேட்டு
மேன்மைபெறும் பொழுதிழந்தோம் ஏலேலோ ஏலோ!

உடல்நலத்தைப் பேணவில்லை ஏலேலோ ஏலோ–நாங்கள்
உள்ளத்தை உழைப்பில் வைத்தோம் ஏலேலோ ஏலோ!
திடல்திருத்தித் தினைவிதைத்தோம் ஏலேலோ ஏலோ-வினைவுத்
திரட்சியிலே சிறிதெடுத்தோம் ஏலேலோ ஏலோ!
குடல் கொதிப்பை எடுத்துரைத்தோம் ஏலேலோ ஏலோ! இறை-
குறித்தமுறை இஃதென்றார் ஏலேலோ ஏலோ! [வன்
மடமைகளை நம்பிநம்பி ஏலேலோ ஏலோ-நாங்கள்
மகிழ்ச்சியற்று வாழ்ந்திடவோ? ஏலேலோ ஏலோ?

கற்றவரும் பதவியரும் ஏலேலோ ஏலோ-எங்கள்
கண்ணீரை மறந்தனரே ஏலேலோ ஏலோ!
உற்றவரைப் போல்நடித்தார் ஏலேலோ ஏலோ-உழைப்பை
உவந்தளித்தோம் தாழ்வுறவோ? ஏலேலோ ஏலோ!
குற்றமென்ன செய்தோம்யாம் ஏலேலோ ஏலோ–அன்னார்
குடிசைப்பக்கம் வரமறுத்தார் ஏலேலோ ஏலோ!
பெற்றதுயர் நீங்குமென்றே ஏலேலோ ஏலோ-தெய்வப்
பேரருளை வேண்டிநின்றோம் ஏலேலோ ஏலோ!

ஏழைநலம் என்றுசொல்லி ஏலேலோ ஏலோ–கட்சி
ஏராளம் தோன்றினவே ஏலேலோ ஏலோ!
வாழவழி வகுத்துரைத்தே ஏலேலோ ஏலோ–மன்றில்
வாய்கிழியப் பேசிடுவார் ஏலேலோ ஏலோ!
தாழுதற்கோ யாம்பிறந்தோம் ஏலேலோ ஏலோ!–இதனைத்
தகுமெழுத்தாய் நம்பிடவோ? ஏலேலோ ஏலோ!
ஊழெனயாம் ஏமாறோம் ஏலேலோ ஏலோ!–தெய்வ
உண்மையெலாம் பொதுவுறமே ஏலேலோ ஏலோ!

வேளாண்மை இயல்:

தோட்ட வளமும் தோட்ட நிலமும்.

எழிற்செல்வன்

தோற்றுவாய்:- இயற்கை பல நாடுகளையும், அந்நாடுகளில் பல்வேறு வளங்களையும் படைத்திருக்கின்றது. தென்னாடு எனப்படும் திருவிடத்தை இயற்கையன்னை பண்பட்ட பழவளத்தோடு – தோட்ட வளத்தோடு உருவாக்கியிருக்கின்றாள். இயற்கையன்னையின் எழிற்குமரியாய் – செல்வக்குமரியாய் விளங்குகின்றது இப்பொன்னாடு. ஏனெனில் தென்னாட்டின் தோட்டவளம் சிறப்புமிக்க வளமாகும். எண்ணற்ற கனிகளும், மலர்களும், காய்கறிகளும் வளர்ந்து வளம் பரப்பும் வாய்ப்புகள் மிகுதி அவ்வெழில் வளங்கள் நாட்டினரின் கண்களுக்கும், எண்ணங்களுக்கும் தென்படாத நிலை மாறியுள்ளது. இயற்கை ஈந்த வளத்தை, ஈர்க்க முனையும் பொழுது திட்டமும், தேவையான முயற்சியும் வேண்டப்படுகின்றன தோட்ட வளம் தரும் பயனைப்பெற, முறையான நிலத்தையும், சூழ்நிலையையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும் தோட்ட நிலங்கள், அந்நிலத்தில் விளைபவற்றை விற்பனை செய்யும் வாய்ப்புகள், வெப்பதட்பம், போக்குவரத்து வாய்ப்புகள், நில அமைப்பு, நீர்நிலைகள், ஆகிய தலையாய காரணிகளையும், மற்ற காரணிகளான (Factors) குழுகாயத் தொடர்புகள், நிலத்தின் விலை, நிலப் பரப்பு, அருகமைந்த மற்ற தோட்டங்கள் ஆகியவற்றைக் கூர்ந்தறிந்து தேர்ந்தெடுத்தல்

(முன் பக்கத் தொடர்ச்சி)

கட்டும்துணி கந்தலப்பா ஏலேலோ ஏலோ!-குதிரில்
கலம்நெல்லும் இல்லையப்பா ஏலேலோ ஏலோ!
கொட்டுமழை வீட்டிலப்பா ஏலேலோ ஏலோ–எங்கள்
குடிசையெலாம் ஓட்டையப்பா ஏலேலோ ஏலோ!
வட்டிபெறும் கொடியோரும் ஏலேலோ ஏலோ–கடன்
வழங்காமல் வைதனரே ஏலேலோ ஏலோ!
பெட்டிப்பணம் சேர்த்தவர்கள் ஏலேலோ ஏலோ–எங்கள்
பேருழைப்பை மறந்தனரே ஏலேலோ ஏலோ!

எரிமலைதான் எங்கள்நெஞ்சம் ஏலேலோ ஏலோ–மூச்சு
எழும்புகையாம் என்றுணர்க ஏலேலோ ஏலோ!
வருத்துமிடி ஓட்டிடவே ஏலேலோ ஏலோ–எம்மை
வாளெடுக்கத் தூண்டினரோ? ஏலேலோ ஏலோ!
வரிச்சுமையும் எம்தலையில் ஏலேலோ ஏலோ–அரசு
வைத்துவிளை யாடியதே ஏலேலோ ஏலோ!
சரிநிகராம் வாழ்வின்றேல் ஏலேலோ–ஏலோ–எழுந்து
சாக்காட்டில் புரட்சிசெய்வோம் ஏலேலோ ஏலோ!

வேண்டும் அதனால் தோட்டத் தொழிலைப் பயனுள்ளதாகவும், வருவாய் தரத்தக்கதாகவும் மேற்கொள்ள முடியும்.

விற்பனை வாய்ப்பு:- தோட்டங்களில் விளைவிக்கப்படும் பழங்களையும், காய்கறிகளையும், மலர்களையும் தேக்கமின்றி விற்பனை செய்வதற்குச் சந்தைகள் அருகில் இருக்க வேண்டும். நெடுந்தொலைவில் சந்தைகள் இருப்பினும், காலத்தாழ்த்தமின்றி விற்கப்பட வேண்டும். தோட்ட விளைபொருட்கள் எளிதில் பாழ்படுவன எப்பொருட்களும் தேக்கமின்றி விற்கப்பட்டாலொழிய எதிர்கால விளைச்சலுக்கும் அதனை விளைவு செய்பவர்களின் ஆர்வத்திற்கும் வழியிருக்காது. பொருள் வாங்குவோரின் தேவையையும், தேவைக்கேற்ற தோட்டப் பொருட்களையும் உணரவேண்டும். தோட்டத்திற்குரிய நிலம், அந் நிலத்தில் விளையும் பொருட்களின் விற்பனை வாய்ப்புகளைப் பொறுத்துத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். வேளாண்மை விளைபொருள்களுக்கு விற்பனை வாய்ப்புகள் சிறந்திருப்பினும், நெஞ்சத்தில் இரக்கமோ, நெறியோ கொள்ளாத இடைத் தரகர், வணிகர் சிலரின் கொள்ளையடிச் செயல்களால், உழைக்கும் உழவர் நிலை உயர வழியேதுமில்லை. இக் கொடிய நிலைகளைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

போக்குவரத்து வாய்ப்புகள்:- தோட்ட விளைபொருள்கள் (கனிகள், காய்கறிகள், மலர்கள்) எளிதில் பாழ்படுவன. அவை சேமிப்பில் அழுகும் பொருட்கள். மற்ற கூளங்களைப்போல் நெடுங்காலம் தேக்கி வைத்தல் இயலாது. ஆகவே அறுவடை செய்யப் பட்டதும் அவற்றை விரைவாக விற்பனைக் கூடங்களில் சேர்த்தல்வேண்டும். நல்ல வகான சாலைகளும் போக்குவரத்து வாய்ப்புகளும் உள்ள நிலையில் தோட்ட நிலங்கள் அமைதல் வேண்டும். ஊர்ப்புறங்களில் விளையும் பொருட்கள், நல்ல போக்குவரத்து வாய்ப்புகளின்றி, விற்பனை வாய்ப்பு பெருது, பெரும் இழப்பிற்கு ஆளாகும் நிலை வருந்தத்தக்கதாகும் விளைந்த இடங்களினின்று மொத்த வணிகக் கூடங்களுக்கும், சில்லறை வணிகச் சந்தைகளுக்கும், அங்கிருந்து வாங்குவோர் கூடும் அங்காடிகட்கும் முறையான போக்குவரத்து வாய்ப்புகள் இருத்தல் வேண்டும்.

வெப்பதட்பம் (Climate) வேளாண்மைப் பணியில் வெப்பதட்பம் நற்பங்கு பெறுகின்றது ஒருபகுதியில் நிலவும் வெப்பதட்பம் அங்கு விளையும் கனி வகைகளையும், மற்ற பயிர் வகைகளையும் தீர்மானிக்க வல்லதாகும். மழை, வெப்பம், வான் ஈரப்பசை (Humidity) காற்று, கதிரொளி ஆகியவை வெப்பதட்பத்தின் பிரிவுகள். பழவிளைவில் தோட்ட விளைச்சலில் இக்காரணியின் மேலாண்மையை மற்றொரு கட்டுரையில் விளக்குவோம்.

நில அமைப்பு (Topography): நிலஅமைப்பு என்னும் பொழுது நிலச்சாய்வு (Slope), கடல்மட்டத்தினின்று உயரம் (Elevation) அருகமைந்த நீர்நிலைகள் (Water bodies) ஆகிய காரணிகள் இடம் பெறுகின்றன. தென்னகத்தைப் பொறுத்த அளவில் கடல் மட்டத்தினின்று உள்ள உயரம் இன்றியமையாததாகும். தென்னாடு வெப்பப்பகுதியில் அமைந்துவிட்ட நாடு. தென்னாட்டின் சமவெளிப் பகுதிகள் வெப்பப்பகுதிகள் (Tropical regions) உயர்ந்த மலைப்பகுதிகள் குறை வெப்பப் பகுதிகளாகவும் (Subtropical regions), குளிர்ப்பகுதிகளாகவும் (Temperate) விளங்குகின்றன. ஆப்பிள், பிளம் (Plum) போன்ற கனிகளும், பூக்கோசு, இலைக்கோசு போன்ற பயிர்களும் குளிர்ப்பகுதியில் மட்டுமே வளரத் தக்கவை. நம் நாட்டில் நீலமலைப்பகுதிகள் (Nilgris), சேர்வராயன் மலைப்பகுதிகள், பழனி மலைக்குன்றுகள், ஏற்காடு போன்ற இடங்கள் குளிர்ப் பகுதிப்பயிர்கள் வளர ஏற்ற இடங்கள்.

நிலச்சாய்வுகள் (Slopes) மண் அரிப்பால் ஏற்படுவதாகும். குளிர் நாடுகளில் நிலச்சாய்வு மிகுந்த பகுதிகளில் பனித் தொல்லைகள் மிகுதி. நிலச்சாய்வு உள்ள பகுதிகளில் வேளாண் பணி மேற்கொள்வதே இடரானதாகும் அ தோடு வேளாண்மைச் செலவும் மிகும். அமையவிருக்கும் தோட்டத் தருகில் நீர்நிலைகளான ஏரிகள், குளங்கள் இருப்பின் அவை பயனுள்ளவையாக விளங்குகின்றன. நீர்நிலைகள் பாய்ச்சலுக்கு வாகாயிருப்பன. ஆனால் நீர்ப்பாய்ச்சல் வாய்ப்போடு வெப்பத்தைச் (Temperature) சீர்ப்படுத்தும் வாய்ப்பும் உண்டு. கிரிஃச் டோபர் (1958), நடு நியூயார்கில் உள்ள ஃபிங்கர் ஏரி, அப்பகுதியின் தோட்ட வளத்திற்குப் பயனுள்ளதாக விளங்குவதைச் சுட்டுகின்றார். தோட்ட நிலங்களைத் தேர்ந்தெடுக்குங்கால் அருகில் நீர் நிலைகள் இருப்பின் தோட்டத்தின் சிறப்புக்கு வழி கோலுவன. ஏனெனில் கோடையில் வெப்பத்தைத் குறைத்தும், குளிர் காலத்தில் கூட்டியும் வெப்பநிலையைச் சமமாக்குகின்ற சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது.

மண் (Soil): மண் வேளாண்மையின் அடிப்படையாகும். மண்ணே பயிர்களின் அன்னையெனவும் கூறலாம். மண் பயிர் வளர்ச்சிக்கு ஊடகமாக (Medium) விளங்குவதோடு, நீர்ச் சேமிப்பு நிலையமாகவும், உணவுச் சேமக்கலமாகவும் உதவுகின்றது. தோட்ட நிலங்களில், நல்ல மண் அமைப்பு தேவையாகும். மண் தோட்டப் பயிர்களின் வளர்ச்சியையும், விளைவையும் தீர்மானிக்க வல்லது. பழப் பயிர்களுக்குத் தேவையான மண், நல்ல வடிவு வாகுள்ள காற்றோட்டம் அமையப் பெற்ற, இருபொறை மண்ணாகக் (Loamy Soil) குறைந்தது ஆறடி ஆழம் வரை பாறைகளோ, கடின மண் படிவுகளோ இல்லாது, சீராக

அமைய வேண்டும். நிலத்தின் நீர்மட்டம் ஆறடிக்குக் கீழிருத்தலே நலம். அதற்குமேல் நீர்மட்டம் எழுமானால் வேர்களில் தாக்குதல் ஏற்படும். இதனால் மரத்தின் வேர்கள் கீழ்நோக்கி வளராமல், பக்கவாட்டில் நெளிந்தும், வளைந்தும் வளர்ச்சி கொள்கின்றன ஆந்திர மாநிலத்தின் சர்க்கார் மாவட்டங்களில் நரந்த (Orange) மரங்களும், தஞ்சையில் பலா மரங்களும் நீர்மட்ட உயர்வால் பாதிக்கப்பட்டழிந்ததை நாயக் (1949) எடுத்துரைக்கின்றார். காய்கறிப் பயிர்களுக்கு (Vegetables), பழப் பயிர்களைப்போல் ஆழமான மண் தேவைப்படுவதில்லை. அவற்றின் வேர் வளர்ச்சி பெரும்பாலும் மேல்மட்டத்தோடு நின்று விடுகின்றன. நிலத்தில் மேல்மட்ட மண், நல்ல வடிகால் வாய்ப்பும், காற்றோட்டமும், பயிர் உணவுகளும் கொண்டிருப்பின் இப் பயிர்கள் நல் வளர்ச்சியும் விளைவும் தரவல்லன பழப் பயிர்களுக்கு ஆழமான மண் தேவையாகும். பழப் பயிர்களான மா, பலா, முந்திரி, சீமை இலுப்பை (சப்போட்டா) ஆகியவை ஆழமான பெரும் வேர் வளர்ச்சியுள்ளவை. இப் பயிர்களைக் குறைந்த ஆழத்தில், பாறையுள்ள நிலங்களில் பயிரிடக்கூடாது. மொத்தத்தில் ஆறடி ஆழம் வரை பாறைகளோ, கடினமான மண் படிவோ இல்லாமலிருப்பது நலமாகும். நாயக் (1949) அவர்கள், கோவைப் பகுதிகளிலும், மேற்குக் கடற்கரைப் பகுதிகளிலும் காணப்படும் பழ மரங்களின் குறை வளர்ச்சிக்கு, குறைந்த ஆழத்தில் உள்ள கடினமான மண் அமைப்பும், பாறைகளுமே காரணங்களென அறிவிக்கின்றார்.

தோட்ட நிலங்களில் காணப்படும் மண்ணின் தரங்களில், மண் பொருட்களின் அளவு (Texture) கூர்ந்தறியத்தக்கதாகும். மண், ஒரே அளவுள்ள மண் பொருட்களைக் கொண்டிருப்பதில்லை அவற்றில் சரளைக் கற்கள் (Gravel), பெரு மணல் (Coarse sand), சிறு மணல் (Fine sand), குறு மணல் (Silt), களி (Clay) ஆகிய பல அளவுள்ள மண் பொருட்கள் உள்ளன பயிர் வளர்ச்சிக்கு உகந்த மண் இரு பொறை மண்ணேயாகும். இரு பொறை மண், (Loamy soil), மணலும், களியும் கலந்ததாகும் மணல் பெருமளவுள்ள நிலங்களில் நீர்த் தேக்கும் திறன் (Water holding capacity) இராது. அத்தோடு பயிர் உணவுகளின் அளவும் இந் நிலங்களில் குறைவே. ஆனால் இந் நிலங்களில் நல்ல காற்றோட்டமும், வடிவும் காணப்படுகின்றன இதற்கெதிராகக் களி (clay) மிகுந்த நிலங்களில், நீர்த் தேக்கத் திறனும், பயிர் உணவு விழுக்காடும் மிகுதியாகும். களியும் (Clay), மணலும் (Sand) அவற்றின் பண்பிலும், பயனிலும் இரு முனைகள். இவற்றிடையே காணப்படும் வேறுபட்ட பண்புகளை ஒரு மண் உள்ளடக்க வேண்டும். எனவே களியும், மணலும் சேர்ந்த மண் (இரு பொறை மண்–Loamy soil) நலமாகும். மண் பொருள் கூறுபாடு (Mechanical

analysis) செய்து மண்ணின் நிலையை உணரலாம். தோட்ட நிலங்களைத் தேர்ந்தெடுக்குங்கால் இரு பொறை மண் உள்ள நிலங்களாக இருத்தல் சிறப்பு.

மண் அமைப்பு (Soil structure) எனப்படுவது: மண் பொருட்களின் அமைப்பைக் குறிப்பிடுவதாகும். மண் இறுக்கமாக இல்லாமல், பொல பொலப்பாக இருத்தல் வேண்டும் மண் அமைப்பு பண்படுத்தலால் (Tillage) மாறுபடுவதாகும் பண்படுத்தற் பணிகளான, உழவு (Ploughing), கிளர்வு (Harrowing), உருள்வு (Rolling) ஆகியவற்றால் நல்ல மண் அமைப்பைப் பெறலாம். மேலே விளக்கப்பட்ட மண் பொருட்களின் அளவு (Texture) மண் அமைப்பைத் (Structure) தீர்மானிக்கவல்லதாகும். களிமண்போன்ற சிறு அளவு மண் பொருட்கள், மண்ணில் இறுக்கத்தை யுண்டாக்கிக் கடினமான மண் அமைப்பை ஏற்படுத்துகின்றன. பயிர்களின், மண் வெப்பமும் (Soil temperature) மேலாண்மை செய்யும் காரணிகளில் ஒன்றாகும் மண் வெப்பம், வானிலை வெப்பத்தையும், காற்றோட்டத்தையும் பொறுத்து மாறுபடும் மண்ணின் வண்ணம் (Soil colour) நிலவெப்பத்தைத் தூண்டும் காரணியாகும். கருமையான கரிசல்மண் (Black scil) கதிர் வீச்சை (Solar Radiation) ஈர்த்து வெப்பத்தைக் கூட்டும் தோட்ட நிலத்திலுள்ள மண்ணின் இயைபு நிலையை (Chemical conditions) முன்பே அறிந்துணர்தல் சிறப்பு. களர் நிலங்கள் (Alkali soils), உவர் நிலங்கள் (Saline soils) புளிய நிலங்கள் (Acid soils) ஆகியவற்றைத் தவிர்த்தல் வேண்டும். இயைபு நிலையில் மண் இருமுனைகளாக (களர்-புளிய நிலை) இல்லாது நடுநிலை (Neutral) மண்ணாக அமைதல் வேண்டும்.

மண்ணில் உப்புகள் நிறைந்து, களர் நிலமாக இருப்பின், பயிர் உணவுகள் பயிர்களுக்குக் கிட்டா. கரிகை (Corbonate), இருகரிகை (Bicarbonate), ஆகிய உப்புகள் பயிர்களுக்கு நஞ்சாகி விடுகின்றன. தழை இய ஆல்லது காலக ஆக்கம் (Nitrification) தடைப்படுகின்றது ஏனெனில் தழை இய ஆக்கத்தை ஊக்கவல்ல குச்சில்கள் (Bacteria) களர் நிலையில் (மிகையான காரக்காடி நிலையில்) வாழமாட்டா. உவரப்பிளவணு, (Sodium Ion) மண்ணில் தொளி நிலையை (floculation) உருவாக்குவதால், காற்றோட்டம் முறையாக இராது. நிலத்தில நீர் உள்ளோட்டமும் (Percolation) கேடும் ஆத்தகு வேண்டாத நிலைகளால் பயிர் வளர்ச்சி குன்றும் ஆயினும் களர் நிலையிலும், சில கனிப் பயிர்கள் வளர்கின்றன. சீதா, மாதுளை எடுத்துக்காட்டுகள்.

களர் நிலையைப் போலவே புளிய நிலையும் (Acidity) தீயதாகும். மண் அமில நிலையிலிருப்பின் பயிர் உணவுகள்,

பயிர்களுக்குக் கிட்டா. குறிப்பாக எரிகையும் (Phosphate), நுண் தனிமங்களும் (Micronutrients) கிட்டாத (Non availablity) நிலைக்கு ஆக்கப்படுகின்றன களர் நிலங்களைப்போலவே தழைஇய ஆக்கமும் தடைப்படும். இரும்பும், அலுமினியமும் பயிர்களுக்கு நஞ்சான நிலையில் உள்ளன. ஆயினும் உருளைக் கிழங்கு வேளாண்மையில் புளிய நிலை தேவைப்படுகின்றது. இப் பயிரில் நிலவும் கொடிய குச்சில் நோய் (Bacteria disease) புளிய நிலையால் தடைப்படுகின்றது தென்னகத்தில் பெரும்பாலும் புளிய நிலங்கள் காணப்படுவதில்லை. தோட்ட நிலங்களைத் தேர்ந்தெடுக்குங்கால் நடுநிலையான இயைபு நிலையில் உள்ளவையாகத் தேர்ந்தெடுத்தல் சிறப்பு.

தோட்ட இயல் தொழில் வெற்றியுள்ளதாக்க மேலே விளக்கப்பட்ட தலையாய காரணிகளை (Factors) அறிவதோடு மற்ற காரணிகளான பணியாட்கள் கிடைக்கும் வாய்ப்புகள், நீர், நிலத்தின் விலை, நிலப் பரப்பு, குமுகாயத் தொடர்புகள், தோட்டத்திற்குரிய காற்றரண்கள் (wind breaks), அருகமைந்த தோட்டங்கள் ஆகியவற்றையும் அறிதல் நலமாகும். தோட்டப் பணிகளுக்குரியப் பணியாட்கள் கிடைக்கும் வாய்ப்புகள் இருக்க வேண்டும். மக்கள்தொகை மிகுந்த நமது நாட்டில் வேலையாட்கள் கிடைப்பது எளிதேயாகும். நிலத்திலுள்ள மண்ணைப் போலவே, நீரும் பயிர்களின் வாழ்வோடு இணைந்ததாகும். நீர், பயிர்களின் குருதியாகும். நீரில் உப்புகள் மிகுந்திருத்தல் கூடாது. நீரின் நிலைக்கு ஏற்றவாறு களிகளின் சுவையும், காய் கறிகளின் தரமும் வேறுபடும் மண்ணில் உப்புகள் பயிர் வாழ்வுக்குத் தடையாவதுபோலவே, நீரின் உப்புகளும் தீயவை. நீர் ஆய்வு (Water Analysis)செய்து நீரின் தன்மையை அறியலாம். நிலத்தின் விலை தோட்டத் தொழிலில் ஒரு காரணியாகும். நிலத்தை விலைக்கு வாங்கும்பொழுது அதனின்று வரும் வருவாயை ஒப்புநோக்கி நிலத்தைத் தேர்ந்தெடுத்தல்வேண்டும்

தோட்டங்கள் குமுகாய வாழ்விடங்களுக்கு அருகில் அமைதல் வேண்டும். மக்களோடு சேர்ந்து வாழும் நிலையிருக்க வேண்டும் நெடுந் தொலைவிலோ, தனியிடங்களிலோ அமைந்தால், தோட்டக் காப்பிற்கும், அமைதிக்கும் எதிராக அமைந்து விடும். தோட்ட நிலங்களின் பரப்பு முறையாக அமைதல் வேண்டும். நமது நாட்டில் நிலவும் நிலப் பங்கீட்டு முறையாலும், மக்கட் பெருக்கத்தாலும் சிறு துண்டு நிலங்களே காணப்படுகின்றன. இவற்றில் சிறப்பான வேளாண்மை முறையையோ புதிய பொறிகளையோ பயன்படுத்தல் இயலாது. ஆனால் பெரும் பரப்பு நிலங்களுக்கு பெரும் முதலீடு தேவைப்படும். பயிர் செய்யவிருக்கும் பயிர்கள் முதலீடு போடக்கூடிய ஆற்றல் ஆகியவற்றைப் பொறுத்து நிலப் பரப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

குடுகுடுப்பைக்காரன்!

பாலா - எழிலேந்தி.

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்ல காலம் பிறக்குது
நல்ல காலம் பிறக்குது
நல்லது வளருது நல்லது வளருது
அல்லது தொலையுது அல்லது தொலையுது!

பொல்லாங்கு செய்பவன் 'பொக்'கெனப் போவான்
போவான் போவான் பொய்க்காது சொல்லே!

குடுகுடு குடுகுடு!
முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும்
நற்பகல் ஒளியை நாடு பெற்றது!

குடுகுடு குடுகுடு!
மானம் இல்லை மானம் இல்லை
கோணல் கொண்டார் குனித்த ஆட்சியில்

அடிமைகள் நிறைந்தார்! அடிமைகள் நிறைந்தார்!
அறிவை இழந்தார் குடுகுடு குடுகுடு!
தடியர் மடியர் சடுத்தம் சடுத்தமாய்
இந்திக் கழுதையை ஏற்றி வருகிறார்
செந்தமிழ்க் குயிலைச் சீறி எழுகிறார்!

குடுகுடு குடுகுடு!

(முன் பக்கத் தொடர்ச்சி)

தோட்டங்களுக்கு நல்ல காற்றுத் தடுப்புகள் அல்லது **காற்றரண்கள்** (Wind Breaks) அமைதல் சிறப்பு. நல்ல காற் றரண்கள் இல்லாவிடில் புதிதாக ஏற்படுத்தப்படல் வேண்டும். மூங்கில், வஞ்சி (சவுக்கு), பிண்டி (அசோக) மரம் போன்ற வற்றைக் காற்றடிக்கும் திக்கில் வேலிப் பகுதியில் வளர்த்து உருவாக்க வேண்டும்

அமையவிருக்கும் தோட்டத்திற்கருகில், தோட்டங்களிருப் பின், தோட்டப் பணிகளுக்குரிய பயிர் நாற்றுகள், கருவிகள் ஆகியவற்றைப் பரிமாற்றம் கொண்டு பயன் பெறலாம். ஆனால் அருகிலுள்ள தோட்டங்களீல் நோய், பூச்சி ஆகிய தொல்லைகள் மிகுந்திருப்பின் அவ்விடங்களில் தோட்ட அமைப்பைத் தவிர்த் தலே சால்பு.

இறுவாய்: தோட்ட வளத்தில் ஏற்றம் கொண்டது இத் தென்னாடு என்றழைக்கப்படும் செல்வத் திருநாடு. தோட்ட வளம் பெருகத் தோட்டத்திற்குரிய நிலம் முறையாக அமைதல் வேண்டும் அதனால் தோட்ட வளம் பொங்கிப் பொதுளும் செல்வ வளநாட்டின் செல்வச் செழிப்பிற்கும், செழுமைக்கும் வழி காண முடியும். *

நீட்சி இல்லை நீட்சி இல்லை
ஆட்சி கவிழுது! ஆட்சி கவிழுது!
மீட்சி உறுதி குடுகுடு குடுகுடு!

செந்தமிழ் ஆட்சி சிறப்புறும் குடுகுடு!
செந்தமிழ் நாடு சிறப்புறும் குடுகுடு!
இந்தித் தினிப்பை எதிர்த்து நாட்டில்
பொங்கி எழுந்தார்! பகைவர்கள் பொடிப் பொடி!
குடுகுடு குடுகுடு!

உடும்புப் பிடியார் ஊராண்ட மன்னர்
திடுமெனக் கவிழ்ந்தார்! திடுமெனக் கவிழ்ந்தார்!
மக்கள் வாடிட வல்லாண்மை செய்தவர்
ஒக்கத் தேய்ந்தே ஓடாய் உருள்கிறார்!
குடுகுடு குடுகுடு!

நல்ல காலம் பிறக்குது
நல்ல காலம் பிறக்குது
குடுகுடு குடுகுடு!

உண்மை புரியுது உண்மை புரியுது
ஊராளும் எத்தர் உள்ளம் தெரியுது
எண்ணம் புரியுது ஏமாற்றுப் பயல்களின்
தில்லு மல்லுகள் திக்கெட்டும் முழங்குது
திக்கெட்டும் முழங்குது குடுகுடு குடுகுடு

புரட்டுப் பயல்கள் போர்வை கலையுது
திருட்டுப் பயல்கள் சேதி தெரியுது
போலிப் பயல்கள் தோற்றம் விளங்குது
கூலிப் பயல்கள் கூப்பாடு புரியுது

குடுகுடு குடுகுடு!

சோற்றுத் தின்னிகள் சோற்றுத் தின்னிகள்
சேற்றுப் பன்றிகள் தெருவலம் கொண்டன!
முட்டுக் கட்டைகள் மூலைக்கு மூலை
கட்டுக் கோப்பாக வெற்றுப் பேச்சைக்
கொட்டி அளக்குது கும்பல் சேருது
அந்தநாள் சாவுது நல்லநாள் பிறக்குது!

குடுகுடு குடுகுடு!

மங்காத் தமிழால் தொந்தி பெருக்கும்
கொள்ளைக் கூட்டம் கூண்டொடு தொலையுது!

மானமும் மறமும் இருகண் ணுக
செந்தமிழ் மக்கள் இன்று தெளிந்தார்
எந்த வகையிலும் விடுதலை உறுதி!

தமிழைப் பழிப்பார் தலைபறி போகுது!
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு!

பேச்சுக் குறைந்தது பேதைமை அகன்றது
உள்ளப் பேச்சை உணர்வு விளக்குது
உண்மை புரியுது இன்பம் விளையுது

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு!

விண்வெளியறிவு:

வான வெளி அறிவியல்

அ. கி. மூர்த்தி பி. எசி. பி. டி.

பொருள்: தமிழில் "அறிவியல்" என்ருல் இயல்பான அறிவு என்பது பொருளாகும். இதை வட மொழியில் "விஞ்ஞான" மென்றும், ஆங்கிலத்தில் "சயன்சு" (Science) என்றும் கூறுவர். விஞ்ஞானம் என்ருல் சிறந்த அறிவு என்பதும், சயன்சு என்ருல் அறிவு என்பதும் பொருள்.

இலக்கணம்: மாந்தன் கசடறக் கற்றதைப் பற்றிய முறையான அறிவே அறிவியல் ஆகும். இது பல அறிவுத் துறைகளைத் தன்னுள் கொண்டது. காட்டாக, விலங்கியல், பயிரியல் முதலிய துறைகளைக் கூறலாம்.

வகைப்படுத்தல்: ஒரு நிலையில் அடிப்படை அறிவியல் (Fundamental Science), பயன்படு அறிவியல் (Applied Science) என்றும்; மற்ருரு நிலையில் இயற்கை அறிவியல் (Natural Science), பருப்பொருள் அறிவியல் (Physical Science), குமுகாய அறிவியல் (*Social Science*) என்றும் அறிவியலை வகைப்படுத்தலாம். இயல்பியல் (*Physics*), இயைபியல் (*Chemistry*), கணக்கு ஆகியவை அடிப்படை அறிவியலுக்கும்; மருத்துவம், பொறி இயல் தொழில் நுணுக்க இயல் முதலியவை பயன்படு அறிவியலுக்கும்; பயிரியல், விலங்கியல் முதலியவை இயற்கை அறிவியலுக்கும்; வானவியல் முதலியவை பருப்பொருள் அறிவியலுக்கும்; உளநூல், வரலாறு, அரசியல் முதலியவை குமுகாய அறிவியலுக்கும் எடுத்துக்காட்டுகள் ஆகும். மக்களைப் பற்றிப் பல நிலைகளில் ஆராய்வதே குமுகாய அறிவியல்.

வரலாறு: அறிவியல் 3000 ஆண்டுக்கால முறையான வரலாற்றினை உடையது எனலாம். அதன் வரலாற்றில் இறுதி 300 ஆண்டுக்கால வரலாறும், 20-ஆம் நூற்ருண்டின் மையக்கால வரலாறும் மிகவும் சிறப்புடையவை. பண்டைக் காலத்தில் அறிவியலுக்கு வேண்டிய அடிப்படைகள் தோன்றின; அவ்வளவே. இடைக் காலமோ இருண்டகாலம். இக்காலத்தில் குருட்டு நம்பிக்கையும் சமய வல்லாட்சியும் தலைதூக்கி நின்றதால் அறிவியல் வளரவில்லை. தவிர, பண்டைக் காலத்திலும், இடைக் காலத்திலும் கருவி ஆய்வுகள் இல்லாமையால், அறிவியல் செம்மையாக வளர்வதற்கு வாய்ப்பில்லை. இக்காலத்தில் (*Modern period*) அறிவியல் முறை, கருவி ஆய்வுகள் ஆகிய

வற்ருல் அறிவியல் சிறந்த முறையில் வளர்ந்துள்ளது. 15 ஆம் நூற்ருண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சி என்னும் அறிவியக்கம் அறிவியலின் ஒழுங்கான வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கம் அளித்தது வானவியல், மருத்துவம், வேளாண்மை பயன்படு அறிவியல், ஆகியவை முதலில் தோன்றியவை. இயல்பியல், இயைபியல், அடிப்படை அறிவியல் முதலியவை பின்னரே தோன்றின. வானவில், புயல், முதலிய மெய்ந் நிகழ்ச்சிகளே (*Phenomena*) அறிவியல்வரை அடிப்படையாக உள்ளன.

காலம் என்னும் வகையில் நீராவிக் காலம், மின் காலம், அணுக்காலம், வான்வெளிக் காலம் ஆகியவை அறிவியல் வரலாற்றில் சிறந்த பொற்காலங்களாகும். கொள்கை என்னும் வகையில் ஐன்சுடைனுடைய சார்புநிலைக் கொள்கையும், தார்வினுடைய இயற்கைத் தேர்வும், பிராய்டினுடைய உளப் பகுப்பும் ஈடு இணையற்ற அறிவியல் கொள்கைகள் அல்லது நெறிமுறைகள் ஆகும். ஐன்சுடைனுடைய கொள்கை இயல்பியலிலும், தார்வினுடைய கொள்கை உயிரியலிலும், பிராய்டினுடைய கொள்கை உளவியலிலும் பெரும் புரட்சியை உண்டாக்கி, அவற்றைச் செவ்விய முறையில் செழித்தோங்கச் செய்தன.

அறிவியல் முறை: இஃது உண்மை காணும் முறையாகும். மெய்ப் பொருள் காண்பதே இதனுடை தலையாய நோக்கம். இஃது அறிவியல் வளர மிக அடிப்படையாக உள்ளது. அறிவியல் வளர்ந்தது அதனுடைய பொருட் செறிவால் அன்று; அதனுடைய (அறிவியல்) முறையாலேயே ஆகும் உற்று நோக்கல் (வானவில்லை உற்று நோக்கல்), சிக்கலை அறிதல் (தோன்றுவதற்குரிய ஏதுவை அறிதல்), கருதுகோளை உருவாக்கல் (பல ஏதுக்களை உண்டாக்கிக் கொண்டு அவற்றில் ஒவ்வொன்றையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல்.), ஆய்வு செய்தல் (ஒவ்வோர் ஏதுவையும் ஆய்ந்து சீர்தூக்கிப் பார்த்தல்), கொள்கை வகுத்தல் (குறிப்பிட்ட கருதுகோளுக்குரிய ஏதுவைத் திரும்ப நன்கு ஆய்ந்து அதைக் கொள்கையாகக் கொள்ளுதல்) ஆகிய ஐந்தும் அறிவியல் முறையிலுள்ள சிறந்த நிலைகள். உவமையாகக் கூறின், மெய்யறிவியல் (*Philosophy*) அறிவியலின் தந்தை; கணக்கு, தாய்; பிள்ளைகள் அதன் மற்றத் துறைகள்.

வானவெளி அறிவியல் (*Space Science*) வானவெளி அறிவியல் ஓர் அரும் பெரும் புதிய அறிவியலாகும். இஃது ஒரு பயன்படு அறிவியல்; பல அறிவியல்களின் துணையினால் மிக அண்மைக் காலத்தில் தோன்றி (1947-ஆம் ஆண்டில்), நாள் ஒரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்ந்து வரும் அறிவியல்.

மாந்தனை மையமாகக் கொண்டு எடையின்மை, கதிர்வீச்சு முதலிய வானவெளி நிகழ்ச்சிகளை இது துறைச் சார்பாக ஆராய்கிறது. வானவெளி இயல்பியல் (*Space physics*), வானவெளி இயைபியல் (*Space chemistry*), வானவெளி மருத்துவம் முதலியவை இதன் கண்ணுள்ள புத்தம் புதிய துறைகள் ஆகும்.

இது பல சிக்கல்களுக்குத் தீர்வு காணும் விடிவெள்ளியாக உள்ளது. 20-ஆம் நூற்றாண்டின் ஆராய்ச்சிக் கருவிகளான ஏவுகணைகளின் (*Rockets*) துணையால் இது வளர்ந்துகொண்டு வருகின்றது.

அறிவியலின் போக்குகள்: உலகத் தோற்றத்தை உறுதி செய்வதிலும், உயிரின் அமைப்பை விளக்குவதிலும் இக்கால அறிவியல் முழுமூச்சாக முனைந்துள்ளது. மெய்யறிவு, கணக்கு, இயைபியல், இயல்பியல் ஆகிய துறைகள் சார்ந்த முறையில் ஒரு சிக்கலை அணுகித் தீர்வு காண்பதும்; தன் துறைகளைப் பெருக்கிக் கொண்டே போதலும், பெருகும் துறைகளுக்கிடையே ஒருமைப்பாடு காணுதலும் இக்கால அறிவியலின் சிறந்த போக்குகள் எனலாம்.

ஏவுகணைகள்:

வரலாறு: ஏவுகணைகள் மிக நெடுங்கால வரலாறு கொண்டவை. கி.மு இரண்டாம் நூற்றாண்டிலிருந்து அவற்றின் வரலாறு தொடங்குகிறது எனலாம். அன்று முதல் இன்று வரை அவை வாணங்களாகவும் வெடிகளாகவும் பயன்பட்டு வருகின்றன. ஆனால், அவை யாரால் எப்பொழுது எப்படி அமைக்கப்பட்டன என்பதற்குப் போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லை. பண்டைக் காலத்தில் அவை வாணங்களாகவும் வெடிகளாகவும் பயன்பட்டன. இடைக் காலத்தில் அவை போர்க் கருவிகளாயின. தற்காலத்தில்தான் அவை வானவெளி ஆராய்ச்சியால் விரைந்து வளர்ந்துள்ளன. வானவெளிச் செலவிற்குத் திறவு கோல்களாகவும், அறிவியல் வளர்ச்சிக்கு ஆக்கந்தரும் கருவிகளாகவும் அவை திகழ்கின்றன.

இந்தியாவைப் பொறுத்த வரை அவற்றின் வரலாற்றில் இரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் பின் வருமாறு: 1780-இல் ஐதர் அலியின் போர் மறவர்கள், ஏவுகணைகளைத் திறமையாக ஏவிப் பிரித்தானியப் போர்ப் படையைக் கலங்கச் செய்தனர். 1782-இல் சீரங்கப் பட்டணப் போரில் ஐதர் அலியின் மகனை திப்புசுல்தான் காரன்வாலிசுக்கு எதிராக 2,000 ஏவுகணைகளை ஏவியதாக வரலாறு கூறுகின்றது. ஏவுகணைகள் இவ்வாறு இந்தியாவில் பயன்பட்டது. அப்பொழுது ஆங்கில நாட்டில்

ஏவுகணை ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்த கான்கிரிவுக்கு ஊக்கமளித்தது. இஃதன்றி 1935-ஆம் ஆண்டு சூன் 29-இல் கல்கத்தாவில் பர்ன்பூர் என்னுமிடத்தில் அப்பொழுது பிரிட்டானியப் படையில் பணியாற்றிய சிமித் என்பார் ஏவுகணையின் முகப்பில் கோழிகளையும், அஞ்சல் கட்டுகளையும் வைத்து விடுத்தார். இஃது உலகிலேயே முதன் முதலில் நடைபெற்ற செயலாகும் 17ஆம் நூற்றாண்டிலிருந்து ஏவுகணைகள் அறிவியல் நுட்பத்துடன் வளரத் தொடங்கின. 1947-ஆம் ஆண்டிலிருந்து அவற்றின் வளர்ச்சி விரைந்தது. இதற்கு ஏதுவாக இருந்தது வானவெளி ஆராய்ச்சியே

ஏவுகணைகள் இயங்குவதிலுள்ள நெறி முறை ஈரோ என்னும் கிரேக்க அறிஞர் அமைத்த ஏவுகணையில் உள்ளமை வியப்பிற்குரியது. ஏவுகணைகளைக் கொள்கை நிலையில் வளர்த்தவர் உருசிய அறிவியலாளரான சியால்கோ விசுகி என்பார். செயல் நிலையில் வளர்த்தவர்கள் ஆங்கில அறிவியலாளர் கான்கிரியும், அமெரிக்க அறிவியலாளரான கோடர்டும், செர்மானிய அறிவியலாளரான வான்பிரானும் ஆவர். இவர்களில் சியால்கோ விசுகி வானவெளிச் செலவின் தந்தை என்றும்; கோடர்டு ஏவுகணைகளின் தந்தை என்றும் சொல்லத்தக்க தகுதி பெற்றவர்கள். வான்பிரானே வி-2 ஏவுகணைகளை அமைத்த பெருமகனார் ஆவர். இவர் இப்பொழுது அமெரிக்க வானவெளி ஆராய்ச்சிக்குத் துணைபுரிந்து வருகின்றார். அமைப்புகள் என்னும் வகையில், அமெரிக்க ஏவுகணைக் கழகமும், அனைத்துலக வானவெளிப் போக்கு வரவுக் கழகமும், அனைத்துலக வானவெளிப் போக்குவரவு இணைப்புக் கழகமும் ஏவுகணைகளின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

வகை: ஏவுகணைகள், ஓரடுக்கின பல அடுக்கின என இருவகைப்படும். இவற்றில் முன்னையது காற்றுவெளி ஆராய்ச்சிக்கும் பின்னையது வானவெளி ஆராய்ச்சிக்கும் பயன்படுகின்றன.

அமைப்பு: அறிவியல் முறையில் திருந்திய வாணமே ஏவுகணை. ஏவுகணை கருவியன்று; பல கருவிகளைக் கொண்ட கருவித் தொகுதி; பல ஆராய்ச்சிக் கருவிகளைத் தன்னுள் அடக்கிய ஓர் ஆய்வுக் கூடம். வானவெளி இயல்புகளையும் உயிர்ச் செயல்களையும் ஆராய அவற்றில் கருவிகள் இருக்கும். தொலைக் காட்சி, வானொலி, வழிப்படுத்தல், வெப்பச் சீராக்கல், உயிர் நலமாக வாழ்தல் மீட்பு ஆகியவற்றிற்குரிய ஏற்பாடுகள் அவற்றில் இருக்கும். ஏற்பாடுகளில் சிறந்தது மீட்பு ஏற்பாடு ஆகும். பொதுவாக, அவை தலை, உடல், வால் என மூன்று பகுதிகளைக் கொண்டவை. தலையிலுள்ளது மூகப்பு எடை. இதில் ஆராய்ச்சிக்

கருவிகளும் ஆய்பொருள்களும் (நாய், மாந்தன்) அடங்கும். உடலில் எரிபொருள் தொட்டிகள் இரண்டும், சுழல் நோக்கி என்னும் கட்டுப்படுத்தும் கருவியமைப்பும் இருக்கும். வால் பகுதியில் ஏவுகணைப் பொறி (*Rocket motor*), பீறிடும் குழாய், நிலைப்புக் கருவிகள் முதலியவை இருக்கும். அமெரிக்கா பயனியர்-1 என்னும் ஏவுகணையைத் திங்களுக்கு ஏவியது. இதன் எடை 50 டன். இதை 50 ஒப்பந்தக்காரர்களும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களும் இரவும் பகலும் உழைத்துக் கட்டி முடித்தனர். இதில் மூன்றிலக்கம் நுண்பகுதிகள் அடங்கியிருந்தன. ஏவுகணையின் திரிந்த, திருந்திய தோற்றங்களே செயற்கை நிலாக்கள் ஆகும். உருசிய ''பூத்துனிக்கு,'' அமெரிக்க ''எக்சுபுளோரர்'' முதலியவை செயற்கை நிலாக்களுக்கு எடுத்துக் காட்டுகள் ஆகும்.

நெறிமுறை: ஒவ்வொரு செயலுக்கும் இணையாகவும் எதிராகவும் எதிர்ச்செயல் உண்டு. இது நியூட்டன் இயக்க விதிகளில் மூன்றுவது. இதன் அடிப்படையிலேயே ஏவுகணையும் இயங்குகிறது. அதன் பொறியிலிருந்து எரியும் எரிபொருள் மிகுந்த அழுத்தத்தை உண்டாக்குகிறது. இந்த அழுத்தம் மிகுந்த விசையுடன் துளையின் வழியாகப் பின்னேக்கிச் செல்கிறது. இது பின்னேக்கு அழுத்தமாகும். இதற்கு இணையாகவும் எதிராகவும் உண்டாகும் முன்னேக்கு அழுத்தம் ஏவுகணையை மேல் நோக்கிக் செலுத்துகின்றது.

ஏவப்படுதல்: ஏவுகணை செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் ஏவப்படலாம். காற்றுவெளி ஆராய்ச்சிக்குச் செங்குத்தாக ஏவப்படும். அவ்வாறு ஏவப்படும் கணை ஓரடுக்கு அல்லது ஈரடுக்கைக் கொண்டதாக இருக்கும். வானவெளி ஆராய்ச்சிக்குக் கிடைமட்டமாக ஏவப்படும். இது மூன்றடுக்கைக் கொண்டிருக்கும்; நிலவுலகை வலம் வரும். அல்லது திங்களுக்குச் செல்லும்; செவ்வாய் வெள்ளி முதலிய கோள்களுக்கும் செல்லும். நிலவுலகை வலம் வரும் ஏவுகணை இயங்கும் முறை இவ்வாறே ஏவுகணையின் முதல் அடுக்குச் செங்குத்தாக ஒரு மணிக்கு 300 கல் விரைவு அளவில் 30 கல் உயரம் செல்லும். இப்பொழுது இஃது இரண்டாம் அடுக்கை இயக்கிவிட்டுக் கழலும் பின், இரண்டாம் அடுக்கு 45° கோணத்தில் ஒரு மணிக்கு 1,200 கல் அளவில் 260 கல் உயரம் சென்று மூன்றும் அடுக்கை இயக்கிவிட்டுக் கழலும். இறுதியாக மூன்றுமடுக்கு ஒரு மணிக்கு 18,000 கல் விரைவில் 560 கல் உயரத்திற்குச் சென்று நிலவுலகை வலம் வரும். அது வலம் வரும் வழி கோழி முட்டை வடிவில் இருக்கும்.

சிக்கல்கள். எரிபொருள்: ஒரு நியமத்துக்குக் குறைந்தது 4 டன் எரிபொருள் செலவழிவதால், ஏவுகணையின் எடையில் 90 பங்கு எரிபொருளே அடைத்துக் கொள்கின்றது. ஏவுகணை தூக்க வேண்டிய எடை மிகுதியாக மிகுதியாக எரிபொருளின் எடையும் மிகும். எனவே, உயர்ந்தவகை எரிபொருளைப் பயன் படுத்தியும், கருவிகளைச் சிறிதாக்கியும் எரிபொருள் சிக்கல் தீர்க்கப் பட்டுள்ளது.

விரைவு: நீர்ம நிலையிலுள்ள உயர்ந்த வகை எரிபொருள் மிகுந்த விரைவைக் கொடுக்க வல்லது. தவிர, அடுக்கு நுணுக் கத்தைப் பயன்படுத்தியும் விரைவைப் பெறலாம். மேலும் வானவெளி நிலையத்தைப் பயன்படுத்தி விரைவை மிகுதிப் படுத்தலாம்.. இவை எல்லாம் நடைமுறையில் நிறைவேறிய செயல்களே. பொதுவாகக் கல்நெய்யும் (*Petrol*) நீர்ம உயிர் வளியும் (*Liquid oxigen*) ஏவுகணை எரிபொருள்கள் ஆகும்.

ஈர்ப்பு: இஃது ஒரு பெரிய சிக்கலாகும். ஏவுகணை மிக விரைவில் சென்றால் இதை வெல்லலாம். ஒரு மணிக்கு 18,000 கல், 25,000 கல் என்னும் அளவில் சென்று ஏவுகணைகள் ஈர்ப்பை வென்றுள்ளன.

பிற: வழி சரியாக இருந்தால்தான் ஏவுகணை இலக்கை அடையும். இலக்கு என்பது அடைய வேண்டிய இடமாகும். இலக்கு நிலவுலகைச் சுற்றி வருதலாகவும், திங்கள் முதலிய கோள்களை அடைதலாகவும் இருக்கலாம். கணக்கிடப்பட்ட வழியில் இம்மியும் தவறாமல் சென்றால்தான் ஏவுகணை இலக்கை அடையும். சுழல் நோக்கி என்னும் கருவியமைப்பு ஏவுகணை யின் வழியைக் கட்டுப்படுத்தும் அதன் வழியை அறிய வானொலி பயன்படும். மீட்க, தகுந்த ஏற்பாடு (விரைவுக் குறைப்பு ஏவு கணை, விண்குடை) ஏவுகணையில் இருக்கும்.

பயன்கள்: ஏவுகணைகள் வெற்றிடத்தில் செல்லக்கூடிய கருவியமைப்புகள்; ஈர்ப்பையும் வெல்லக்கூடியவை. எனவே, அவை வானவெளிச் செலவிற்குத் திறவுகோல்கள். உலக அளவில் வானிலையை ஆராயவும் (எ.டு. அமெரிக்க "டிராசு" நிலாக்கள்), வான வெளி இயல்புகளை ஆராயவும், கடல்களை ஆராயவும், நிலவுலகு திங்கள் முதலிய வானவெளிப் பொருள் களின் காந்தப் புலங்களை ஆராயவும், கதிரவனையும் கதிர்வீச் சையும் ஆராயவும், உலக அளவில் வானொலித் தொடர்பு, தொலைக் காட்சித் தொடர்பு கொள்ளவும் (எ. டு. அமெரிக்க டெல்ஸ்டார்) நிலா, சிறப்பாக ஏவுகணைகள் பயன்படுத்தப் படுகின்றன. *

இந்தி எதிர்ப்பு:

தரையினில் உயர்ந்தாய் தமிழா–நீ, தலை
தாழ்ந்திட வாழ்தல் சரியா?
பெருமையில் நிறைந்த மகன் நீ–உன்தாய்
பேதுற வாழ்தல் முறையா?
ஒரு முதல் அறமகள் அன்றே?–அவளை
ஓயா தழவிடல் நன்றே?
பெருமுதல் அவளுனக் கன்றி–உன்னைப்
பெற்றதற் கென்னஉன் நன்றி?

வருவது வரட்டும், எழடா!–வெற்றி
வாளினைக் கையில் எடடா!
பொருகளம் நோக்கி நடடா!–வாளைப்
புயலெனச் சுழல விடடா
வரவரப் பகைத் தலை அறடா!–மேலும்
வரவினை எதிர்பார்த் திருடா!
பெருமிதம் வெற்றியிற் கொளடா!–பிறகுனைப்
பெற்றவள் தன்னைத் தொழடா!

– கணியன், கோவை-1.

ஒடென்று மனையாளை உதறித் தள்ளி ,
உதட்டாலே உறவாடும் பரத்தை தன்னைச்
'சூடென்று மலரீந்து, சொந்தம் கூறிச்,
சுவையென்றும் அமிழ்தென்றும் இதழை யுண்டு,
'பாடென்று பண்மீட்டி இன்பம் கொள்வார்;
பயில்வதெலாம் விரைவினிலே உயிர் பறிக்கும்
கேடென்ப தறியாரோ? இந்திப் பித்தர்
கெழுந்தமிழை விட்டிந்தி விழைகின்றாரே!

உலகாளும் உயர்வுண்டு தமிழுக் கென்றே
உணராமல், உப்பற்ற இந்தி யொன்றே
நலமென் றிங்(கு) உளறுகிறார்; நஞ்சுதன்னை
நாமுண்ணச் செய்கின்றார்; தாமும் உண்பார்;

குலநன்மை தனைவெறுத்துக் கொல்லும் பேயைக்
கும்பிட்டு வாழுதற்குக் கோயில் செய்வார்!
பலகாலும் பாலூட்டி வளர்த்த தாயைப்
பல்லாரும் அறிந்திடவே தூற்றுவாரோ?

கூகைதனைக் குயிலென்பார்; கொல்லும் வேங்கைக்
கூட்டத்தைப் பெற்றமென்பார்; தமிழின் முன்னுள்
வாகையினைச் சற்றேனும் எண்ணு மாக்கள்
வாடையினைத் தென்றலென்றே வழக்குச் செய்வார்!
ஈகையினுல் உயர்ந்திட்ட தமிழன் பண்பை
இழிநெஞ்சிற் கொள்ளாத மாக்க ளாவார்!
ஆகையினுல் அவர்தங்கள் கண்கள் கெட்டார்
அருந்தமிழின் உண்மைதனை அறிவர் தாமோ?

கோழைமையை மறமென்பார்; குவித்து வைத்த
குப்பைதனை மலையென்பார்; காற்றில் வீழும்
வாழைதனை வாளென்பார்; வாத்தின் ஓசை
வளரின்ப இசையென்பார்; ஆடகப் பொற்
பேழையினை மரத்தினியல் பெட்டி என்பார்
பெரும்பூனை தனைக்கண்டு புலிதான் என்பார்;
தாழைமடல் மணம்தீய நாற்றமென்பார்;
தமிழன்னை மெய்ப்பெருமை உணருவாரோ?

–தே. சேசுராசு, தஞ்சாவூர்–2.

செத்தொழிந்த ஆரியத்தின் சக்கையினைக் கொண்டுவந்து
பொத்தல் கலயத்தில் போட்டிங்கே–பித்துப்
பிடித்தவர்கள் இந்திப் பெயரிட்(டு)ஈ கின்ருர்
சுடச்சுட வே பழைய சோறு!

–மு. கலைஎழிலி, கரந்தை.

உள்ளங்கள் உணர்வாயின், உணர்வெல்லாம் தமிழாயின்,
பள்ளங்கள் படுகுழிகள் தமைநோக்கிப் புகுகின்ற
வெள்ளங்கள் போலாயின், வண்டமிழர் ஒன்ருயின்
கள்ளங்கள் கரவுகள் கனித்தமிழை என்செய்யும்?

பேச்சுகள் தமிழாயின், கலப்புகள் பாழாயின்
மூச்சுகள் தமிழ்காக்கப் புயலாக எழுமாயின்
பூச்சுகள் கொடுத்திங்குப் புகுகின்ற இந்திப்பேய்
வீச்சுகள் கள்ளங்கள் வியன்தமிழை என்செய்யும்?

துட்டுக்கும், பதவிக்கும் துடித்தேங்கித் தன்வாழ்வு
மட்டுக்கும் வாழ்கின்ற மடத்தமிழன் மெய்காணின்
கொட்டுக்கும் முழக்குக்கும் கூத்தாடும் இந்திப்பேய்
வெட்டுகள் குத்துகள் வியன்தமிழை என்செய்யும்?

கூட்டுக்குள் கிளியானர், கொத்தடிமை வழிபோனர்
வீட்டுக்குள் முடமானர் விழைவெல்லாம் தமிழாகிப்
பூட்டுக்கண் திறப்புற்ற புலியாகி எழுவாரேல்
நாட்டுக்குள் இந்திமொழி நற்றமிழை என்செய்யும்?

இருட்டுக்குள் நெளிகின்ற இருளுள்ளம் ஒளியாயின்
புரட்டுகள் சூழ்ச்சிகள் புரிகின்ற வடக்கர்தம்
வெருட்டுகள் உருட்டுகள் மண்ணுகி அன்னர்செய்
திருட்டுகள் வெளியாகும்; தீந்தமிழே பின்பாளும்!

–இர. செயவீர ராமச்சந்திரன், குளமங்கலம்.

காதல்:

துயரம் வாழும் இந்த நிலம்
துன்பப் பயிரின் சொந்த நிலம்
கயற்கண் ணுளே! நம்மன்பு
கனிந்திட இங்கே வழியில்லை!
துயரெனும் வாடை வீசாமல்
தூமதிக் கதிரே பொழிகின்ற
வியனுல கிற்குச் செல்வோம்வா,
வேண்டிய மட்டும் களிப்போம் வா!

பனிமதி வானம் வரும்வேளை
பார்த்தே அடிவா னம்நோக்கித்
தனிவழி யாக நடப்பேன்நான்
தளிர்ப்பூங் கொடிநீ பின்தொடர்வாய்
கனவும் நனவும் ஒன்றுகும்
காதல் உலகில் நாம் இணைவோம்
இனிமை! இனிமை! இனிமையடி
இன்பம் கொள்ளை கொள்ளையடி!

கனிபால் வேண்டேன், பொன்வேண்டேன்
கனியும் உன்றன் குளிருடலம்
தனிமை யாய்என் அருகினிலே
தங்கி இருந்தால் அதுபோதும்,
கனிவாய் அணைத்தே உயர்காதற்
கதைகள் வளர்ப்போம் வாராய் நீ!
இனியும் என்ன எண்ணமடி?
ஏனோ இந்தத் தயக்கமடி?

–வழிப்போக்கன், காளையார்கோயில்.

அருகில் மிகஅருகில் அன்பாய் அவள்நெருங்கி
அத்தான் எனவழைத்து வந்தே-
உருகி மிகஉருகி உள்ளம் கலங்கியதால்
உடலே தளர்ந்தபடி நின்று-
கருகி மிகக்கருகி காய்தற் குளேஇவளைக்
காப்பீர் எனவுரைத்துக் கண்ணுல்
பருகி மிகப்பருகி வேட்கை மிகுந்தவள்போல்
பட்டு முகங்கனிந்து நின்ருள்!

'காலம் மிகச்சிறிது; காதல் மிகப்பெரிது;
கண்ணே! பிரிவுநமக் கில்லே.
பாலம் இணைத்திருக்கும் பாடும் இருமணத்தை;
பண்ணே ஒலித்திருக்கும் அங்கே.
ஓலம் இடுமுலகில் ஓடி அழிவதுபோல்
ஒன்றும் துயரமில்லே இங்கே!
கோலம் இடுமுனது கூர்மைக் கருவிழியின்
கொள்கை நிலேத்திருக்கும்' என்ருன்.

கன்றிச் சிவந்தமுகம் கண்ணீர் பெருகிவரக்,
கன்னி, கனிந்தவன்கைப் பற்ற,
'ஒன்றும் புரியவில்லே; உள்ளம் கலங்குவதேன்?
உடலும் துடித்திடுதல் ஏனே?
என்று நினேத்துணர்வில் ஒன்றி இருந்தமுகம்
ஒன்று மறுமுகத்தைப் பார்க்கும்.
நின்று பழக்கமிலாக் காலப் பெருமகனே!
நின்றே இவர்மகிழச் செய்வாய்!

-தென்கச்சி. கோ. சுவாமிநாதன், கோவை-3.

பொது:

செத்த பிணமொரு புறமும்-மெள்ளச்
சாகும் பிணமொரு புறமும்-அலறிக்
கத்தும் குரலொரு புறமும்-ஐயோ!
கதறல் ஒலியொரு புறமும்-நோய்ப்
பித்திற் பிதற்றலோர் புறமும்-நெஞ்சைப்
பிழியும் அழுகையோர்புறமும்-இவை
மொத்தம் மலிந்திடும் நிலேயம்-ஒரு
மருத்துவ மனே!மனம் குலேயும்.

நொண்டி நடக்குமோர் சிறுவன்-மிக
நொந்து கிடக்குமோர் உருவம்-முதுகுத்
தண்டுபோய்க் கூனும் கிழவி-ஊன்றித்
தள்ளாடித் தவித்திடும் கிழவன்-அங்கு

விண்டுரைக்க ஒண்ணு வலியால்–மிக
வீறிட் டலறுமோர் குழந்தை–எலாம்
கண்டுநீர் பொழிந்திடும் கண்கள்–அழுது
கவலுமென் மனத்திலே புண்கள்.

மருத்துவர் என்னும் பெயரில்–திரியும்
மறலியர் பிறர்தம் உயிரில்–மன
வருத்தம் கொள்ளாத புல்லர்–நோய்
முதலொடு வாயறி வில்லர்–அன்பு
பொருந்துமோர் இன்சொல் விருந்தும்–இவர்
புரிந்து கொளாததோர் மருந்து–பொருள்
இருந்தவர்க் கேற்றநல் அன்பர்–மிக
எளியவர் எனிலுயிர் தின்பர்!

– மு. மகிழரச

வைதல்:

மண்ணில் நழுவி எழிற்கனியாய் மலர்க்கை காலால் தாளமிட்டு
விண்மீன் விழியில் மொழியவிழ விகாதேன் மலர்வாய்
மழகிலமொழிப்
பண்ணில் உலகைக் குளிர்விக்கும் பச்சை மகவுகள்
தம்மையும்யாம்
கண்ணீர் சொரியக் கொடுஞ்சாவே! கைக்கொள் கின்றாய்,
முறையிதுவோ?

ஊரின் நடுவே கனிகுலுங்கும் உயர்ந்த மரமாய் உலகென்னும்
தேருக் காணி போல்நாளும் திறந்த விழிகள் மூடாமல்
பாருக் குஞற்றும் தொண்டரையும் பறிக்கின்றாய்நீ
கொடுஞ்சாவே!
ஆரே பொறுப்பார் எம்விழிநீர் அருவி யாக்கும் நின்செயலே?
கட்டிளங் காளையர் கன்னியரை, கடிமணம் புரிந்த
நல்லிணையை
வெட்டுகின் றாய்நீ அம்மட்டோ! வெந்துயர் அடக்கி
விருப்படக்கிக்
கட்டிக் கரும்பைப் பெறுந்தாயைக் கண்ணிலி யேநீ
முறிக்கின்றாய்
பட்ட மரமோ? வல்லிரும்போ? பாருங்கல்லோ நின்னுளமே?

வாழ்த்தல்:

மீமிசை மாடம் மிதக்குநரும் மிகச்சிறு மண்குடில் முடங்குநரும்
காமனை வென்றிகொள் கவினியரும் காணக் கண்கூசும்
பிணியினரும்
ஆமை அடிமை விழைவுநரும் அரிமாவிடுதலை முழக்குநரும்
ஊமை சொன்மழை பொழியுநரும் ஓர்ந்திடில் உன்முன்
ஒன்றுவார்!

வாழ்வெனும் ஒருவன் அணைப்பினிலே மனைவளம் செல்வம்
சிலருக்கே!
தாழ்வெனும் ஆழ்கடல் அமுக்குண்டே தளர்வார்
தவிப்பார் பலரிங்கே;
ஏழ்மை, செல்வம், உடைமையெனும் ஏற்றத் தாழ்வை
நின்னுலகில்
ஆழ்ந்து தேடினும் கண்டிலனே அதனால் நின்னை
வாழ்த்துவலே!

வேண்டல்:

உள்ளமும் உதடும் வேருனேர், ஊர்முதல் அடித்தே
உலையிடுவோர்;
கொள்ளைப் பொருளைப் பெரும்பாலோர் கும்பி கடுகக்
குவித்திருப்போர்,
கள்ளர் தம்மையும் சாவேநீ கதறக் கதற உலகுய்ய
அள்ளிக் கொள்க வாழ்வளிக்க அன்பர் தூயர் ஏழையர்க்கே!

பள்ளன் பறையன் படையாட்சி பார்ப்பான் எனுங்குலத்
தாழ்வுயர்ச்சி
உள்ளத் தேற்று நடப்பவரை உயர்ந்த தாய்மொழி
தாய்நாட்டை
எள்ளள வேனும் போற்றுமல் எள்ளித் தாழ்த்தும்
இழிபிறப்பைக்
கொள்ளை யிடுக! வரலாற்றைக் கொடுக்கும் இறவாப்
பெருஞ்சாவே!

இரா. இளவரசு, எம். ஏ.

ஐந்தறிவு கொண்டவற்றை யாள்வ தற்கே
ஆறறிவு கொண்டவனைப் படைத்த தேவன்
செந்திறத்தால் உளம் வளரல் வேண்டும் என்றே
செங்குத்தாய் உடல் நிமிரும் சிறப்பளித்தான்.
முந்தி நின்ற உயிர்கட்குத் தலைமை யேற்க
மொழி யொன்றைக் கற்பித்தான். பிறகு நோக்கி
'எந்தவகை நீ வாழ்வாய் மாந்தா!' என்றான்
இயற்கைவழி எனக்குரைப்பீர் என்றான் மாந்தன்.

''தரக்கருதும் ஈகத்தின் தன்மை'' கேட்டான்;
'தன்னலத்தை வேரறுத்தல்! என்றான் மாந்தன்;
கரிக்காற்றை யுட்கொண்டு பிறவுயர்க்குக்
கனி மரங்கள் உயிர்க்காற்றை வழங்கும் உண்மை
விரிக்கின்ற காட்சிக்கு முதன்மை யாகும்
வெட்டுபவர் குறைத்தாலும் அவற்றின் வாழ்வு
சிரிக்கின்ற மலர்பூத்தும் நிழலளித்தும்
செழித்திருக்கப் பாரே''வ்றான் மாந்தன் கண்டான்.

''அறிவென்ருல் அறிவாயோ?'' என்ருன் தேவன்;
'அல்லவற்றை நீக்கி நலங் கொள்வ தென்ருன்;
எறிதிரையார் நீர்ப்பரப்பில் கரைந்திருக்கும்
இனியவுயிர்க் காற்றினையே வாயால் கொண்டு
செறிவற்ற தண்ணீரைத் திரியும் மீன்கள்
செவுள் வழியே வெளிப்படுத்தும் சீர்த்தி பாராய்!
நெறியாக மகிழ் வெண்ணி அவைதாம் துள்ளி
நீந்து வதைப் பாரே''ன்ருன். மாந்தன் கண்டான்.

ஒப்புரவுக் கென்ன பொருள்? என்ருன் தேவன்.
''உதவுவதே யாவருக்கும்'' என்ருன் மாந்தன்.
துப்பரவு செய்கின்ற காக்கை கூவிச்
சுற்றத்தை யழைத்துண்ணும் தன்மை காணுய்.
எப்பொழுதும் அவை உணவைப் பதுக்க மாட்டா.
இல்லையெனக் கவலையுற இரக்க மாட்டா.
கப்பு கருஞ் சிறகதனை வான்விரித்தே
களிப்புறலைப் பாரென்''ருன் மாந்தன் கண்டான்.

ஓரறிவு முதலான அஃறிணையின்
உயிர்க்கெல்லாம் இப்பண்பே இயல்பாய் நிற்கும்,
சீரறிவு கொண்டவனே! உன்னி னத்தின்
செழுமைக்கு வழிகாட்டி விட்டேன். நீதான்
நேரவற்றை மேற்கொண்டு செயலில் வாழ்ந்தால்
நெகிழ்ந்துனையே உய்விக்க வருவேன்'' என்றே
ஈரமொழி புகர்ந்திறைவன். மறைந்தான் அந்த
எழில் தோற்றம் மீண்டுமவன் கண்டானில்லை,

–மீனவன்

மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்!

தமிழன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் நுண்ணிய பொருள் உணர்த்தும் உலகவழக்குச் சொற்கள் இன்று புதுமை நாகரிகத்தின் பரபரப்பும் ஆழமின்மையும் மிகுதியும் பரவாத நாட்டுப்புற மக்களின் அன்ருட வாழ்க்கையிற் பயிலப் பெறுவனவே யல்லாமல், பிற விடங்களில் மறைந்துவிட்டன என்றே கூறலாம். அச்சொற்களை மக்கள் மறந்து போகாமல் செய்தலும், அவற்றின் நுணுக்கமும் சிறப்புமறிந்து அவற்றை இலக்கிய–நடைமுறை வழக்கில் பயன்படுத்தலும் நம் கடனாகும். எனவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள மாணவரும், ஆசிரியரும் தமிழன்பரும் தங்கள் தங்கள் வட்டாரங்களிலும் அண்டை அயற் சிற்றூர்ப்பகுதிகளிலும் வழங்கிவரும் அவ்வரிய, அருகிய சொற்களைத் தொகுத்துத் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம். அவை விடுத்தார் பெயருடன் தென்மொழியில் வெளியிடப்பெறும்.

எட்டாம் தொடர்

போர்மறவனும் காதலும்

சியார்சு பெர்னார்டு சா. தமிழில்: 'வழுதி'

செர்சியசு: அப் பெரும் படை மறவன் கையில் நாமிரு வரும் இரண்டு குழந்தைகள்போல் ஆய்விட்டோம். ஆமாம். ஒன்றும் தெரியாத சின்னஞ் சிறு குழந்தைகள்.

இரெய்னு: அவன் எப்படி இருப்பான்?

காதரின்: இரெய்னு, என்ன புல்லிய விஞ இது!

செர்சியசு: நாடோடி வாணிகன் ஒருவனுக்குப் பட்டாள உடை அணிந்ததுபோல் காட்சி அளிப்பான் முடி முதல் அடி வரை முதலாளித் தன்மையில் ஊறிப் போனவன்.

பெட்காஃப்: (பல் தெரிய நகைத்து) செர்சியசு, காதரி னுக்கு அந்தக் கதையைச் சொல்லு. அவன் நண்பன் சொன் னானே, சிவிவிநிட்சா போருக்குப் பிறகு அவன் எப்படித் தப்பி ஓடிவந்தான்.....என்ற வியப்பான (Queer) கதை!..... அந்த இரண்டு பெண்கள் அவனை ஒளித்துவைத்தார்களாமே...!

செர்சியசு: (கடுப்பான நகைப்புடன்) ஆமாம்... அஃது ஒரு கதை! நான் குருட்டுத்தனமாகப் போய்த் தாக்கினேனே அந்தத் தகரிப் படையில்தான் அவன் பணியாற்றிக் கொண் டிருந்தான். நல்ல கைதேர்ந்த போர் மறவனுயிருக்கவே, நம் குதிரைப் படை துரத்தியதும், எல்லாரையும்போல் அவனும் ஓட்டம் பிடித்தான். அவர்களிடமிருந்து தப்புவதற்காக நீர்த் தூம்பு வழியாக ஏறிப் பல்கேரிய இளம் பெண் ஒருத்தியின் படுக்கை அறைக்குள்ளே நுழைந்துவிட்டானும். நாடோடி வாணிகனுக்குரிய இவனுடைய பேச்சுத் திறமை கண்டு அந்த இளம் பெண் மயங்கிப் போனுளாம். மிகவும் அடக்க ஒடுக்கமாக ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரை அவனை அங்கேயே மறைத்து வைத்திருந்து, பிறகு, தன் நாட்டத்தையில் ஐயம் விழுந்துவிடல் கூடாதே என்று அவளுடைய தாய்க்கு அறிவித்து அழைத்து வந்தாளாம். அந்த மூதாட்டிக்கும் அவனை மிகவும் பிடித்து விட்டதாம்! காலையில் அவனை-அந்த வீட்டுக்காரர் போர்க்களம் போயிருக்கவே அவருடைய குப்பாயத்தை அணிவித்து உரு வத்தை மறைத்து வெளியே அனுப்பி வைத்தார்களாம்...

இரெய்னு: (மிகவும் மிடுக்கான பெருமிதத்துடன் எழுந்து) செர்சியசு, உங்கள் போர்க்கள வாழ்க்கை உங்கள் மனப் பண் பாட்டைக் கெடுத்துக் கீழ்த்தரமாக்கி விட்டது. இப்படி ஒரு வெட்கங்கெட்ட கதையை என்முன்னுல் சொல்லுவீர்கள் என்று நான் நினைக்கவில்லை.

காதரின்: (தாமும் எழுந்து) அவள் சொல்வது சரி, செர் சியசு, அப்படிப்பட்ட பெண்கள் உண்மையிலேயே இருந்தா லும்கூட, அவர்களைப் பற்றி நாங்கள் தெரிந்துகொள்ளாமலிருப் பதே நல்லது.

பெட்காஃப்: பூ! முட்டாள்தனம். இப்பொழுது என்ன கெட்டுவிட்டது?

செர்சியசு: (நாணத்துடன்) இல்லை, பெட்காஃப், நான் செய்தது தவறுதான். (இரெய்னுவை நோக்கி மிகத் தாழ்மை யுடன்) என்னை மன்னித்துவிடு. நான் மிகவும் வெறுக்கத் தக்க முறையில் நடந்துகொண்டேன். (அவள் விறைப்புக் குறையா மல், தலை தாழ்த்துகிறாள்) நீங்களும் என்னை மன்னிக்க வேண்டும், அம்மா. (காதரினும் தலை தாழ்த்தி அமர்கின்றார். அவன் மெல்ல இரெய்னுவை நோக்கிப் பேசுகிறான்) கடந்த சில மாதங்களாக நான் வாழ்க்கையின் கோணலான பக்கத்தைப் பற்றியே அறிந்து அறிந்து பகடியாளனைப் போய்விட்டேன். ஆயினும், என் பகடியை நான் இங்கே அவிழ்த்திருக்கக்கூடாது. அதுவும் உன் முன்னுல்!... மிகவும் தவறுதான் இரெய்னு (அடுத்து, மற்றவர்கள் முன் திரும்பி ஒரு நெடிய பேச்சைத் தொடங்க வாயெடுக்கிறான். அதற்குள் படை முதல்வர் பேச்சுக் கொடுக்கிறார். சும்மா!... எல்லாம் முட்டாள்தனம் செர்சியசு! ஒன்றுமில்லாததைப் பெரிதுபடுத்திக் கொள்கிறார்கள் ஒரு படை மறவனின் மகள், உரையாடல் கொஞ்சம் கடுமையாக இருந் தாலும் முகம் சுளிக்காமல் தாங்கிக்கொள்ளத் திறம் பெற்றிருக்க வேண்டும். (எழுகிறார்) சரி, நேரம் ஆகிவிட்டது நம் வேலை யைத் தொடங்க வேண்டும். இப்பொழுது, இந்தப் படைகள் எல்லாம் பிலிப்பாப் பொலிசுக்கு எப்படித் திரும்பச் செல்வது என்பதை முடிவு கட்ட வேண்டும். சோபியாப் பாதையில் அவற்றுக்குத் தீனிக்கு ஏற்பாடு ஒன்றும் இல்லை. (வீடுநோக்கிச் செல்கிறார்.) வா, வா, (செர்சியசு எழுந்து போகத் தொடங்கு கிறான். காதரின் எழுந்து அவனை வழி மறிக்கிறார்)

காதரின்: (கணவனை நோக்கி) இன்னும் சிறிது நேரம் செர்சியசுக்கு வேலை கொடாமலிருக்க முடியாதா? இரெய்னு இன்னும் அவனிடம் பேசக்கூட இல்லை. நான் வேண்டுமானுல் அந்தப் படை ஏற்பாடுபற்றி முடிவு கட்டுவதில் உங்களுக்கு உதவியாக இருக்கிறேன்.

செர்சியசு: ..ஐயோ, அம்மா! முடியாது... நீங்கள்.....

காதரின்: (விளையாட்டாக அவனைத் தடுத்து நிறுத்தி,)... நீ இங்கே இரு செர்சியசு! சடுத்தம் ஒன்றுமில்லை அவரிடத்தில் நான் சிறிது பேசவேண்டும் (செர்சியசு, தலைதாழ்ந்து, பின்னல் அடி வைக்கிறான்.) வாருங்கள் அத்தான் (பெட்காஃபின் தோளைப் பற்றிக்கொண்டு) மின்சார மணியைப் பார்க்கலாம்.

பெட்காஃப்: நல்லது... நல்லது... இருவரும் அன்புடன் வீட்டினுட் செல்கின்றனர். செர்சியசு தனிமையில் இரெய்னுவுடன் விடப்படுகிறான். இன்னும் அவள் சினமாக இருப்பாளோ என்று கவலையோடு அவனை நோக்குகின்றாள். அவள் புன்னகையோடு தன் இரு கைகளையும் அவனுக்கு நேராக நீட்டுகின்றாள்.

செர்சியசு: (விரைந்து அவளை நெருங்கி) எனக்கு மன்னிப்புக் கிடைத்துவிட்டதா?

இரெய்னு: (வியப்புடனும் வழிபாட்டுணர்வோடும் அவனை நோக்கிக் கொண்டே தன் கைகளை அவன் தோளின்மேல் வைக்கின்றாள்) என் தலைவர் நீங்கள்! என் அரசர்!

செர்சியசு: என் அரசீ! (அவள் நெற்றியில் முத்தமிடுகின்றான்)

இரெய்னு: உங்களை நினைத்தால் எனக்கு எவ்வளவு பொறுமையாக இருக்கிறது! வெளியுலகில் சென்று போர்க்களத்தில் நுழைந்து, செயற்கரிய செய்திருக்கின்றீர்கள். உலகில் உள்ள எந்தப் பெண்ணும் கண்டு போற்றும் தகுதி பெற்றிருக்கிறீர்கள். நான் என்னவென்றால் வீட்டுக்குள்ளேயே வேலையில்லாமல் அடைபட்டுக் கிடக்கிறேன், பயனற்ற வெறுங் கனவுகளைக் கண்டுகொண்டு! எந்த ஆடவனுக்கும் தகுதி வாய்ந்தவள் என்ற உரிமையை எனக்களிக்கும் ஒரு செயலையும் நான் செய்ததில்லை.

செர்சியசு: அன்பே, என் செயல்கள் அனைத்தும் உன் செயல்களே! நீயே எனக்கு எழுச்சியூட்டியவள். தன் காதலுக்குரியவள் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்க விளையாட்டுப் போட்டியரங்கில் இறங்கும் பழங்கால மறவனைப் போலன்றோ நான் போரில் இறங்கினேன்!

இரெய்னு: என் எண்ணத்திலிருந்து ஒரு நொடிப்பொழுது கூட நீங்கள் விலகவேயில்லை. (மிகவும் உருக்கமான குரலில்) செர்சியசு, நீங்களும் நானும், உயர்நிலைக் காதலை அடைந்து விட்டோம் என்று நினைக்கின்றேன். உங்களை நினைக்கும் பொழுது, ஒரு புல்லிய செயலைச் செய்யவோ, ஓரிழிந்த நினைவை நினைக்கவோ என்னால் முடியவில்லை.

செர்சியசு: என் பெருமாட்டி! என் தூய்மை நங்காய்!... (மிகுந்த வழிபாட்டுணர்வுடன் அவளைத் தழுவுகிறான்.)

இரெய்னு: (தானும் அவனைத் தழுவி) என் நலிவ!..... என்.....

செர்சியசு: சு!... சு!... அன்பே... நானன்றே உன்னை வழிபட வேண்டும்! நங்கை ஒருத்தியின் தூய அன்பை நோக்க, சிறந்த மாந்தனும்கூட அதற்கு எத்துணைத் தகுதியற்றவனாக இருக்கின்றான் என்பது உனக்குத் தெரியாது.

இரெய்னு: நான் உங்களை நம்புகின்றேன்; காதலிக்கின்றேன்... நீங்கள் ஒருபொழுதும் என்னை ஏமாற்றிவிடமாட்டீர்கள் செர்சியசு! (உலூக்கா வீட்டுக்குள்ளிருந்து பாடிக் கொண்டிருப்பது காதில் விழுகின்றது. உடனே இருவரும் விலகுகின்றனர்) அதோ, அவள் முன்னிலையில் கூட, உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு பேச என்னால் முடியாது என் உள்ளம் உணர்வால் பொங்கி வழிகின்றது. (உலூகா, தட்டுடன் வருகிறாள். மிசைப் பலகை அருகு சென்று பொருட்களை எல்லாம் தட்டில் எடுத்து வைக்கிறாள், எதிர்ப்புறம் நோக்கி நின்றுகொண்டு.) நான் என் தலைக் கவிப்பை எடுத்துக் கொண்டு வருகிறேன் சிறிது நேரம் வெளியே சென்று வரலாம்... உங்களுக்குப் பிடிக்காது?...

செர்சியசு: விரைந்து வந்துவிடு; ஐந்து மணித்துளியளவு நீ இல்லாமற்போயினும் அஃது எனக்கு ஐந்து மணி போல் தோன்றும். (இரெய்னு உள்ளே ஓடுகின்றாள்) படிக்கட்டுகளின் உச்சியில் போய் நின்று திரும்பி, செர்சியசை நோக்கி முத்தமிடுவதுபோல் செய்கை காட்டுகின்றாள் ஒரு நொடி செர்சியசும் அவளை உணர்வுடன் நோக்குகின்றான். பின்னர் மெல்ல அப்பால் திரும்புகின்றான். அவன் முகத்தில் உயர்ந்த பெருமகிழ்வின் ஒளி வீசுகின்றது... அதற்குள் அவன் பார்வை வேறுபுறம் திரும்புகின்றது. உலூக்கா கண்ணிற் படுகின்றாள். உடனே அவன் கவனம் அவள்பால் திரும்புகின்றது. திருட்டுத்தனமாக அவனைப் பார்த்துக்கொண்டே குறும்பாக மீசையை முறுக்குகின்றான். இடது கை இடுப்பில் இருக்கின்றது. கால்களால் தரையில்தட்டி ஒலி எழுப்பிவிட்டு, உலூக்காவின் எதிரில்போய் நிற்கிறான்) உலூக்கா, உயர்நிலைக் காதல் என்றால் என்ன என்று உனக்குத் தெரியுமா?

உலூக்கா: (திகைப்புடன்) தெரியாது, ஐயா!

செர்சியசு: எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான் இந்தக் காதல். பிறகு சலிப்புத்தட்டிப் போகிறது. அதற்குப் பின்பு சிறிது ஓய்வு வேண்டும்போல் இருக்கிறது.

உலூக்கா: (களங்கமில்லாமல்)... சிறிது காப்பி அருந்தினால் நன்றாயிருக்குமா ஐயா? (காப்பிக் கலத்தை எடுக்கக் கையை நீட்டுகின்றாள்)

செர்சியசு: (அவள் கையைப் பற்றிக் கொண்டு) நன்றி உலூக்கா...

உலூக்கா: (கையை இழுப்பதுபோல நடித்துக்கொண்டு) ஐயோ!... நான்... காப்பியை எடுப்பதற்கல்லவா..... நீங்கள் செய்வது எனக்கு வியப்பாக இருக்கிறது.

செர்சியசு: (மிசைப் பலகையை விட்டு விலகி வந்து அவளைத் தன்னருகில் இழுத்துக் கொள்கிறான்.) என்னை நினைத்தால் எனக்கே வியப்பாயிருக்கிறது உலூக்கா! சிலிவிநித்துசா வெற்றி மறவன், செர்சியசு. உயர்நிலைக் காதலின் முன்னோடி, செர்சியசு. இன்னும் எத்தனை எத்தனை செர்சியசுகள் என்னுள்ளே ஒளிந்துகொண்டிருக்கின்றனர்...! இந்த அழகான என் உருவத்துக்குள்ளிருந்து மெல்லத் தலைநீட்டிக் கொண்டும் உள்ளிழுத்துக் கொண்டும் இருக்கும் அவர்கள் எல்லாம் இப்பொழுது என்னைப் பார்த்தால் என்ன சொல்வார்கள்! (அவள் கையை விட்டுவிட்டு இடையினை வளைத்தணைத்துக் கொள்கிறான்) என் உருவம் அழகாயிருக்கிறது என்று நீ நினைக்கிறாயா உலூக்கா?

உலூக்கா: என்னை விடுங்கள்.. ஐயோ, வெட்கக்கேடு! அவள் அவன் பிடியிலிருந்து விடுபடத் துடிக்கிறாள் அவன் பிடியை இறுக்குகின்றான்) என்னை விடமாட்டீர்கள் ?

செர்சியசு: (அவள் விழிகளை நேராக ஊடுருவ நோக்குகிறான்) முடியாது.

உலூக்கா: அப்படியானால் கொஞ்சம்தள்ளி நில்லுங்கள். யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்!... உங்களுக்குப் பொது அறிவே கிடையாதா?

செர்சியசு: ஆ! இது சரி (அவளைக் குதிரைக் கொட்டடி வாயிலுக்கு அழைத்துச் செல்கிறான். வீட்டிலிருந்து பார்த்தால் அவர்கள் நிற்பது தெரியாது.) (–தொடரும்)

நீங்கள் சுவைத்தீர்களா?

துரை. மாணிக்கம் எழுதிய

கொய்யாக்கனி

(விலை: 2-25.)

தென்மொழி உறுப்பினர்கட்கு மட்டும் விலை 1-50.

அஞ்சல் செலவு தனி.

வேறென்ன சொல்வது?

"உணவு நெருக்கடி பெருமளவுக்குத் தணிந்துவிட்டது."
– அமைச்சர் சுப்ரமணியம்

"வஞ்சனை செய்வாரடி – கிளியே வாய்சொல்லில் வீரரடி"!

தென்னாட்டில் அரிசிப் பற்றாக் குறைக்குத் தீர்வு காண உதவும் பொருட்டு திரு. இலால்பகதூர் சாத்திரி, தாம் அரிசி உணவு உண்பதை நிறுத்திக்கொண்டார்.
– செய்தி.

"தென்னாட்டில் அரிசிப் பஞ்சமே இனி இருக்காது" என்று திடமாக நம்பலாம்.

பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர்கள் தமக்குரிய வீடுதிகளை வாடகைக்கு விடுகின்றனர்.
– செய்தி.

அந்தப் பணத்தைக் கொண்டு தானே தங்களுக்குத் தேவையான மூலைகளை வாங்குகின்றனர்!

இந்தி பேசாத பகுதியினர் மீது இந்தித் திணிப்பு என்பதே கிடையாது.
– திரு நந்தா

கற்றுக் கொடுக்கின்றோம், அவ்வளவுதான்.

காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த நெல் மூட்டைகள் அடங்கிய சரக்குந்து, காவலை மீறி ஓட்டிச் செல்லப்பட்டது.
– கோவைச் செய்தி

அவ்வளவு துணிவு அமைச்சர்களுக்கல்லவா இருக்கும்...!

எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு அரசினரைக் குறை கூற வேண்டா"
பேராயக் கட்சியினருக்குத் திரு சாத்திரி அறிவுரை

"எங்களுடன் சேர்ந்து கொண்டு எதிர்க்கட்சியைக் குறை கூறுங்கள்...!"

தமிழகத்தில் பொது நிகழ்ச்சிகளில் ஒரு நாளில் வீணாகும் பூமாலைகள் ஓரிலக்கம் இருக்கும்.
– திரு நெ. து. சுந்தரவடிவேலு

"அவற்றுள் என்னுடை வீணாகுபவை குறைந்தது 10 இருக்கும்."

சமற்கிருதம் தமிழகப் பள்ளிகளில் விருப்பப் பாடமாக வைக்கப்பெறும்
– திரு பக்தவச்சலம்

இராசாசியைச் சரிகட்ட இது போதாதா?

அமைச்சர்களின் **தனி நட வடிக்கைகளை** ஒற்றர்கள் கண் காணித்தல் கூடாது...!

– தில்லி அமைச்சர் இராம்சு பாக்சிங்.

அய்யய்ய! அவை அருவருப்பாக இருக்குமே...!

ஒவ்வொரு குலத்தினரும் (சாதி) அவரவர் குல முனனேற்றத்துக்குத் தனித்தனி ஏற்பாடுகள் செய்து கொள்வதில் தவறில்லை!

– இராசாசி.

'மன'ந் திறந்த பேச்சு!

பல்வேறு அரசியல், சமய, மொழிப் பிரிவினைச் சார்ந்த பெரி யார்களை அரசினர் அழைத்து அரசி னர் மாளிகையில் பொங்கல் விருந் தளித்து, ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க முயலலாம்.

– தினமணி பொங்கல் இதழில் திரு. ம. பொ. சிவஞானம்

இழவு வீட்டில் நல்ல 'ஒப்பாரி'

புனிதமான குடியரசுநாளைத் **துயர** நாளாகக் கொண்டாடுவது தி. மு. கழகத்தின் இரண்டக (துரோக) மனப்பான்மையைக் குறிக்கும்.

– திரு. பக்தவத்சலம்

புனிதமா...! அப்படியென்றால்...?

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி பிற போக்கானது. **தமிழர்கள்** வெட் கப்பட வேண்டியதாகும்.

– திரு. பக்தவச்சலம் உளறல்

ஆம்! அவர்கள்தாம் வெட்கப்பட வேண்டும்? நீங்கள் ஏன் வெட்கப் படவேண்டும்...!

தி. மு. கவின் இந்தி எதிர்ப்புக் கறுப்புக்கொடி அடையாளத் திட் டத்தை இராசாசி ஒப்பவில்லை.

– செய்தி

அவர் 'கண்ணடி'க்கு அக்கொடி யின் நிறம் என்னவென்று தெரி யாதே! அதனாலிருக்கலாம்!

"கணக்கில் வராத திருட்டுப் பணம் உருபா 34 கோடி இருக் கும்!"

" – சதாசார் சமிதி"யின் கணக்கீடு

இதில் ஒன்றும் திருட்டுத்தனம் இருக்காதே..!

"முந்திய ஆண்டுகளைவிட இவ் வாண்டில் அரிசி 13 விழுக்காடு மிகுதியாக விளைந்துங்கூட அஃது எங்குப் போயிற்றென்று தெரிய வில்லையே!

– திரு பாட்டீல்

அமைச்சர்களுக்கென வைக்கப் பெற்ற விருந்துகளில் போட்ட இலைகளில் எஞ்சிக் கிடக்கலாம்...!

அமைச்சர்கள் மீது சுமத்தப்படும் ஊழற் குற்றங்களைத் தலைமை அமைச்சரோ அல்லது பேராயக் கட்சினரோதாம் ஆராய வேண்டும். காவல் துறையினர் ஆராய்தல் கூடாது.

– பேராயக் கட்சி மாநாட்டு வேண்டுகோள்.

ஏனென்றால் அவர்கள் மக்களுக்குக் காவலே தவிர, எங்களுக்கு அல்லவே...!

எந்த மொழியின் முதன்மையை விடவும் நாட்டின் ஒற்றுமையே பெரிது.

– திரு சாக்களா.

'இந்தி' மொழியை விடவா?

அரசினரின் உணவு வாணிகப் பெருங்குழு உழவர்களின் "உண்மை நண்பன்" ஆகும்.

– திரு. சி. சுப்பிரமணியம்.

நாங்களெல்லாரும் நண்பராக இல்லையா.. அப்படி..!

சமற்கிருதத்தை இறந்த மொழியாகக் கருத முடியாது.

– திரு. சி. பி இராமசாமி

நாங்கள் இருக்கையில் அது மட்டும் எப்படி இறந்துவிடும்..?

திருபக்தவத்சலம் ஆட்சிக்காலத்தில் சமற்கிருதம் போதிய கவனம் பெறவில்லையானால், பின்னர் அம் மொழிக்கு வாய்ப்பே இராது."

– வடமொழி விழாவில் பேச்சு

இராமர் காலத்திற்குப் பின் இப்படிப்பட்டவர்(!) ஒருவர் எங்கட்குக் கிடைத்தது இப்பொழுது தானே!

இந்தி பேசாத பகுதிகளைத் திலும் இந்தி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவ, மாநில அரசுகட்கு நடுவணரசு முழுப் பண உதவி செய்யும்.

– செய்தி

தேவையானால் மாநில அமைச்சர் கட்கும் அத்தகைய உதவி (!) கிடைக்கும்!

பதுக்கல், கொள்ளை லாபத்தை ஒழிக்கத் தில்லி கடும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்!

– செய்தி

வெடிக்காத ஆயிரம் வெடிகளில் இதுவும் ஒன்று..!

அரசினர் அலுவலகங்களில் வைக்கப் பெற்றிருக்கும் கடவுளர் படங்களை நீக்குவதற்கான இளர்ச் சியைத் தன்மான இயக்கம் நடத்தும்.

– செய்தி

மலத்தை அப்புறப்படுத்துங்கள்! அதன்மேல் உள்ள ஈக்கள் தாமாகப் பறந்து விடும்!

பண்டாரகர் 'பட்டம்' பெற்றமைக் காகப் பேராசிரியர் இலக்குவனுர்க் குப் பாராட்டு விழாக்கள் நடை. பெற்றன.

– செய்தி

ஏதேது..! அவரை அதற்குமேல் பறக்கவிடமாட்டார்கள் போலிருக் கிறதே..!

இந்தியைத் தென்னுட்டில் மெது வாகப் பரப்பல் வேண்டும்.

– குடியரசு தலைவர்

எங்கள் 'முன்னேர்' வடமொழி யைப் பரப்பியது போல்!

உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை தமிழகம் பற்றுக் குறைப் பகுதியே! அரசினர் தரும் கணக்குகள் தவருகும்..!

– தமிழக வாணிகக் கழகத் தலைவர்.

கணக்கா? அரசியல் அகர முதலி யில் அதற்குக் கண்துடைப் பென் றல்லவா பொருள்!

என்ன நேரிடினும் இந்தியா அமைதிக் கொள்கையைக் கை விடாது.

– இந்திய முதலமைச்சர்.

தீமையை எதிர்க்கப் படை வலியைப் பயன்படுத்தலாம். இஃது அறநூல்கட் குடன்பாடே.

– இந்திய குடியரசுத் தலைவர்.
– ஒரேநாட் செய்திகள்.

இதுதான் இந்திய "சாணக்கியம்"

தங்கக் கட்டுப்பாட்டால் மக்க ளின் பொன்னவல் தணிந்து விட்டது.

– அரசினர் வட்டாரத்தில் பெருமிதம்.

ஆனல் பொன்னுக்குத் தணிந்த ஆவல், பெண்ணுக்கும் மண் ணுக்கும் தாவியுள்ளதே!

ஆட்சி மொழி காரணமாகத் தமிழர்க்குத் தீங்கு ஏற்படுவதை நான் பார்த்துக் கொண்டிரேன்!"

– திரு. பக்தவச்சலம்

அதனல்தான் அடிக்கடி 'தில்லி'க் குப் போய்விடுகின்றேன்.

"தேசிய விடுதலை மறவர்கள்" "கதர்" ஆடையை மறந்துவிட்டனரே என்று புதுவை ஆளுநர் திரு. சீலம் வருத்தம்!

ஏனய்யா கதறுகிறீர்?

ஆங்கில எதிர்ப்பு மாநாடு திரு. ம. பொ. சிவஞானம் நடத்தினர்.
– செய்தி

நல்ல அரசியல் கோமாளி...!

நீங்கள் உண்ணும் பொருளில் 10 விழுக்காடுதானும் நீங்கள் உண்ணுவதாக நினைத்துக் கொண்டிருக்கும் பண்டமாக இராது"
– கலப்படம்பற்றி, திரு நந்தா

அந்த 90 விழுக்காட்டையுந்தாம் நீங்கள் உண்டுவிடுகின்றீர்களே!

அரசினர் ஊழியர்க்குப் புது விதிகள். கீழுள்ளவர்களின் தவற்றுக்கு மேலானர்களே பொறுப்பாவார்.
– அரசினரின் புதிய ஒழுங்கு விதிகள்

காமராசும், சாத்திரியும் இதற்கு விதிவிலக்கு!

தமிழகத்தில்தான் இந்தியாவின் பண்டை நாகரிகம் தன் உண்மை வடிவில் இன்னும் உள்ளது.
– வங்க இதழாசிரியர் சென்குப்தா

அதனால்தானே அங்கேயும் தேசியத்தை நுழைக்கிறோம்...!

வடமொழி இலக்கிய ஆராய்ச்சி மிகத் தேவை.
– திரு. இலால் பகதூர் சாத்திரி

பினைப் புணர்ச்சி...!

பேராயக் கட்சியில், வகுப்பு வேறுபாடு கொள்பவர்கள், நாணயக் குறைவானவர்கள் இவர்களைத் தேர்தலுக்கு நிறுத்தல் கூடாது.
– துர்காபூர் மாநாட்டில் தீர்மானம்

அப்படியானால் எல்லாத் தொகுதிகளும் காலியாகக் கிடக்குமே...!

நன்றி.

திரு. நடராசன், (ஆயங்குடிப்பள்ளம் சீர்காழி வட்டம்) அவர்கள் தென்மொழியின் வளர்ச்சி கருதி உருபா 10 நன்கொடையளித்தார். அவரின் தண்டமிழ்ப் பற்றை வாழ்த்தி, அவர்தம் ஈகை உள்ளத்திற்கு நன்றி சாற்றுகின்றோம்.

(–ஆசிரியர்.)